# பழங்காசு

சிறப்பாசிரியர் :
வரலாற்று வித்தகர் ம. இராசசேகர தங்கமணி

திருவள்ளுவர் ஆண்டு 2032 கடகம் (ஆடி) திங்கள் (ஜூலை 2001)
பேழை : 1 (இதழ் எண் : 3) காசு : 3



காணாமல் போன கல்வெட்டின்
பழைய தோற்றம்





தமிழகத்தில் கிடைத்த
அகஸ்டஸ் சீசரின் (கி.மு. 20)
பித்தளைக் காசு

ஆசிரியர்
மரு. சுசீலாதேவி சீனிவாசன்

© 0431 - 442043

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

# பழங்காசு

நாணயவியல், வரலாற்றியல், காலாண்டிதழ்

1/385, சீதக்காதி தெரு, காட்டூர் (தெற்கு), திருச்சிராப்பள்ளி – 620 019.

*சிறப்பாசிரியர்:* வரலாற்று வித்தகர் கருவூர் **ம. இராசசேகர தங்கமணி** M.A.,

*ஆசிரியர் :* மரு. **சுசீலாதேவி சீனிவாசன்**

## அறிவுரைஞர்கள்

கலைமாமணி பேரா. **சாலமன் பாப்பையா**, மதுரை.

முனைவர் மரு. **இரா. கலைக்கோவன்**,
நிறுவனர், டாக்டர். *மா. இராசமாணிக்கனார்* வரலாற்று ஆய்வு மையம், திருச்சிராப்பள்ளி.

முனைவர் **பே.க. வேலாயுதம்**,
நிறுவனர், 'தமிழ்க்கோட்டம்', புதுக்கோட்டை.

பேரா. **க.ஆ. திருஞானசம்பந்தம்**,
நிறுவனர், கொங்கு நாணயவியல் ஆய்வுமையம், ஈரோடு.

ஸ்தபதி **வே. இராமன்**,
அரசு தொல்லியல் துறை, திருச்சிராப்பள்ளி.

திரு. **ப. சீனிவாசன்**,
நிறுவனர், திருச்சிராப்பள்ளி நாணயவியல் கழகம்

சட்ட ஆலோசகர் : வழக்கறிஞர் **ம.தி. சோழர்**, திருச்சிராப்பள்ளி.

## நண்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்

பழங்காசினைச் சீராட்டி வளர்த்தெடுக்க, தாயகத்தின் பெருமைதனைப் போற்றும் உங்களையும் இப்புனிதப் பயணத்தில் எங்களோடு இணைத்துக் கொள்ள விழைகிறோம்.

| | |
|---|---|
| ஓராண்டு நன்கொடை உருபா | 50/- |
| ஈராண்டு நன்கொடை உருபா | 100/- |
| வாழ்நாள் நன்கொடை உருபா | 500/- |
| புரவலர் நன்கொடை உருபா | 1000/- |

*கேட்பு வரைவோலை (D.D.) பழங்காசு பெயரிலும், பணவிடை (M.O.) மட்டும் சுசீலாதேவி சீனிவாசன் பெயரிலும் அனுப்ப வேண்டுகிறோம்.*

*பழங்காசு வெளிவர, தொடர்ந்து தொய்வின்றி பணியாற்ற உங்களின் பங்களிப்புகளை விரைந்து அளித்திடுவீர்! மகிழ்ந்து அளித்திடுவீர்!*

*இது ஓர் இலாப நோக்கு இதழல்ல. நாட்டுப்பற்றின் வெளிப்பாடு.*

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

# பழங்காசு

நாணயவியல், வரலாற்றியல் காலாண்டிதழ்

பேழை : 1 கடகம் (ஆடி) தி.பி. 2032 ஜூலை 2001 காசு : 3

## வாழ்க..! வாழ்க..!!

நண்பர்களுக்குத் தோழமை வணக்கங்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் வரலாற்றுச் சிறப்புமிக்கச் சிராப்பள்ளி நகரில், சங்ககாலச் சோழரின் தலைநகராம் உறையூரில் வரலாற்றார்வலர்கள் பலர்கூடி தமிழகத் தொல்லியல் கழகத்தை நிறுவினர். பிறந்த குழவி கவிழ்ந்து, தவழ்ந்து, நடந்து இன்று பன்னிரண்டு அகவை வளர்ச்சி கண்டு நிற்கிறது.

இக்கழகம், எதிர்வரும் ஜூலை 21, 22 (சனி, ஞாயிறு) ஆகிய நாட்களில் தமிழ்வளர்த்தக் கூடல் நகரில் பதினொன்றாம் ஆண்டுக் கருத்தரங்கத்தையும், ஆவணம் (12–ஆம்) இதழ்வெளியீட்டு விழாவையும் நடத்துகிறது. இத்தொல்லியல் கழகத்தை துவக்கி, வழிநடத்திச் சென்ற அறிஞர்களுள் சிலர் இன்று நம்மிடையே இல்லை. அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் அதே வேளையில் தொடர்ந்து பொறுப்பேற்று வழிநடத்திச் செல்லும் அறிஞர் பெருமக்களை பழங்காசு மனமுவந்து பாராட்டுகிறது.

மணிவிழா காணும் அறிஞர் எ. சுப்பராயலு அவர்களையும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறது.

வரலாற்றார்வம் ஒரு மக்களியக்கமாக மலரத் தொடர்ந்து பாடுபட்டு வரும் தொல்லியல் கழகம், எம்போன்ற பிறதுறைச் சார்ந்தோரையும் அரவணைத்துச் செல்லும் அன்னையாக விளங்கி பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறோம்.

அன்புடன்

15.7.2001
திருச்சிராப்பள்ளி–19.

சுசீலாதேவி சீனிவாசன்



விடுதலைப் போராளி கேப்டன் லட்சுமி அவர்களிடம் பழங்காசு இதழ்களைப் பற்றி விவரிப்பவர் அறிவுரைஞர் ப. சீனிவாசன் அவர்கள்.

நாள் : 4.7.2001
இடம் : சென்னை.



# சிற்றுருண்டைக் காசுகள்
## (GLOBULE COINS)



ஆசான் - புலவர். ஐ. இராமசாமி

### பழங்காசுகள்

பழம்பொருள், பழந்தமிழ், பழஞ்சலாகை அச்சு என்பன போலப் பழமையான காசுகள் எனும் பொருள் தரும் இத்தொடர் கேட்பதற்கு மிகவும் இனிமையாக உள்ளது அல்லவா? பழங்காசுகள், 'பழங்காசு' எனும் பெயர் பெற்ற மலரில் விளக்கப்படுகின்றனவென்றால், அத்தகு பழங்காசுகள், புகழும் பெருமையும் பெறுகின்றனவெனில் மிகையன்று. எங்கேயோ, எப்போதோ தோன்றி மறைந்துபோன இவை மீண்டும் பழங்காசு மலரில் அல்லவா ஒளிவிடுகின்றன.

### காசு

முன்காலத்தில் மேலைநாட்டிலிருந்த 'லிடியா' எனும் பகுதியில் முதன்முதலாகக் 'காசு' என்பதொன்று தோன்றியதென்பர். பொன், வெள்ளி அல்லது இரண்டும் கலந்த சிற்றுருண்டை போலும் உலோகத் துண்டுகளில், அரசுச் சின்னத்துடன் சுமார் கி.மு. 7ஆம் நூற்றாண்டுவாக்கில் புழக்கத்துக்கு வந்தனவென்பர். பண்டமாற்றுக் காலம் முடிவடைகின்றது; இந்த முறையைக் கிரேக்க பாபிலோனிய, பொனீசிய மக்களும் பின்பற்றினர் என்பர். பல ஆங்கில வரலாற்று நூல்களில் மேற்கண்ட சிற்றுருண்டை போன்ற காசுகளின் படங்கள் வெகு காலத்துக்கு முன்பே வெளியிடப்பட்டன. ஆனால் நம் தமிழ்நாட்டில் கிடைக்கப்பெறும் இவ்வகைக் காசுகளைப் பார்த்தால் கி.மு. 7-ஆம் நூற்றாண்டுக்கு முன்பே காசுவகை தோன்றியுள்ளதாகக் கருதலாம்.

### ஹீராடடஸ் கூற்று (கி.மு. 500) — டேலண்டுகள்

கிரேக்க நாட்டிலும், பாரசீகத்திலும், டேலண்டுகள் எனும் பெரியவகைக் காசுகள் இருந்ததை அறிஞர் ஹிராடடஸ் அவர்கள் குறிப்பிடுகின்றார். பாரசீக மன்னன் டேரியஸ் (Darius) என்பவர் தம் சிற்றரசர்களிடம் ஆயிரக்கணக்கான டேலண்டுகளை வரியாகப் பெற்றார் என்று தெரிகிறது. இவை பல லட்சம் பொன் மதிப்புடையனவாம்!

### பண்டைக்கால வாணிகம்

எகிப்தியரும், பாபிலோனியரும், கிரேக்கரும் கீழை நாடுகளுடன் மிகவும் தொன்மைக் காலத்திலிருந்தே வணிகம் மேற்கொண்டிருந்தனர்.

பெரிய செல்வ வாணிகர்கள் உலோகக் கட்டிகளையே செல்வமாகக் கருதித் திரட்டி வைத்திருந்தனர் போலும்! ஒருவேளை அத்தகு கட்டி உலோகங்களும் பண்டமாற்றுக்கு உட்பட்டனவாக இருந்தன எனலாம்.

கோவை, பேரூர், வெள்ளலூர் பகுதிகளில் 25 முதல் 50 கிராம் அளவும் அதற்கு மேலும் உள்ள வெண்கலக் கட்டிகள் ஆங்காங்கே கிடைத்து வருகின்றன. அவற்றிலும் ஏதோ சில அறிய முடியாத அடையாளங்கள் இல்லாமல் போகவில்லை. பேரூர் வட்டத்தில், எகிப்து நாட்டின் தொடர்பான மாவுக்கல் 'ஸ்பிங்ஸ்' (Sphinx) கள் கப்பல், கலங்கரை விளக்கம், ஓடங்கள், மேலைநாட்டு மக்களின் உருவங்கள் கீறிய பிராமி எழுத்தோடுகளும், மன்னர்தலை உருவவில்லை, பறவைமுகக் கடவுள் (அமண் அமன்ரா) என்ற சூரியக் கடவுள் உருவப் பொம்மைகளும் பிறவும், மேலைநாட்டாரின் வாணிகச் சான்றுகளாகக் கிடைத்துள்ளன. (தமிழ்நாடு, தொல்லியல்துறை, தொல்லியல் நோக்கில் தமிழகம் கருத்தரங்கு மலர், 1999 காண்க)

## வேம்பின் கனி போன்ற காசு



**2700 ஆண்டுகளுக்கு முற்பட்ட வேம்பின்கனி போன்ற வெண்பொற்காசு**

முன்புறம் – வில் (மேலே)
மீன் (நடுவில்)
புலி (கீழே)

உலோகம் : பொன்னுடன் சற்று வெள்ளி கலந்தது. வெண்பொற்காசு. (Electrum)

இது வெண்பொன் (Electrum) காசு. 4 கிராம் எடையுடையது. வில், மீன், புலி உருவம் காணப்படுவது. தெரியாமல் தேய்த்து விட்டதால் உருவங்கள் சற்றுத் தேய்ந்தன. இதில் மேலே வில் உள்ளதால், சேரரின் தொன்மைக் காசு என்பதும், வேம்பின் கனி போன்ற ஒரு சிற்றுருண்டைக் காசு என்பதும் கேரள நாணயவியலார் உட்பட அனைவரும் ஒப்புக்கொண்ட ஒன்று. இது வாரணாசி இந்திய நாணயவியல் கழகத்தின் மலரில் வெளியிடப்பட்டது. சுருக்கமாக (J.N.S.I. 1992) இதன் கட்டுரை இரண்டு முறை அச்சாகியுள்ளது. மூவேந்தர் சின்னங்கள் பழங்காசுகளில் இருப்பது தொன்று தொட்ட வழக்கம். மூன்று சின்னங்களும் ஒன்றாக இருப்பதைப் பிற்காலச் சோழர் காசுகளிலும் காணலாம்.

பொன்காசு வேம்பின் கனிபோல இருந்ததைத் தமிழ் இலக்கியமான, 'குறுந்தொகையில்' அள்ளூர் நன்முல்லையார் பாடிய 'உள்ளார் கொல்லோ தோழி' எனத் தொடங்கும் 67ஆம் பாடலினால் அறிகின்றோம்.

கிளி, தன் சிவந்த அலகினிடையே, மஞ்சள் நிறமான வேம்பின் கனியைக் கௌவியிருப்பதானது, பொற்கொல்லன், தன் சிவந்த விரல்

நகங்களுக்கு இடையே வைத்துப் புதுநாணால் கோக்கும் மஞ்சள் நிறமான ஒரு காசுக்கு ஒப்பாக இருந்தது என்று அப்பாடல் கூறுகிறது. வேம்பின் கனிக்கு இங்கே பொற்காசு உவமையாயிருந்தது. இப்பாடலின் மற்ற செய்திகளை நூலில் கண்டு மகிழ்க!

காசு என்பது இடுப்பில் அணியும் துவாரம் உள்ள மணிகளையும் (Beads) குறிக்கும் என்றும் சிலர் கூறுவர். நூலுரையாசிரியர்கள் காசு என்பதைப் பழங்காசுகள் என்றே கூறினார்கள். அல்லாமல் வேம்பின் கனிபோன்ற சிற்றுருண்டைக் காசுகளும் ஆராய்ச்சியாளர்க்கு ஆங்காங்கே கிடைத்து வருகின்றமை கண்கூடு. வெள்ளனூரில், அண்மையில் இரண்டு காசுகள் இவ்வகையில் கிடைத்துள்ளன. ஒருபுறம் ஒரு காக்கை அல்லது பருந்துபோன்ற பறவையும் மறுபுறம் ஒரு பெண்ணரசியின் தலை உருவமும் உள்ளன. இது எகிப்து நாட்டின் சம்பந்தம் உடையது. வேறு இரண்டு காசுகளில், ஒன்றில் எழுத்தும் தலை உருவமும் உண்டு. மற்றொன்றில் அதே எழுத்தும் மற்றொரு புறம் காவ்கயப் படிவம் ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளன. இவை ஆராய்ச்சிகளுக்கு உட்பட்டவையாம். எட்டாம் நூற்றாண்டுவரை ஆட்சியில் இருந்த எகிப்தியரும் காசுகளை வெளியிட்டிருத்தல் கூடும்.

## யவனர் பொற்காசு (2500 ஆண்டுகளுக்கு முற்பட்டது)

எகிப்தியரும் கிரேக்கரும் யவனர் எனப்பட்டனர். இது உரையாசிரியர்களின் கூற்று. பின்னர் வந்த ரோமானியரையும் யவனரென்று கூறலாயினர். சிலப்பதிகாரம் இவர்களைச் சிறப்பிக்கின்றது. இந்த யவனர்கள் நம் தமிழகத்துடன் கொண்டிருந்த வணிகத் தொடர்புகளை, அகநானூறு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை, நெடுநல் வாடை எனும் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இவர் கலங்கள் தமிழகத்துக்குப் பொன்னொடு வந்து கறியொடு பெயர்ந்தன. (மிளகுப் பொதிகளை ஏற்றிச் சென்றனர்) கிரேக்கரான யவனரது குதிரை வாணிகம், பாவைவிளக்கு, ஓதிம விளக்குகளின் வாணிகம் சிறப்புடையன. கி.மு. 800க்குப் பின்பு எகிப்திய வாணிகம் சிறப்படையவில்லை. கிரேக்கரான யவனரே வாணிகம் தொடர்ந்தனர். கிரேக்க வாணிகம் கி.மு. 600 முதல் சங்ககாலம் வரை தொடர்ந்தது. யவனர் கொண்டிருந்த மிகுந்த தொடர்புகளையே இலக்கியம் கூறுகின்றது.

யவனர், சமார் 500 ஆண்டுகள் நம்மோடு தொடர்பு கொண்டிருந்தனர். தமிழர் மூலம் அவர்கள் பெரும்பயன்களைப் பெற்றிருந்தார்கள் எனலாம். தமிழகத்தில் ஆங்காங்கே யவனக் குடியிருப்புகள் இருந்தன. அரசப் பதவிகளிலும் இருந்துள்ளனர். ரோமானியர்கள் காசுகளை வெளியிட்டமை போல, இந்தப் பண்டைக்கால யவன கிரேக்கரும் காசுகளை வெளியிட்டனர் போலும்!

இவர்கள் பொன்னொடு வந்து கறியொடு பெயர்ந்தனர் என்றால், பொற்காசுகளைக் கொண்டுவந்தனர் என்றும் கொள்ளலாம். ரோமானியர் விட்டுச் சென்ற காசுகளையே நாம் ஆராய்ந்து வருகின்றோம். பண்டைக் கிரேக்கர் ஏராளமான காசுகளை வெளியிட்டனர் (*Story of Greece J.B. Burry - 1913*) இந்தப் பூரி என்பவர் தம் நூலில் நூற்றுக்கும் மேற்பட்ட உருண்டைக் காசுகளை வெளியிட்டுள்ளார். அவற்றில் ஆந்தை உருவம் உண்டு. புலி காணப்படவில்லை

## யவன கிரேக்கர் காசு (மேலே கூறப்பட்ட காசு)



இது வெண் பொற்காசு. 4 கிராம் எடையுள்ளது. ஒரு புறம் புலி நீண்டு நிற்கும். வில்லும் மீனும், கோடுகளாகத் தெரியும் (இந்தப் புலி போன்ற ஒன்று வேறு எந்த ஒரு சோழர் காசிலும் இல்லை) ஒருபுறம் ஆந்தை நிமிர்ந்து நிற்கும் அதனருகே 'M' (எம்) என்ற கிரேக்கர் முதலெழுத்து இருக்கும். கிரேக்க நாட்டில் ஆந்தையும் அவர்கள் தெய்வமான 'ஆதனே'வும் பொறித்த (கி.மு. 500) காசு வெளியிடப்பட்டுள்ளது. பிற்காலத்தில் மேல் நாட்டினர் பலர் இத்தகு காசுகளை வெளியிட்டுள்ளனர். மேலே குறித்த பொற்காசு கோவை நாணயவியல் கழகத்தில் பெறப்பட்டது. இது ஒரு மண்கட்டி போன்ற ஒன்றின் உள்ளே மறைந்திருந்தது. இது மிகவும் பழமையான சிற்றுருண்டை என்பதைப் பார்த்தாலே தெரியும். ஆந்தை பொறித்த காசு கிரேக்க யவனருடையதே! கிரேக்கரது ஆந்தையும், தமிழரசர் சின்னங்களும் கொண்ட இப்பொற்காசு, யவனர் தமிழ்நாட்டுடன் கொண்டிருந்த வாணிகம் மற்றும் நட்புரிமை காரணமாகவே கிரேக்க மன்னன் ஒருவனால் வெளியிடப்பட்டதாதல் கூடும். திருவாளர் நடன. காசிநாதன் அவர்கள் (முன்னாள் தமிழக அரசின் தொல்லியல் இயக்குநர்; தொல்லியல் ஆய்வு நிறுவனத் தலைவர்) இந்தக் கிரேக்கப் பொற்காசினை நாளிதழில் வெளியிட்டதோடு, தமது 'தடயம்' நூலிலும் வெளியிட்டுள்ளார். அவருக்கு என் நன்றி. இந்தப் பொற்காசு சிற்றுருண்டை வகையைச் சேர்ந்தது.

**2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட யவனகிரேக்க பொற்காசு**

| | | |
|---|---|---|
| முன்புறம் | – | வில் (மேலே)<br>புலி (நடுவில்)<br>மீன் (கீழே) |
| பின்புறம் | – | ஆந்தை (மேலே)<br>M கிரேக்க எழுத்து |
| உலோகம் | : | பொன்னுடன் சற்று வெள்ளி கலந்தது. வெண்பொற்காசு. (Electrum) |
| எடை | : | 4.1 கிராம் |

**நன்றி!** எமது பழங்காசை மக்களுக்கு அறிமுகம் செய்து செய்தி வெளியிட்ட **தமிழ்ப்பாவை**–மதுரை–16, **சுந்தரசுகன்**–தஞ்சாவூர் ஆகிய இதழ்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றி.

## காணம் — கட்டிப் பொன்காசு (கி.மு. 300)



கிடைத்தஇடம்: வெள்ளலூர்; எடை: 1.5 கிராம். தூய பொன்; மிகவும் சிறியது; இதன் உயரமே கொள்ளின் உயரம்; இதில் வில்லும், அம்பும், மீனும் நுட்பமாகப் பொறிக்கப்பெற்ற விந்தைதான் என்னே! சுருக்கமாக இதன் விவரம் வெளியாகியுள்ளது. (J.N.S.I. 1992) கொள்ளுக்குக் காணம் என்று பெயர். கொள்ளுபோல் இருந்ததால் சிறிய இதனைக் காணம் என்றனர். நூல்கள் பல இதனைக் குறிப்பிட்டுள்ளன. காணம் என்பதும் பொன் என்பதும் ஒன்றே என்பர்.

**2400 ஆண்டுகளுக்கு முற்பட்ட காணம் (கொள்ளு) எனப்படும் மிகச்சிறிய பொற்காசு**

தம்மையும் தம் நாட்டையும் பாடிவந்த புலவர்க்கு மன்னர் அளித்த காசு. இதில் மீன், வில், அம்பு ஆகியன காணப்படு–கின்றன

கிடைத்த இடம் : வெள்ளலூர்
எடை : 1.5 கிராம்

காணம் எனும் வேறு ஒரு வகையான பொற்காசு இருந்ததைப் பிற்காலக் கல்வெட்டுகளும் கூறும். கொங்கின் பகுதியை ஆண்ட கங்கரட்டியர் வட்டமான மிகச் சிறிய 400 மி.கிராம் எடையுள்ள சிறிய பொற்காசுகளை வெளியிட்டுள்ளார். அதில் கால், அரை, முக்கால் பணங்கள் உண்டு. வீரராயன் பணம் என்பர். இவை சிற்றுருண்டைகள் அல்ல.

சுமார் 30க்கும் மேற்பட்ட மிகவும் சிறிய உருண்டைக் காசுகளை (நுட்பமான குறியீடு உள்ளவை) படம் எடுத்து ஆராய இயலாத காரணத்தால், அவற்றை இலண்டன் நகரைச் சேர்ந்த வெள்ளையராகிய மைக்கேல் மிட்சினர் (MICHAEL MITCHINER) என்பவர்க்குத் தந்தேன். அவற்றை அவர் தாம் வெளியிட்ட ஆங்கில நூலில் (Coin Circulation in Southern Most India - P. 23, 52, 53) அழகாக வெளியிட்டுள்ளார். இவை பேரூர், வெள்ளலூர்ப் பக்கம் கிடைத்தவையாகும். அவருக்கு என் நன்றி உரியது. இவை சிற்றுருண்டைக் காசுகளே!

'மேலே கூறிய, 'காணம்' கட்டிப் பொன் சேரமன்னர் வெளியிட்டவை. தம்மையும் தமது நாட்டையும் பாடிவந்த பழந்தமிழ்ப் புலவர்க்குப் பத்து நூறாயிரம் பொன் கணக்கில் அன்புடன் அளித்த சேரமன்னரது பெருமை–களைப் பதிற்றுப்பத்தினுள், ஒவ்வொரு பதிகத்திலும் கண்டு தெளிக. "பொன் பத்து நூறாயிரம் பெறப்பண்டு பட்டினப்பாலை கொண்டதும்" எனும் பாடலடிகள் காணம் எனும் பொன்னையே குறிப்பிடும்.

பழங்காசு இயலில் நெடுநாளைய ஆராய்ச்சியும் அநுபவமும், காசு இயல்கலைக்குத் தன் வாழ்நாளையே ஆளாக்கிய என் அரிய நண்பர், ஈரோடு தமிழ்ப் பேராசிரியர் திருவாளர் ஆ. திருஞானசம்பந்தம் அவர்கள் ('பழங்காசு' இதழின் அறிவுரைஞர்) சிற்றுருண்டைக் காசுகளை ஆராய்ந்து அவ்வப்போது அரிய செய்திகளை வெளியிட்டு வருகின்றார்கள். மிகவும் பழைய தொன்மையான பழங்காசுகள் எப்போது எங்கே கிடைக்கும்? முனைப்புடன் காலம் வரும்வரை காத்திருப்போமாக!



# தமிழகத்தில் கிடைத்த அகஸ்டஸ் சீஸரின் பித்தளை காசு



பேரா. க.ஆ. திருஞானசம்பந்தம் எம்.ஏ., எம்.ஃபில்.,

சங்க காலத்தில் தமிழகத்திற்கும், ரோமாபுரிக்கும் சிறந்த முறையில் வணிகத் தொடர்புகள் இருந்தன என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். தமிழகத்தின் உள்நாட்டு வணிகத்திற்குப் பெரும்பாலும் பண்டமாற்று முறையே கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. எனினும் அரிய சில பொருட்கள் தங்கக் காசுகள் கொடுத்து வாங்கப்பட்டன. தமிழ்நாட்டுக்கும், ரோமாபுரிக்கும் இருந்துவந்த வணிக உறவினால், மிகுந்த பலனடைந்தது தமிழகமே என்று கூறலாம். ரோமாபுரி பொற்காசுகளைக் கொடுத்து, அதற்குப் பதிலாக, மிளகு, முத்து போன்ற முக்கியப் பொருட்களை தமிழ்நாட்டிடமிருந்து பெற்றது. அயூரியஸ் (AUREUS), தினாரியஸ் (DENARIUS), செஸ்டர்டியஸ் (SESTERTIUS), பிரான்சஸ் (BRONZES), டுபாண்டியஸ் (DUPONDIUS), காப்பர் ஆஸ்ஸஸ் (COPPER AESSES) ஆகியன நாணயங்களாக ரோமாபுரியினரால் தமிழகத்தில் பயன்படுத்தப்பட்டன. தற்பொழுது அந்த ரோமாபுரி நாணயங்கள் புதையல்களாக நமக்குக் கிடைக்கின்றன.

தமிழ்நாட்டுப் பழம் புலவர்களான பரணர், தாயங்கண்ணனார் முதலியோர் தங்களின் பாடல்களில் (புறம் 343; அகம் 143) தமிழர்களுக்கும் யவனர்களுக்கும் இருந்த வணிகத் தொடர்பினைப் புகழ்கிறார்கள். மேலும் சேர மன்னர்களது முசிறி துறைமுகப்பட்டினம் பற்றியும் அதன் செல்வச் செழிப்பு பற்றியும், சேர மன்னர்களின் 'சுள்ளி' எனப்படும் பேரியாற்றில் வெண்ணுரைகள் சிதறும்படியாக, செலுத்தப்பட்டு வரும் யவனர்களின் அழகிய பெரிய கப்பல்கள் பொன்னை ஏற்றிவந்து இறக்கி விட்டு, அதற்குப் பதிலாக மிளகினை ஏற்றிக் கொண்டு ரோமாபுரிக்குத் திரும்புவது பற்றியும் அகம் 149-ஆம் பாடல் வருணிக்கிறது. பரணரின் புறம் 343-ஆம் பாடல் வீடுகளில் வாங்கப்படும் மிளகு மூட்டைகள் முசிறி துறைமுகத்தில் சிறு படகுகளில் ஏற்றப்பட்டுக் கரைக்குச் சிறிது தூரத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் கப்பல்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன என்றும், அம்மிளகு மூட்டைகள் பொன்னிற்குப் பதிலாக (யவனர்களுக்கு) விற்கப்பட்டன என்றும் தெரிவிக்கிறது. தமிழகத்தில் ஆங்காங்கே கிடைத்து வரும் ரோமானியக்காசுப் புதையல்கள், இந்த இலக்கியக் கூற்றினை மெய்ப்பிப்பவைகளாக உள்ளன.

பேரூர் பகுதியில் அரிதான ரோமானிய டுபாண்டியஸ் காசு ஒன்று இக்கட்டுரையாசிரியருக்கு அண்மையில் கிடைத்தது. இக்காசு கி.மு. முதல் நூற்றாண்டில் ரோமாபுரியை ஆட்சிசெய்த அகஸ்டஸ் சீஸரால் (கி.மு. 27–கி.பி. 14) வெளியிடப்பட்டதாகும்.

ரோமாபுரி பேரரசரின் பித்தளை டுபாண்டியஸ் காசு பற்றிய விபரம்:



**இது கி.மு. 20-இல் அகஸ்டஸ் சீஸர் வெளியிட்ட புதுமையான அரசியல் தொடர்புடைய காசு**

| | |
|---|---|
| உலோகம் | : பித்தளை |
| வடிவம் | : வட்டம் |
| அளவு | : 2.5 செ.மீ. விட்டம் |
| எடை | : 7.3 கிராம் |
| முகப்பு | : டிரைபுனிசியா பொடஸ்டாஸ் *(TRIBUNICIA POTESTAS)* |
| புறம் | : *S (ENATUS – எனாடஸ்)* *C (CONSULTO – கான்சல்டோ)* |



---

**புதுக்கோட்டை சமஸ்தான ஆவணங்கள் –37– ஆம் பக்கத் தொடர்ச்சி**

பல கெடுபிடிகள் நடந்தன. 1875 நவம்பரில் பத்திரப் பதிவு முறை அமலானது. 1876 – 1878 காலத்தில் பெரும் வறட்சியும், பஞ்சமும் ஏற்பட்டன. கஞ்சித் தொட்டி திறக்கப்பட்டன. ஆண் வாரிசு இல்லை. எனவே மகன் பிரகதம்பாள் அம்மணியின் மகன் (மன்னருக்குப் பேரன்) மார்த்தாண்ட பைரவப் பல்லவராயரை வாரிசு ஆக்கினர். பின்னர் பல்லவராயர் என்ற பட்டம் எடுபட்டு, தொண்டைமான் என்று அழைத்தனர். இவரது உருவச் சிலை இன்று பொது அலுவலக வளாக முகப்பில் வைக்கப்பட்டுள்ளது. இவர் காலத்து நிர்வாகச் சீர்கேட்டைச் சமாளிக்க, சேஷய்யா சாஸ்திரி நியமிக்கப்பட்டார். இவரின் சீர்திருத்தப் பணிகள் இன்னும் நிலைத்து விளங்குகின்றன.

மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் பகதூர் 11 வயதில் முடிசூட்டப்பட்டார். போஷகராக சேஷய்யா சாஸ்திரியே இருந்தார். இவர், கல்வி, விளையாட்டு, கலை, வேட்டையாடுவதில் அதிக ஈடுபாடு காட்டினார். ஆடம்பரப் பிரியராகத் திகழ்ந்தார். பல சுற்றுப்பயணங்களுக்கு நல்ல எண்ணத்தில் அனுப்பப்பட்டு, செப்பான உணர்வுகளுடன் திருப்பினார். சீமையில் சீர்கேடுகள் மலிந்தன. பயணங்களிலும், பகட்டு-களிலும் காலம் கடந்தது. ஆஸ்திரேலிய மாதுவைத் திருமணம் செய்து கொண்டார். வெளிநாட்டிலேயே தங்கினார், இறந்தார். இவரது காலத்தின் சீர்கேடுகளையும் தாண்டித் திவான் சேஷய்யா சாஸ்திரி புதுக்கோட்டை நகரை, மாதிரி நகராக, பல சீர்திருத்தங்களுடன் திகழச் செய்தார்.

பெயரளவில் மன்னர்களாக இருந்த இவ்விருவர் காலத்தில் தொண்டைமான் சீமையில் மக்களின் வாழ்க்கை நிலைக்கு மேற்கண்ட மூன்று ஆவணங்களும் சான்றாகும்.



# கரூரில் கிடைத்த முற்காலப் பாண்டியரின் வெள்ளி முத்திரைக் காசு



- நிசாதுதீன் அகமது, எம். வீரமணி

கி.மு. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த முற்காலப் பாண்டியரின் வெள்ளி முத்திரைக் காசைப் பற்றியது இவ்வாய்வுரை. இம்முத்திரைக்காசு, இக்கட்டுரை ஆசிரியர்களுள் ஒருவரும், தென்னகப் பண்பாட்டு ஆய்வுக் கழகத்தின் *(SOUTHERN CULTURAL RESEARCH ORGANISATION)* உறுப்பினருமான திரு. எம். வீரமணி அவர்களால் அமராவதி ஆற்றுப் படுகையில் சேகரிக்கப்பட்டதாகும்.

## காசு பற்றிய விபரம்

இக்காசின் இருபுறமும் முகப்பாகவே *(OBVERSE* ஆகவே*)* உள்ளது. புறம் *(REVERSE)* என்பது இக்காசில் இல்லை என்றே கூற வேண்டும்.

| | |
|---|---|
| **காசின் எடை** | **: 2.68 கிராம்** |
| **வடிவம்** | **: சதுரம்** |
| **பக்க அளவு** | **: 11 மி. மீட்டர்** |
| **தடிப்பு** | **: 2 மி. மீட்டர்** |



முன்புறம்



பின்புறம்

அக்காசில் காணப்படும் முத்திரை அடையாளங்கள் வருமாறு:



சூரியன் | அறுகிளைச்சின்னம் (அல்லது) சதாரச்சக்கரம் | ஸ்தூபி (அல்லது) தேர் | சுற்றுவேலி இடப்படாத மரம் (அல்லது) மரக்கிளை | திரிசூலமும் கோடரியும் சேர்ந்த வடிவம்

முத்திரைக் காசுகளை வகைப்படுதுதுவதிலும், அடையாளம் காண்பதிலும் சிக்கல்கள் இருந்தபோதிலும், குறிப்பிட்ட சில எளிய வரையறுப்புக் களைக் கொண்டு ஓரளவுக்கு அறுதியிடலாம். வகைப்படுத்தப் பட்ட ஒவ்வொரு நாணய வரிசையையும் குறிப்பிட்ட அரசுகளின் அரச மரபினரின் வெளியீடு என்பதை ஒருவாறு அனுமானிக்கலாம். விதிவிலக்காக சில நாணய வெளியீடுகள் வெவ்வேறு அக்கசாலை (MINT) களில் தயாரிக்கப்பட்டதாகவும் இருககலாம். துரதிருஷ்டவசமாக இக்காசுகளில் உள்ள அடையாளங்களின் சரியான பொருளை உறுதிப்படுத்திக்கூற இயலவில்லை. இன்றும்கூட மொகஞ்சோதாரோ ஹரப்பா முத்திரை எழுத்துக்கள் புரியாத புதிராக இருப்பது போன்று, இக்காசுகளின் குறியீடுகளும் புரியாத புதிராகவே உள்ளன.

இந்த வெள்ளி முத்திரைக் காசினை ஆராய்ந்து அடையாளப் படுத்தியவர் இந்திய நாணயவியல் கல்வி ஆய்வுக் கழகத்தின் முதுநிலை ஆராய்ச்சியாளர் திரு. அமிதேஷ்வர் ஜா (*Sri. AMITESHWAR JHA, SENIOR RESEARCH ASSOCIATES, INDIAN iNSTITUTE OF RESEARCH IN NUMISMATIC STUDIES, ANJANERY, NASHICK, NAHARASHTRA*) அவர்கள் ஆவார்கள். அவருக்கு எங்களின் நன்றிகள் பல.

இரண்டு வெவ்வேறு காசுகளை மிகவும் கவனத்தோடு ஒன்றின் மேல் ஒன்றாகப் பொருந்த இணைத்து உயர் மதிப்பு நாணயமாக உருவாக்கியதுபோல் இந்நாணயம் தோன்றுகிறது. 1990 மார்ச் திங்கள் இதழான 'யுனஸ்கோ கூரியரில்' தினமலர் நாளிதழின் ஆசிரியர் நாணயவியல் ஆய்வுச் செம்மல் திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எழுதிய 'பழங்கால இந்திய நாணயங்கள்' என்ற கட்டுரையில், சூரியன், சதாரச்சக்கரம், சுற்றுவேலி அமைக்கப்பட்ட மரம், பாம்பு, பறவை அடையாளங்களைக் கொண்ட பாண்டியர்களின் முத்திரைக் காசினை வெளியிட்டுள்ளார். அக்காசின் எடை 2.8 கிராம் என்றும் குறிப்பிடுகிறார்.2



பிற்காலத்தில் (1997–இல்) திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் வெளியிட்ட மிகச் சிறந்த படைப்பான, 'SANGAM AGE TAMIL COINS' என்ற ஆங்கில நூலில் (பக்கம் 14–இல்) பாண்டியரின் வெள்ளி முத்திரைக்காசு ஒன்றைக் குறிப்பிடுகிறார் (காசு எண் : 1 PLATE 1) (அருகிலுள்ள படம்) வெள்ளியாலான அச்சதுரக்காசு 11 மி.மீ. பக்க அளவும், 1.4 கிராம் எடையும் கொண்டதாகும்; 12 கதிர்களைக் கொண்ட சூரியன், அறுகிளைச் சின்னம் அல்லது சதாரச் சக்கரம், ஸ்தூபம் போன்ற அடையாளம், வேலியற்ற மரம், திரிசூலமும் கோடரியும் இணைந்த உருவம் ஆகியன அதில் முத்திரை இடப்பட்டுள்ளதாகவும் கூறுகிறார்.

இக்கருத்துக்கு உடன்பாடாகவே திரு அமிதேஸ்வர் ஜா அவர்களும், 'பொதுவாகப் பாண்டிய மன்னர்கள் வெளியிட்ட முத்திரைக் காசுகள் 1.3 கிராம் முதல் 1.6 கிராம் வரை எடை கொண்டதாக இருக்கின்றன' என்று குறிப்பிடுகிறார். ஆகவே 1.3 கிராம் எடையுள்ள இரண்டு காசுகள் ஒன்றாக இணைக்கப்பட்டு 2.6 கிராம் எடையுள்ள ஒரே காசாக ஆக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், காசின் மதிப்பை அல்லது எடையை உயர்த்துவதற் காக இவ்வாறு செய்யப்பட்டிருக்கலாம் என்றும் நாம் உறுதிப்படுத்தலாம்.

**- தமிழில் ப. சீனிவாசன்**

குறிப்பு : 1. P.L. GUPTA, Indias First Coinage MARG. Vol. SLV No. 4 - Page -18
2. Sri R. Krishnamoorthy, Ancient Indian Coins' Unesco Courier, March 1990, Page - 1.
3. Sri R. Krishnamoorthy 'Sangam Age Tamil Coins' - 1997. Page - 14.
4. Sri AMITESHWAR JHA - IIRNS Angnery Nashik - Letter dt. 30.11.95.



# அரிய சங்ககாலக் கொற்றவை காசு



பேரா. க.ஆ. திருஞானசம்பந்தம் எம்.ஏ., எம்.ஃபில்.,

கி.மு. 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3ஆம் நூற்றாண்டுவரை உள்ள காலம் சங்க காலம் எனத் தமிழ் அறிஞர்கள் கூறுவர்.

அண்மைக் கால நாணயவியல் ஆய்வு, சங்க காலத்தின் ஒளிவிளக்காக அமைகிறது! நாணயங்களின் இரு பக்கங்களிலும் உள்ள பலவகை வரை ஓவியங்கள், குறியீடுகள், வடிவங்கள் சங்ககாலச் சேரர், சோழர் , பாண்டியர் நாணயங்களை அறிய அரிய உதவிகளைத் தருகின்றன.

அண்மைக் காலத் தமிழகத்தில் கிடைத்த நாணயங்களில் பெரும்பாலான பல்வேறு ஆற்றங்கரைப் படுகைகளிலிருந்து மண்காசு எடுப்போரின் ஆளுமைப் பண்பினால் கிடைத்த அரிய வரலாற்றுக் களஞ்சியங்கள். பெண்ணை, பொன்னி, தாமிரபரணி, நொய்யல், அமராவதி, காவிரி முதலான ஆறுகளின் படுகையில் பணிபுரிந்த அரிப்புக்காரர்களிட-மிருந்து தமிழகத்தில் நாணயச் சேகரிப்பாளர் ஒரு சிலரின் அரிய முயற்சி-யால் ஆயிரமாயிரம் அரிய காசுகள் சேகரிக்கப் பட்டுள்ளமையை அறிய முடிகிறது. இக்காசுகளில் பல செம்புக் காசுகள்; சில வெள்ளிக் காசுகள்; விரல்விட்டு எண்ணத்தக்க பொற்காசுகளை நாணயவியலார் சேகரித்துள்ளனர்.

## ஓர் அரிய கொற்றவை / பாண்டிமாதேவி நாணயம் !

மதுரை நாணயவியலார் ஒருவரிடமிருந்து கட்டுரையாளர் ஓர் அரிய செம்புக் காசினை அண்மையில் பெற முடிந்தது; இச்செம்புக்காசு மதுரை வைகை ஆற்றுப் படுகையிலிருந்து அரிப்புக்காரர் ஒருவரிடமிருந்து (மண்காசு எடுப்போர்) பெறப்பட்டது.

இச்செம்புக்காசினைத் தேங்காய் எண்ணெயில் ஊறவைத்துப் பின்னர் தூய்மை செய்தபோது எழில்மிகு தெய்வநங்கை ஒருவரின் உருவத்தைக் காண முடிந்தது. அத்தேவதையின் கால் அருகில் இடப்பக்கம் நோக்கி அமர்ந்த நிலையில் சிம்மம் ஒன்று கிடப்பதைக் காணலாம். வட்டவடிவில் அமைந்த அச்சடிக்கப்பெற்ற ஒரு செம்புக் காசு எனவும் உணர முடிந்தது.

மெய்ப்புத் திருத்தம்: முனைவர் **கு. திருமாறன்**, முனைவர் **பே.க. வேலாயுதம்**
ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்கள், ஈ.வே.ரா. கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

## காசின் விளக்கம்



### முகப்பு

நாணயத்தின் மையப் பகுதியில் ஒரு பெண் உருவம் அவரின் இரு கைகளும் கீழ்நோக்கித் தொங்கிய நிலை. சிம்மம் இடப்பக்கம் நோக்கி அம்மங்கையை நோக்கும் நிலை; கிளி போன்ற ஒரு பறவை மங்கையின் வலது தோளின் மீது காணப்பெறும் மாலையின் மீது அமர்ந்த நிலை. கண்ணைக் கவர்ந்திடும் அக்கன்னியின் திருவுரு, கலைநயமிக்க சோழர்கால வெண்கல வார்ப்பு யட்சியின் உருவம்போல உள்ளது.

| கொற்றவை | | |
|---|---|---|
| கிடைத்த இடம் | : | மதுரை வைகை ஆற்றுப்படுகை |
| உலோகம் | : | செம்பு |
| வடிவம் | : | வட்டம் |
| அளவு | : | 9 மி.மீ. x 1.35 மி.மீ. |
| எடை | : | 1 கிராம். |



### புறம்

நாணயத்தின் பின்புறம் காணப்பெறும் உருவம் சங்ககாலப் பாண்டியரின் கோட்டுருவ மீன்போல் உள்ளது. முதன்முதலாக வட புலத்தில் கி.மு. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டு 'குனிந்தரின்' வெள்ளி நாணயத்தில்தான் கொற்றவை / இலக்குமியின் திருவுருவைக் காண இயலும். சிம்மம் / மான் உருவைத் தான் கொற்றவை தன் வாகனமாக ஏற்றுக்கொண்டிருக்கிறாள் என்பதைச் சிலப்பதிகாரமும் எடுத்துச்சொல்லும். சங்ககால இலக்கியத்தில் வெற்றியின் அதிதேவதையாகக் கொற்றவை போற்றப்படுகின்றார். தொன்மைக் காலப் போர்க்களங்களில் வெற்றி பெறுவதற்காக வீரர்கள் தாய்த் தெய்வத்தை வழிபடுவார்கள் என்றும் அத்தாய்த் தெய்வத்தைப் 'பழையோள்' 'கானமர் செல்வி', 'காடுகெழு செல்வி', 'கொற்றவை', 'பாய்கலைப் பாவை' என்றெல்லாம் வீரர்கள் போற்றி வழிபடுவார்கள் எனச் சங்க இலக்கியங்களும் பிற காவியங்களும் எடுத்தியம்பும்.

இவ்வரிய பாண்டியர் செம்புக் காசில் காணப்படும் தெய்வ உருவை வெற்றியின் அதிதேவதையைப் புறநானூறும், சிலப்பதிகாரமும் கொற்றவை எனப் போற்றும்.

### திரு. மோதி. எஸ். இராசகோபால் அவர்களுக்கு நன்றி!

இலக்கிய ஆர்வலரும், தமிழகத்தின் தலைசிறந்த இலக்கியவாதி த. ஜெயகாந்தன் அவர்களின் இனிய நண்பருமான திரு. **மோதி. எஸ். இராஜகோபால்** அவர்கள் பழங்காசு நூலகத்திற்குக் கிடைத்தற்கரிய தமிழ்க்கலைக் களஞ்சியம் (தி.சு. அவிநாசிலிங்கம் செடியார் – சி. சுப்ரமணியம், பெரியசாமித் தூரன் பதிப்பு – 1954) 4,5,6,7,8 ஆகிய ஐந்து தொகுதிகளை நன்கொடையாக வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு நன்றிகள் பல.

– ஆசிரியர், பழங்காசு.



# சேதுபதி காசுகள்



- நாக. கணேசன், எம்.ஏ., பி.எட்.,

வரலாற்றுக்கு வளமை சேர்க்கும் ஆவணங்களுள் நாணயங்களும் அடங்கும். நாணயங்களைக் கொண்டு அவை வழக்கிலிருந்த நாட்டின் அன்றைய செல்வ வளத்தையும், ஆட்சிப் பரப்பையும், ஆட்சி மொழியையும், அரசாண்ட மன்னனின் இயற்பெயரையும் சிறப்புப் பெயரையும், அம்மன்னன் அடிமை கொண்ட நாடுகளையும் அறிந்துகொள்ளும் வகையில் நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மன்னர்கள் தங்களது தன்னாட்சி வேட்கையின் வெளிப்பாடாகவும் ஆளுமையின் வெளிப்பாடாகவும், நட்புறவின் வெளிப்பாடாகவும் நாணயங்களை வெளியிடுவதுண்டு.

நாணயங்களைத் தங்கத்தாலும், வெள்ளியாலும், செம்பாலும் வெளியிட்டுள்ளனர். நாணயங்களை அச்சடிக்க நாட்டின் பல இடங்களில் "அக்கசாலைகள்" இருந்தன. அக்கசாலைகளே நாட்டின் கருவூலங்களாகவும் விளங்கியுள்ளன.

தங்கத்தால் வெளியிடப்பட்ட நாணயங்கள் "கட்டி வராகன், தொட்ட வராகன், சுத்தவராகன்" என்று பெயரிட்டு வழங்கப்பட்டன. சுத்தவராகன் என்பது ஐம்பத்திரண்டு அரிசி எடையுள்ளது. அரை வராகன் மதிப்புள்ள "வராகன் பர்தாப்" என்ற நாணயமும், பத்தில் ஒரு பங்கு வராகன் பர்தாப் மதிப்புள்ள "பணம்" என்ற நாணயமும் தங்கத்தால் வெளியிடப்பட்டன. ஆறில் ஒரு பங்கு பண மதிப்புள்ள "தார்" என்ற நாணயம் வெள்ளியாலும், மூன்றில் ஒரு பங்கு "தார்" மதிப்புள்ள "காசு" என்ற நாணயம் செம்பாலும் அக்கசாலைகளில் அச்சிடப்பட்டு விஜயநகரப் பேரரசிலும், அப்பேரரசுக்குட்பட்ட சிற்றரசுகளிலும் வழக்கத்திலிருந்துள்ளன. பேரரசால் வெளியிடப்பட்ட நாணயங்களே-யன்றித் தன்னாட்சி விரும்பிய சிற்றரசுகளும் நாணயங்களை வெளியிட்டுள்ளன. ஒரு சிற்றரசால் வெளியிடப்பட்ட நாணயங்கள் அச்சிற்றரசின் எல்லையைக் கடந்தவுடன் பயனற்றதாயின என்று "சீசர்பிரெடரிக்" என்ற வெளிநாட்டுப் பயணி கண்டு எழுதியுள்ளார்.

பேரரசன் வலிமைமிக்கவனாயின் சிற்றரசின் தன்னாட்சி முயற்சி அடக்கப்பட்டும், வலிமை குறைந்தவனாயின் தன்னாட்சி முயற்சி வலுப்பெற்றும் இருந்துள்ளன. பேரரசினை நிர்வகிக்கும் தலைநகர் தொலைவில் இருந்ததும் தன்னாட்சி முயற்சி வலுப்பெறக் காரணமானது.

விஜயநகரப் பேரரசுக்குட்பட்டிருந்தாலும், தஞ்சை சேவப்ப நாயக்கரும், மதுரை விசுவநாத நாயக்கரும், வீரப்ப நாயக்கரும், சொக்கநாத நாயக்கரும் தம் ஆட்சிப் பகுதியில் தங்களது பெயரில் நாணயங்களை வெளியிட்டுள்ளமை இதனையே உணர்த்துகிறது. மறவர் நாடு மதுரை நாயக்கர் ஆட்சிக்குட்பட்டிருந்தாலும் தளவாய் சேதுபதி, கிழவன் சேதுபதி முதலியோரின் தன்னாட்சி உணர்வே சேதுபதிகளையும் நாணயங்கள் வெளியிடச் செய்தது எனலாம். அச்சேதுபதி மன்னர்களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் சுழிப்பணம், வெள்ளிப் பணம், கழிப்பணம், மைலைப்பணம், வராகன், பொன் என்ற பெயர்களில் சேதுபதி சீமையில் வழக்கிலிருந்துள்ளன. சுழிப்பணம் என்பது பன்னிரண்டு பைசா மதிப்பும், வெள்ளிப் பணம் என்பது பதினைந்து பைசா மதிப்பும், கழிப்பணம் என்பது இருபத்தொரு பைசா மதிப்பும், வராகன் என்பது மூன்று ரூபாய் ஐம்பது பைசா மதிப்பும், கொண்டவையாகும். தளவாய், ஸ்ரீ உடையதேவன் முதலிய தங்களது சிறப்புப் பெயரையும், காளை உருவத்தையும், காளை மீது மனிதன் அமர்ந்த உருவத்தையும், கணேசன், முருகன் முதலிய தெய்வ உருவங்களையும் பொறித்துக் காசுகளைச் சேதுபதி மன்னர்கள் வெளியிட்டுள்ளனர்.

கி.பி. 1659–இல் திருமலை நாயக்கர் விஜயநகரப் பேரரசை மூன்றாம் வேங்கடனுக்குக் கப்பம் கட்டாமல் தன்னாட்சி பெற விரும்பியதைப் போன்று மறவர் நாட்டில் இரண்டாம் சடைக்கத் தேவன் என்ற "தளவாய் சேதுபதி" திருமலை நாயக்கருக்குக் கட்டுப்படாமலும், கப்பம் செலுத்தாமலும் தன்னாட்சி பெற முயற்சித்தான். அவனது தன்னாட்சி முயற்சியை அடக்க நினைத்த திருமலை நாயக்கருக்குத் தோல்வியே கிட்டியது.

"தன்னரசு நாடும் தனிக்கோட்டை ஆளுவனாம்
மதுரைப் படையென்றால் மதியான் மறவனுந்தான்
மறவர்கள் சற்றும் மதியார் வடுகனென்றால்"

என்ற இரண்டாம் சடைக்கத் தேவனைப் பற்றி அக்கால வரலாற்றுச் சம்பவங்களின் தொகுப்பாக விளங்கும் "இராமப்பய்யன் அம்மானை" கூறுவதினின்றும் அவனது விடுதலை வேட்கையையும், வீரத்தையும் உணரமுடியும். அச்சேதுபதி மன்னன் வெளியிட்ட நாணயங்களின் ஒரு பக்கத்தில் தமிழில் "தளவாய்" என்ற தனது சிறப்புப் பெயரையும், மறு பக்கத்தில் தோகை விரித்தாடும் மயிலையும் பொறித்து, தனது சுதந்திர தாகத்தைச் சொல்லாமலே உணர்த்தியுள்ளதைக் காணலாம்.

சமீபத்தில் கட்டுரையாளரால் இராமேசுவரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சேதுபதி காசுகளின் ஒரு பக்கத்தில் வட்ட வடிவப் புள்ளிகளுக்கிடையே "சேதுபதி" என்று தமிழில் எழுதப்பட்டும், மறு பக்கத்தில் காளையின் மீது மனித உருவம் பொறிக்கப்பட்டும் காணப்படுகிறது. இக்காசுகள் செம்பினால் வெளியிடப்பட்டுள்ளன. இக்காசுகளில் காணப்படும் காளைச் சின்னமானது விஜயநகர மன்னர்களால் மதுரை

மீனாட்சியம்மன் கோயில் கொடிக்கம்பத்திலும், திருப்பரங்குன்றம் சுப்பிரமணியர் கோயில் கொடிக்கம்பத்திலும் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். முதலாம் தேவராயர், கிருஷ்ணதேவராயர், முதலாம் திருமலைராயர், இரண்டாம் ஸ்ரீ ரங்கன் முதலிய விஜய நகர மன்னர்கள் வெளியிட்ட நாணயங் களிலும் இக்காளைச் சின்னத்தைப் பொறித்துள்ளனர். அப்பேரரசின் கீழ் ஆட்சி செய்த மதுரை வீரப்ப நாயக்கர், சொக்கநாத நாயக்கர், மங்கம்மாள் ஆகிய நாயக்க மன்னர்களும் பேரரசைப் போன்று தம்மாட்சிப் பகுதியில் தாங்கள் வெளியிட்ட நாணயங்களிலும் இக்காளைச் சின்னத்தைப் பொறித் துள்ளதாகக் காண முடிகிறது. காளைச் சின்னமானது விஜயநகர, மதுரை நாயக்கப் பேரரசுகளின் அரசச் சின்னமாகவே விளங்கியுள்ளது.

இரு நாடுகளுக்கிடையே நிலவிய நட்புறவை வெளிப்படுத்தும் வகையிலும் ஒரு நாட்டின்மீது கொண்டுள்ள ஆளுமையை வெளிப்படுத்தும் வகையிலும், பிறிதொரு நாட்டின் சின்னத்தையும், தமது நாணயங்களில் பொறித்து வெளியிடுவதுண்டு. கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் தான் வெளியிட்ட நாணயத்தில் ஒரு பக்கத்தில் "சுந்தரபாண்டியன்" என்று தமிழிலும், பாண்டியர் சின்னமான கயலையும், மறு பக்கத்தில் ஹொய்சளருக்குரிய "வராக" சின்னத்தையும் பொறித்து இரு நாட்டுச் சின்னங்களுக்கும் சம மதிப்பளித்து வெளியிட்டதன் மூலம் அவ்விரு நாடுகளுக்கிடையே நிலவிய நட்புறவை வெளிப்படுத்தினான்.

கி.பி. 10–ஆம் நூற்றாண்டில் முதலாம் இராசராசன் தன்னால் அடிமை கொள்ளப்பட்ட பாண்டிய, சேர நாடுகளில் வெளியிட்ட நாணயங்களில் தனது பெயரையும், வெற்றிப் பெருமிதத்துடன் நிற்கும் மனிதன் காலடியில் பாண்டியருக்குரிய "கயல்" சின்னத்தையும், சேரலாதன் நாணயத்தில் காணப்படுவதைப் போன்று சேரருக்குரிய "பாதா" உருவத்தையும் பொறித்து வெளியிட்டதன் மூலம் தனது ஆளுமையையும், ஆட்சிப் பரப்பையும் வெளிப்படுத்தினான்.

கி.பி. 14, 15–ஆம் நூற்றாண்டில் மதுரையைத் தம்மாட்சிக் கீழ் கொண்டு வந்த வாணாதிராயர்களில் சுந்தரத்தோளுடையான் மாவலிவாணாதிராயன் என்பவன் வெளியிட்ட காசுகளில் பாண்டியர் சின்னமான மீன் மீது வாணாதிராயரின் சின்னமான கருடன் அமர்ந்து இருப்பது போல் காட்டிப் பாண்டிய நாட்டினை வாணாதிராயர்கள், வெற்றி கொண்டமையையும் பாண்டியர் மீது வாணாதிராயர்கள் கொண்ட ஆளுமையையும் வெளிப்படுத்தினான்.

இவற்றைப் போன்றே தற்போது கிடைத்துள்ள சேதுபதி காசுகளிலும் மதுரை நாயக்கருக்குரிய காளைச் சின்னத்தைப் பொறித்து அதன்மீது மனிதன் அமர்ந்து செலுத்துவதைப்போல் காட்டி, நாயக்கர் ஆட்சியின் மீது சேதுபதிகள் கொண்டிருந்து ஆளுமையை வெளிப்படுத்தியிருக்கக்கூடும். கி.பி. 1698–இல் மதுரை நாயக்கப் பேரரசி மங்கம்மாளிடமிருந்து மதுரையைக்

கைப்பற்றி மறவர் நாட்டோடு இணைத்து ஆட்சி செய்தவனும், கப்பம் கட்டிய பாளையக்காரர்கள் என்ற நிலையை மாற்றித் தனிநாடு கண்டு முப்பத்தாறு ஆண்டுகள் தன்னாட்சி செலுத்தியவனுமாகிய "கிழவன் சேதுபதி"என்ற மறவர் நாட்டு மன்னனே இக்காசுகளை வெளியிட்டிருக்கக் கூடும். மேலும், இக்காசுகளில் காணப்படும் "சேதுபதி" என்பதன் எழுத்துக்களின் அமைதியை நோக்கும்போது, இக்காசுகள் கி.பி. 17–ஆம் நூற்றாண்டின் இறுதியில் வெளியிடப்பட்டிருக்கக்கூடும் என்று தெரிகிறது. கி.பி. 17–ஆம் நூற்றாண்டின் இறுதியில் தம்மையாண்ட மதுரை நாயக்கரையே வெற்றி கொண்டு மதுரையைக் கைப்பற்றி, மறவர் நாட்டோடு இணைத்து ஆட்சி செய்த பெருமை கொண்டவன் இக்கிழவன் சேதுபதி ஒருவனே–யாவான். அச்சமயத்திலேயே இக்காசுகளும் வெளியிடப்பட்டிருக்கலாம்.

கி.பி. 1674 முதல் 1710 வரை மறவர் நாட்டை ஆண்ட இக்கிழவன் சேதுபதியை மதுரை நாயக்கர்களால் வெற்றிகொள்ள முடியவில்லை. மேலும் மங்கம்மாளுக்குப்பின் கி.பி. 1706–இல் ஆட்சிக்கு வந்த விஜயரங்க சொக்கநாத நாயக்கரும் வலிமைகுன்றி ஆட்சியில் கவனமின்றியிருந்ததும் இக்கிழவன் சேதுபதிக்குச் சாதகமானது. கிழவன் சேதுபதிக்குப் பின் ஆட்சிக்கு வந்த ஸ்ரீ உடைய தேவன் என்ற விஜய ரகுநாத சேதுபதி காலத்திலும் மறவர் நாடு தன்னாட்சி பெற்றே விளங்கியது. அப்போது மதுரைப்பகுதி சேதுபதியின் ஆளுகையில் இல்லை. எனினும் விஜயநகரப் பேரரசில் மதுரை நாயக்கர்கள் காளைச் சின்னத்தைப் பொறித்துத் தம்மாட்சிப் பகுதியில் நாணயங்களை வெளியிட்டுச் சுயாட்சி உரிமையை வெளிப்படுத்தியதைப் போன்று, விஜய ரகுநாத சேதுபதியும் தம்மாட்சிப் பகுதியில் வெளியிட்ட நாணயத்தில் காளைச் சின்னத்தையும், ஸ்ரீ உடைய ..... என்ற தனது சிறப்புப் பெயரையும் பொறித்துத் தனது சுயாட்சி உணர்வை மட்டும் வெளிப்படுத்தியுள்ளதாகக் காணமுடிகிறது.

இவ்விரு சேதுபதிகளேயன்றிப் பிற சேதுபதிகள் காளைச் சின்னத்தைப் பொறித்து நாணயங்கள் வெளியிட்டதாகத் தெரியவில்லை. தளவாய்ச் சேதுபதி, கிழவன் சேதுபதி ஆகிய இருவரைத் தவிர பிற சேதுபதி மன்னர்கள் சுயாட்சி வேண்டி மதுரைப் பேரரசை எதிர்த்ததாகவோ தெரியவில்லை. மாறாகத் திருமலைச் சேதுபதி போன்றவர்கள் பேரரசுக்கு விசுவாசமாகவும், பேரரசுக்குக் கட்டுப்பட்டும் ஆட்சி நடத்தியுள்ளனர். இம்மன்னர்கள் கோயில்கள் கட்டுவதையும், மடங்கள் கட்டுவதையும் அவற்றிற்குத் தானங்கள் வழங்குவதையும் பெருமைபடச் செய்துள்ளனர். பேரரசோடு எதிர்ப்பின்றி ஆட்சி செய்ததோடு பக்தியில் சிறந்து விளங்கி நடைப்பயணமாய் இராமேஸ்வரம் வந்த பக்தர்களுக்குப் பாதுகாப்பளித்–துள்ளனர். கணேசன், முருகன் முதலிய தெய்வ உருவங்களுடன் "சேதுபதி" என்று எழுதப்பட்டு வழக்கிலிருந்த நாணயங்கள் இத்தகு மன்னர்கள் காலத்தில் வெளியிடப்பட்டிருக்கக்கூடும். கி.பி. 17–ஆம் நூற்றாண்டில்

தன்னிகரின்றி மறவர் நாட்டை ஆண்ட "கிழவன் சேதுபதி" வெளியிட்ட காசுகள் தற்போது இராமேஸ்வரம் தொல்பொருள் ஆய்வுத்துறை அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.



## கட்டுரைக்குத் துணைசெய்த நூல்கள்


1. மதுரை நாயக்கர் வரலாறு – அ.கி. பரந்தாமனார்
2. விஜய நகரப் பேரரசில் நிலைப்பெற்றிருந்த பொருளாதார வாழ்க்கை வரலாறு – தே.வே. மகாலிங்கம்
3. பாண்டியன் வரலாறு – டாக்டர் கே.வி. இராமன்
4. தென்னிந்திய வரலாறு – கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி
5. Ramanathapuram district Archaeological Guide - Dr. R. NAGASWAMY
6. The Hoysalas in Pandimandalam - N. SETHURAMAN
7. Tamil Coins - Dr. R. NAGASWAMY
8. Ramnad District - Manual
9. Ramanathapuram District Gazettier
10. பாண்டிய நாட்டில் வாணாதிராயர் – 1987 – திரு. வெ. வேதாசலம் தொ.நு.ப.பா. கழக வெளியீடு.
11. T.R. Mahalingam Journal or History Vol. XXIX - 1951.


### எமக்கு வந்த இதழ்கள்

**நாளைவிடியும்**– திருச்சி–14; **முங்காரி**–கோவை–7; **இறக்கை**–வாய்ப்பாடி; **செம்பருத்தி**–கோலாலம்பூர், மலேசியா; **முகம்**–சென்னை–78; **இப்படிக்கு**–திருச்சி–21; **பயணம்**–பெங்களூர்–53; **உங்கள் பாரதி**–புதுச்சேரி–4; **புதிய காற்று**–மதுரை–16; **குயில்தோப்பு**–மும்பை–64; **தமிழ்ப்பாவை**–மதுரை–16; **சுந்தரசுகன்**–தஞ்சாவூர்; **மள்ளர்மலர்**–கோவை–46; **குன்றத்தூர் முரசு**–சென்னை–69; **தமிழியம்**–செய்திமடல்–திருச்சுழி; **உறங்காத உண்மை**–சென்னை–4; **கண்ணியம்**–சென்னை–84; **குரோம்பேட்டைச்செய்திகள்**–சென்னை–44; **ஏழைதாசன்**–புதுக்கோட்டை–2.

### வரப்பெற்றோம் - 'குன்றத்தூர் 2000'

குன்றத்தூர் முரசு பதிப்பக வெளியீடாக வந்துள்ள **'குன்றத்தூர் - 2000'** (வரலாற்றுத் தகவல் தொகுப்பேடு) கிடைக்கப்பெற்றோம். குன்றத்தூரின் தொன்மை. தீபக்கல், மந்திரக்கல், திருஊரகப் பெருமாள் திருக்கோயில், குன்றத்தூரைச் சுற்றிப் பழமைமாறாத மருதுப் பெயர்கள், குன்றத்தூர் சுன்னத் பள்ளிவாசல் முதலிய பல கட்டுரைகள், நமது வரலாற்றார்வத்தை தூண்டும் விதமாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள் – 30 நன்கொடை உரூபா. 10/–

*முகவரி :* **குன்றத்தூர் முரசு பதிப்பகம், 20, முருகன் கோயில் சாலை, குன்றத்தூர், சென்னை–69.**

சென்ற
இதழ்த்
தொடர்ச்சி....

# இலங்கைத் தமிழரின் பண்டைய நாணயங்கள் காட்டும் முருக வழிபாடு



- கலாநிதி பரமு. புஷ்பரட்ணம், யாழ்ப்பாணம்



இதில் நந்தி சிவனையும், மயில் முருகனையும் குறித்து நிற்பதாகக் கொள்ளலாம். இவை பண்டைய இலக்கியங்களில் சிவனுக்கும் முருகனுக்கும் இடையிலான உறவு தொடர்பாக வரும் கதைகளை நினைவுபடுத்து-கின்றன. இதை உறுதிப்படுத்தும் வகையில் சில நாணயங்களில் மயிலுக்குப் பதிலாக நந்திக்கு முருகனின் உருவம் காணப்படுகிறது.



இக்கால மன்னர்கள் சேது வாசகத்துடன் முருகன் வழிபாட்டுடன் தொடர்புடைய "கந்" "ஆ" என்ற எழுத்துப் பொறித்த நாணயங்க-ளையும் வெளியிட்டுள்ளனர் என்பதற் கான சான்றுகள் அண்மையில் எமது கள ஆய்வின் போது கண்டுபிடிக்கப்-பட்டுள்ளன (2001:147: 159). இவை பெரும்பாலும் கி.பி. 14ஆம் நூற்றாண்டுக்குப் பின் வெளியிடப்பட்டவை என்பதை அவற்றின் எழுத்தமைதி கொண்டு கணிக்கமுடிகிறது. இதில் முதலாவது வகை நாணயங்களின் முன்புறத்தில் மேலே சந்திரனும், கீழே இடம் அல்லது வலப்புறம் பார்த்த நிலையில் மயிலும் காணப்படுகின்றன. அதன் வாயில் பாம்பும் சில நாணயங்களில் பல்லி போன்ற உருவமும் காணப்படு-கின்றன. நாணயத்தின் பின்புறத்தில் வலப்புறமாக வேல் சின்னமும் மத்தியில் „கந்" என்ற பெயரும் அதனுடன் இணைந்த நிலையில் மனிதனைக் குறிக்கும் காலப்பகுதியும் காணப்படுகின்றன.



இரண்டாவது வகை நாணயங்கள் முதலாவது வகை நாணயங்களைப் பெருமளவு ஒத்திருந்தாலும் மயிலின் வாயிலுள்ள பாம்பு தெளிவாக இருப்பதுடன், பின்புறத்தில் "கந்" என்ற பெயருக்குப் பதிலாக "ஆ" என்ற தனி எழுத்துமட்டும் காணப்படுகிறது.

இதில் "கந்" "ஆ" என்ற எழுத்துக்கள் மனித உருவத்தின் தலைப்பகுதியைக் குறிக்கின்றன. இதனால் இவ்வுருவங்களை அவற்றை வெளியிட்ட மன்னர்களின் அல்லது முருகனின் உருவங்களாக எடுத்துக் கொள்ளலாம். இவ்வகை அமைப்பில் நாணயங்கள் வெளியிடும் மரபு சமகாலத்தில் தமிழகத்தில் இருந்ததற்குப் பல சான்றுகள் உண்டு (ஆறுமுக சீதாராமன் : 1996:89 97).

முருகனோடு தொடர்புடைய பாம்புடன் கூடிய மயில், வேல் என்பவற்றோடு "கந்" என்ற பெயரை நோக்கும் போது அது முருகனைக் குறிக்கும் "கந்தன்" என்ற பெயரின் சுருக்கமாகத் தெரிகிறது. தமிழகத்தில் முருகனைக் கந்தனாக வழிபடும் மரபு முதன்முறையாக கி.பி. 7ஆம் நூற்றாண்டில் ஞானசம்பந்தர் தேவாரத்தில்தான் காணப்படுகிறது (ஞானசம்பந்தர் தேவாரம் 1:19). இக்கால யாழ்ப்பாண மன்னர்களில் ஒருவர் கந்தமலையாரியர்கோன் என்ற விருதுப்பெயரைப் பெற்றிருந்தான் (Pathmanathan 1980:409-417). இதனால் இவ்விருதுப்பெயருக்குரிய மன்னனே "கந்" என்ற பெயர் பொறித்த நாணயத்தை வெளியிட்டான் எனக் கூறலாம். இரண்டாவது நாணயத்தில் வரும் "ஆ" என்ற எழுத்து இந்நாணயத்தை வெளியிட்ட மன்னர் தன்மை ஆரியச்சக்கரவர்த்திகள் என அழைத்துக் கொண்டதால் அவ்வம்சத்தைக் குறிக்கும் முதலெழுத்தாக எடுக்கலாம். அதேவேளை, சங்ககாலம் தொட்டு முருகன் ஆறுமுகன் என அழைக்கப்பட்டு வருவதற்கும் சான்றுகள் உண்டு (காந்திதாசன் 1988:29 131). நாணயத்தில் "ஆ" என்ற எழுத்தோடு முருகனோடு தொடர்புடைய பாம்புடன் கூடிய மயில், வேல் போன்ற சின்னங்களும் இடம்பெற்றிருப் பதால் "ஆ" என்ற எழுத்து ஆறுமுகனைக் குறிப்பதாகவும் எடுத்துக் கொள்ள இடமுண்டு.

மேற்கூறப்பட்ட நாணய ஆதாரங்களைப் பிற வரலாற்று மூலாதாரங்களுடன் ஒப்பிட்டு நோக்குகின்ற போது பண்டு தொட்டு இலங்கைத் தமிழரிடையே முருகவழிபாடு இருந்து வந்துள்ளமை தெரிகிறது. கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் எழுந்த அருணகிரிநாதரின் திருப்புகழில் ஈழத்து முருகத் தலங்கள் இருந்த இடங்களாகத் தென்னிலங்கையிலுள்ள கதிர்காமமும் வட இலங்கையிலுள்ள யாழ்ப்பாணமும் (யாழ்பாணயன்பட்டினம்) குறிப்பிடப்பட்டுள்ளன. இவை இலங்கைத் தமிழரிடையே முருக வழிபாடு சிறப்புற்றிருந்ததற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். தமிழ் நாட்டில் வரலாற்றுப் பழமை வாய்ந்த முருகன் ஆலயங்கள் உள்ளன. பழனி, திருச்செந்தூர் போன்ற இடங்கள் கந்தமலை என இலக்கியங்களில் அழைக்கப்பட்டாலும் நடைமுறையில் முருகன் ஆலயங்கள் என அழைக்கப்படும் மரபே பெரும்பாலும் காணப்படுகிறது. ஆனால் இலங்கையில் இன்றுள்ள

முருக ஆலயங்களில் மூன்றில் ஒரு பங்கு கந்தன் ஆலயங்கள் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன (சூவலுப்பிள்ளை 1985:223 240). யாழ்ப்பாண அரசின் தலைமை ஆலயமாக "கந்தன் ஆலயம்" தலைநகர் நல்லூரில் இருந்தமை பற்றி இவ்வரசுகால இலக்கியங்கள் கூறுகின்றன. அதை இக்கால மன்னர்கள் வெளியிட்ட "கந்(தன்)" பெயர் பொறித்தத நாணயங்களும் உறுதிப்படுத்துகின்றன. தமிழ்நாட்டில் சங்க காலம் தொட்டு முருக வழிபாட்டுடன் தொடர்புடைய சின்னங்கள் நாணயங்களில் இடம்பெற்றிருந்தாலும் முருகனின் பெயர்களை நாணயங்களில் பொறிக்கும் மரபு 17-ஆம் 18-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டதற்கே இதுவரை சான்றுகள் கிடைத்துள்ளன (ஆறுமுக சீதாராமன் 1998:39). ஆனால் இலங்கைத் தமிழரிடையே இம்மரபு கி.பி. 14-ஆம் நூற்றாண்டளவில் ஏற்பட்டமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

## Reference


*Bopearachchi, O and Wickramesnhe, W., 1999, Ruhuna an Ancient Civilization Revisited, with the collaboration of the Archaeological*

*Celappatikaram, 1995, ed. Caminataiyar, U.V.Vi edition*

*Gupta, P.L. 1969, Coins, National Book Trust, India, New Delhi.*

*Kalidoss, Raju 1976, History and Culture of Tamil, Dindigul.*

*Kalidos, Raju, 1999 Iconography of Skanda-Murukan : Flashes of Insight, Journal of the Institute of Asian Studies, Vol. XVI:2:73-90.*

*Kantithasan, M., 1988, Muruka Worship in Tamil Nadu (In Tamil), Madurai.*

*Krishnamurthy, R. 1997, Sangam Age Tamil Coins, Garnet Publications, Madras.*

*Krishnarajh, s., 1983, Coins found in Jaffina Peninsula (in Tamil) Cintanai, Jaffna University Publication, 1:71-84.*

*Mahavamsa 1960, ed, Ceiger,W. Colompo.*

*Paranavitana, S., 1970, Inspection of Ceylon : Early Brahmi Inscriptions, The Department of Archaeology Ceylon, Colembo, I.*

*Parkar, H. 1981, Ancient Ceylon Asian Educational Services, New Delhi.*

*Pathmanathan, S., 1980, coins of Medieval Sri Lanka : The Coins of the Kings of Jaffina, Spolia Zylanica, Vol. 35, part I and II : 409-417.*

*Pushparatnam, P., 2001, Ancient coins of Sri Lankan Tamil (in Tamil), Bavani Patippakam, Jaffna.*

*Rajan, K., 1994, Archaeology of Tamil Nadu (Kongu Country) Book India Publishing Co. Delhi.*

*Seetharaman, A., 1988, God name in Tamil Coins (in Tamil) in Coins X Madras Coins Society, Madras.*

*Seyon, K.N.V. 1988, Some Old Coins Found in Early Ceylon, Nawala, Sri Lanka.*

*Sitrampalam, S.K., 1995, History of Hinduism in Sri Lanka up to 500A.D. (in Tamil) Jaffina University Publication, Colombo.*

*Sivasamy, V., 1974, Coins of Jaffina (in Tamil), Tellippalai.*

*Subbarayalu, Y., 1991, Personal Names and Society (in Tamil) History and Tamil Inscriptions (unpublished Seminar Papers), TamilUniversity Thanjavur : 41-48.*


**(நிறைந்தது)**

# குருநமசிவாயர் சமாதி குறித்த சாசனம்



சரித்திரச் செம்மல் ச. கிருஷ்ணமூர்த்தி,
எம்.ஏ., (த) எம்.ஏ., (வ) பி.எட்.,

கி.பி. 15 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருவண்ணாமலை குகை நமசிவாயரின் சீடரான குருநமசிவாயர் குருவுக்கு மிஞ்சிய சீடராக விளங்கினார். இவர் சிதம்பரம் நகருக்கு வந்து ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டு வாழ்ந்துள்ளார். சிதம்பரம் நகரில் திருப்பாற்கடல் என்ற பகுதியில் (சிதம்பரம் வடக்கு வீதியில் இருந்து செல்லும் தங்கரதச் சந்தில்) மடம் கட்டி வாழ்ந்துள்ளார். உடையார் பாளையம் ஜமீன்தார்களால் இத்துறவி பெரிதும் ஆதரிக்கப் பெற்றுள்ளார். இதனை உறுதிப்படுத்தப் பல பாடல்களும் செப்பேடு ஒன்றும் சாட்சியாக உள்ளன. நடராசர் கோயில் உச்சிக்காலப் பூசையை, நமசிவாயர் செவ்வனே நடத்த வேண்டி சின்ன நல்லப்ப காலாட்கள் தோழ உடையார் என்ற உடையார்பாளைய ஜமீன்தார் இளங்கம்பர் என்ற ஊரினைத் தானமாக அளித்துச் செப்பேடு ஒன்றையும் வெளியிட்டுள்ளார். இச்செப்பேட்டுச் செய்தியை இலக்கியத்தின் மூலமும் அறியலாம். தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் தம்முடைய நல்லுரைக்கோவையில் இச் செய்தியை விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

குரு நமசிவாயர் வீர சைவ மரபினர் ஆவார். இவர் சிவலிங்கத்தில் ஐக்கியமான செய்தி ஒரு பழைய வெண்பாவில் குறிக்கப்பட்டுள்ளது. அவ்வெண்பா வருமாறு;

வந்தீச் வரவருடம் வைகாசி தேதிநலம்
இந்துநா ணாழிகை யேழரைமேல் வந்தகுரு
தாளாம் அருணகிரி தாணு சிவலிங்கத்துள்
ஆனான் நமசிவா யன்.

இப்பாடலின் கருத்தை உறுதிபடுத்தும் வகையில் இக்கட்டுரையாசிரியர் கல்வெட்டொன்றைக் கண்டுபிடித்தார். (1) இக்கல்வெட்டு தங்கரதச் சந்தில் தனியார் ஒருவருடைய குளியலறையில் துணி துவைக்கும் கல்லாக இருந்து வந்தது. தற்போது இக்கல்வெட்டைத் தொல்லியல் துறை பாதுகாத்து வருகிறது. இக்கல்லில் இரு கல்வெட்டுகள் உள்ளன. இரண்டும் ஒரே பக்கத்தில் தொடர்ச்சியாக உள்ளன.

## கல்வேட்டு — 1

1) சொஸ்திஸ்ரீ சகாற்தம்
2) 1397 யீசுர ஷூ வை
3) மாசி மீ 9 சோமவாரம்
4) குருநமசிவாய முற்திங்
5) காகாரம்
6) ...தோழனதிருப்பணி

(பின் இருவரி பொறிந்துவிட்டன)



## கல்வேட்டு — 2

1) ஸ்ரீ சாலிவாகநம் 13
2) 95 செய ஷூ தை மீ 2
3) 2 குருவாரச் சின்ன நல்ல
4) பண்டார....ா பாளை....ய
5) ளைபிச்ச நமசிவாய முற்தி
6) மடம் பய..
7) தான் சன்னதி..கçு
8) ..முத்கு மடம் லிங்
9) ...தம்

முதல் கல்வெட்டின்படி ஈசுர வருடம் வைகாசி மாதம் ஒன்பதாம் தேதி சோமவாரத்தில் குருநமசிவாய மூர்த்தி லிங்காகாரம் (சமாதி) அடைந்தார். அதாவது கி.பி. 1475–இல் முத்தி பெற்றார். குருநமசிவாயர் சிதம்பரம் போந்து நடராசர் குறித்தும் சிவகாமி குறித்தும் பல பாடல்கள் பாடியுள்ளார். சிதம்பர வெண்பா, நமசிவாயமாலை, சிவக்ஷேத்திரக் கோவை முதலிய நூல்கள் மிகவும் முக்கியமானவை. இவருடைய வரலாற்றை அமரர் மு. அருணாசலத்தின் 16 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் காணவும்.

வேலூர் அருகில் உள்ள திருவிரிஞ்சபுரம் நகரில் புராதனமான கோயில் உள்ளது. இக்கோயிலில் கல்வெட்டுகளும் உள்ளன. கி.பி. 1592 ஆம் ஆண்டுக் கட்டிய கல்வெட்டு. சிதம்பரம் குருநமச்சிவாயர் அடியார் ஆனந்த நமசிவாய பண்டாரம் அவர்களுக்கு எற்றம நாயக்கர் மடம் கட்டித் தந்துள்ளார் என்று கூறுகிறது. அதே கோயிலில் உள்ள மற்றோர் கல்வெட்டு கி.பி. 1588–இல் வேங்கடபதிராயர் இருபது பரதேசிகளுக்குத் தினமும் உணவு அளிக்க நிவந்தம் ஏற்படுத்தி அத்தருமத்தைக் (குருநமச்சிவாயரின் சீடர் ஆனந்த நமசிவாயர் வரிஞ்சிபுரத்தில் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்துள்ளார்) கண்காணித்து வரும் உரிமையைச் சிதம்பரத்தில் திருப்பணியையும் கட்டளையையும் மேற்பார்வை செய்து வந்த நமசிவாய உடையாரிடம் ஒப்படைத்ததாகக்

குறிப்பிடுகிறது. சின்ன அம்பல நாயகப் பண்டாரத்தார் சிதம்பரம் வேலனுக்கு 20 தளிகை நைவேத்தியம் செய்து குருநமசிவாய மூர்த்தி, அடியார்களுக்குப் பிட்சை நடப்பித்து வந்ததும் மேற்படி கல்வெட்டில் காண்கிறோம். மேற்கண்ட இரு கல்வெட்டுகளில் காலம் கி.பி. 16ஆம் நூற்றாண்டு என்பதில் ஐயமல்லை. திருவிரிஞ்சிபுரத்தில் 16–ஆம் நூற்றாண்டில் நமசிவாயப் பண்டாரம் அவர்களுக்கு மடம் கட்டியதும் உண்மையாகும். சிதம்பரத்தில் கண்டெடுத்த கல்வெட்டுகள் 16–ஆம் நூற்றாண்டின அல்ல. 15–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. எனவே குருநமசிவாயர் மரபில் வந்தவராகத் திருவிரிஞ்சிபுரத்தில் உள்ள நமசிவாயப் பண்டாரத்தைக் குறிப்பிடலாம்.

சிதம்பரம் கல்வெட்டுகள் இரண்டில் முதல் கல்வெட்டில் வரும் ரிங்காகாரம் என்பது முத்தியடைதல் அல்லது சமாதியாதலைக் குறிக்கும். முன்குறிப்பிட்ட வெண்பாவில் வரும் தமிழ் வருடம் மாதம் தேதி ஆகியவை கல்வெட்டில் வருகின்றன. எனவே இலக்கியம் கல்வெட்டால் உறுதிப்படுகிறது.

இரண்டாவது கல்வெட்டில் வரும் சின்ன நல்லபண்டாரமும் திருவிரிஞ்சிபுரத்தில் வரும் சின்ன அம்பலநாயகப் பண்டாரமும் ஒருவராக இருக்கலாம். இந்த இரண்டாம் கல்வெட்டின் காலம் கி.பி. 1473 ஆகிறது. எனவே இதுவும் கி.பி. 15ஆம் நூற்றாண்டு ஆகிறது. கி.பி. 1475க்கு பின்பே இருகல்வெட்டுகளையும் ஒரே கல்லில் வெட்டி வைத்துள்ளார்.

> சிவமயம் 30.1.1939
> வெகுதான்ய ஸூ
> தை மீ 19 சோம
> வாரம் கார்த்தி
> கை நக்ஷத்திரத்தில்
> திருப்பாற்கடல்
> மடல் இளவரசர்
> ஸ்ரீலஸ்ரீ கணே
> ச குருநமசிவா
> ய சுவாமிகள்
> சிவலிங்க
> ஐக்கியமானார்

உடையார் பாளையம் அரசர் சின்ன நல்லப்பக் காலாட்கள் தோழர் என்பவரே கல்வெட்டில் வரும் நபராக இருக்க வேண்டும். குருநமசிவாயர் மரபில் வந்தவர்கள் 30.1.1939 வரை இங்கிருந்துள்ளார்கள். வெகுதான்ய ஆண்டு வரை இருந்ததற்குச் சிதம்பரத்தில் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

கணேசகுரு நமசிவாய சுவாமிகள் சிவலிங்கத்தில் ஐக்கியமான செய்தி இக் கல்வெட்டில் உள்ளது. இளவரசர் என்பது மடங்களில் இளைய சன்னிதானம் அல்லது இளைய பட்டத்தைக் குறிக்கும். திருவாவடுதுறை ஆதீனத்தில் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிகர் ஆதீனத் தலைவராகவும் சீர்மிகு காசிவிசுவநாத தேசிகர் இளவரசராகவும் தற்போதுள்ளார்கள்.

குருநமசிவாயர் சமாதி கோயிலில், வணங்கும் நிலையில் சைவ அடியார் ஒருவரின் உதிரிச் சிற்பம் உள்ளது. இவர் வீர சைவர் என்பது

1) ஸ்வஸ்திஸ்ரீ...
2) தம் 14 64 சே
3) மல் செல்..
4) தி...மீ
5) ச வர ம..
6) பம் னாயக்கே

கழுத்தில் உள்ள இலிங்கத்தால் தெரிகிறது. மேலும் அர்த்த மண்டபத்தில் அடியார் ஒருவரின் சிற்பம் சிதைந்த நிலையில் உள்ளது. இதில் திருக்கடவூர் நமசிவாயர் என்ற பெயர் உள்ளது. இவர் நமசிவாயர் மரபில் வந்தவர் எனலாம். மேலும் அர்த்த மண்டபத்தில் துண்டுக் கல்வெட்டுகள் உள்ளன. இதன் காலம் 16ஆம் நூற்றாண்டு எனலாம்.

இக்கோயிலில் அழகிய தட்சிணாமூர்த்தி துர்க்கை, விஷ்ணு, பிள்ளையார் ஒரே கல்லில் ராசிகளின் சிற்பம் எனப் பல சிற்பங்களும் உள்ளன.

சிதம்பரத்தில் குருநமசிவாயர் கோயில் அருகே ஆவுடையார்கோயில் என வழங்கப்படும் திருப்பெருந்துறைக் கோயில் தெற்குப் பார்த்த வாயிலுடன் உள்ளது. ஆவுடையார் கோயில் அமைப்பையே ஒத்துள்ள இக்கோயில் சிதைந்த நிலையில் உள்ளது. மணிவாசகர் உதிரிச்சிற்பங்களையும் ஆவுடையாரையும் காண்கிறோம். சிதைந்த நிலையில் கல்வெட்டுகள் உள்ளன. இக்கோயிலுக்குரிய திருப்பாற்கடல் தற்போது இல்லை. அம்பலத்தாடி மடம் என்ற மடல் கோயிலுக்கு மேற்கில் உள்ளது. மடம் வீரசைவ மடமாகும். இம்மடத்தின் பொறுப்பில் திருப்பணி விநாயகர் கோயில் வடக்கு வீதியில் உள்ளது. ஆவுடையார் கோயில் மற்றும் குருநமசிவாயர் சமாதி கோயில் அமைந்துள்ள பகுதி தங்கரதச் சந்து என வழங்கப்படுகிறது. கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் தற்போது வீடுகள், பள்ளி ஆகியவை உள்ளன. திருவாவடுதுறை ஆதீனத்திற்கும் இங்கு மனைகள் இருந்தது நகர வரைபடத்தில் தெரிகிறது. ஆயின் மனைகள் ஆதீனத்தின் நிர்வாகத்தில் இல்லை. மேற்கண்ட இருகோயில்களையும் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## அடிக்குறிப்பு:

கல்வெட்டுக் குறித்து நாளிதழ்களில் செய்தி வந்துள்ளன. தற்போது கல் பாதுகாப்பாக உள்ளது. கல்வெட்டைப் பாதுகாப்பதிலும் படியெடுப்பதிலும் எனக்கு உதவியாக இருந்த சிதம்பரம் டாக்டர் க. நடராஜன் அவர்களுக்கும், கல்வெட்டாய்வாளர் வெ. இராமமூர்த்தி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழங்காசை வாழ்த்துகிறோம்
வரலாற்றுத் துறையில் பழங்காசு பொற்காசாய் மிளிர வாழ்த்துகிறோம்.
**G.N. CHAKRAPANY CHETTY & SONS (P) LTD.,**
*Automobile Dealers and Engineer*
**Dealer - Bharat Petroleum and Exide Batteries**
**Old Post Office Road, Post Box No. 29, Trichy - 620 001. ✆ 412335**



# காணாமற்போன கல்வெட்டுக்கள்



- ப. சீனிவாசன்

திருச்சிராப்பள்ளி நகருக்கு வரலாற்றில் எப்போதும் ஒரு சிறப்பான இடமுண்டு. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் இச்சிறப்பிடம் தொடர்ந்து பராமரிக்கப்பட்டே வந்திருக்கிறது. இங்குப் பல இடங்களிலும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களும் கல்வெட்டுக்களும் காணக்கிடைக்கின்றன. அவ்வகையில் பலரும் அறியப் பதித்து வைக்கப்பட்டிருந்த இருகல்வெட்டுக்கள் இப்போது சில சுயநலமிகளால் களவாடப்பட்டது தெரியவந்துள்ளது.

திருச்சிராப்பள்ளி நகரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகச் சாலையின் (Collector Office Road) தொடர்ச்சியான இலாசன்சு சாலையில் உள்ள பெட்ரோல் நிலையத்திற்கு அருகில், ஒரு சுமைதாங்கிக்குப் பக்கத்தில் குடிநீர்க் குழாய் பொருத்தும் செங்கல் கட்டுமானம் ஒன்றில் இக்கல்வெட்டுக்கள் பதித்து வைக்கப்பட்டிருந்தன. திருச்சிராப்பள்ளி நகரின் சிறப்பு அடையாளமான 'மலைக்கோட்டை' வடிவம் ஒருகல்வெட்டின் தலைப்பில் அழகிய புடைப்புச் சிற்பமாகவும், மற்றொரு கல்வெட்டின் தலைப்பில் கோட்டுருவமாகவும் செதுக்கி வைக்கப்பட்டிருந்தன.

திருச்சிராப்பள்ளியில் கிடைத்துள்ள ஆங்கிலேயராட்சிக் காலத்திய கல்வெட்டுக்களிலும், பிற சின்னங்களிலும் காணப்படாத 'ஃப்ரீ மேசான்ரி' (FREE MANSONRY) வடிவம் இக்கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. இவ்வடையாளம் அடையாறு பிரும்மஞான சபைக் கூடத்திலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். முதல் கல்வெட்டில், 12.12.1911–இல் தில்லியில் நடைபெற்ற ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் அவரின், துணைவி மேரி அரசியார் ஆகியோரின் முடிசூட்டுவிழா தர்பார் நடந்தது பற்றிய செய்தி குறிப்பிடப்படுகிறது. இவ்விழாவை முன்னிட்டுத் திருச்சிராப்பள்ளி மக்களுக்கு "லாட்ஜ் ஆஃப் ராக்" என்ற அமைப்பின் உறுப்பினர்களால் இக்குடிநீர்க் குழாய் நன்கொடையாக அளிக்கப்பட்டதாகவும் கூறுகிறது.

இரண்டாவது கல்வெட்டு, இக்குடிநீர்க்குழாயை எல்.இ.பக்லி, ஐ.சி.எஸ் என்ற அரசு உயர் அலுவலர் 14.12.1912–இல் திறந்து வைத்ததாகக் கூறுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகச் சான்றுகளை ஒப்பிட்டபொழுது இக்காலக் கட்டத்தில் ஆர். நாராயண அய்யர் (1912–இன் பிற்பகுதி) என்பவர் மாவட்ட ஆட்சியராக இருந்ததையும் அறிய முடிகிறது.

## கல்வெட்டு 1

**IN COMMEMORATION OF**
**THE CORONATION DURBAR**
**OF**
**THEIR IMPERIAL MAJESTIES**
**KING GEORGE V AND QUEEN MARY**
**HELD AT DELHI ON 12TH DEC ; 1911**
**PRESENTED TO**
**THE PUBLIC OF TRICHINOPOLY**
**BY THE**
**MEMBERS OF 'LODGE OF ROCK'**
**NO.: 260 ED**



புகைப்படங்கள்: திரு. **எழில். ஏழுமலை**
எடமலைப்பட்டிப்புதூர், திருச்சிராப்பள்ளி.



## கல்வெட்டு 2

**OPENED**
**BY**
**L.E. BUCKLEY ESQUIRE**
**I.C.S**
**14TH DECEMBER 1912**

இக்கல்வெட்டுக்கள் இரண்டும் தற்போது பெயர்த்து எடுத்துக்கொண்டு போகப் பட்டுள்ளன. களவாடப்பட்ட இக்கல்வெட்டுகள் போகத் தற்போது, செங்கல் கட்டுமான அமைப்பு மட்டுமே எஞ்சி நிற்கிறது.



புகைப்படங்கள்
திரு. Er. **லெ. சுபாஷ் சந்திரபோஸ்**
பீமநகர், திருச்சிராப்பள்ளி



மக்கள் நடமாட்டம் மிகுந்த லாசன்ஸ் சாலையில் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலமாகக் காட்சியளித்து வந்த இக்கல்வெட்டுகளையே களவாடிச் சென்றுள்ளபொழுது, மக்கள் நடமாட்டம் குறைந்த அல்லது நடமாட்டமே இல்லாத இடங்களிலுள்ள வரலாற்றுச் சின்னங்களின் பாதுகாப்புக்கு உத்திரவாதமளிக்க யாரால் முடியும்?

ஆகவே, நாடு முழுவதுமுள்ள வரலாற்றுச் சின்னங்களையும், சான்றுகளையும் பாதுகாக்க, அரசுத் துறைகளும் அரசு சாரா நிறுவனங்களும் முன்வர வேண்டும். இவைகளை இயன்ற வரையில் அரசு அருங்காட்சியகங்களில் சேர்ப்பித்துப் பாதுகாப்புடன் வைக்க உறுதிகொள்ள வேண்டு-மென, அரசுத் துறைச் சார்ந்த அலுவலர்களையும், அறிஞர்களையும், பேராசிரியர்களையும், மாணவர்களையும், வரலாற்றார்வலர்களையும், பொது மக்களையும், வேண்டிக் கொள்கிறோம்.

---

குண்டூர்க் கல்வெட்டு-29-ஆம் பக்கத் தொடர்ச்சி...

தானம் செய்வதாக வாக்களித்த பின்னர், தன்னிடம் வாக்குப் பெற்றவர், தன்னைக் கொல்வதற்கு வந்தவராவர் என்று அறிந்தாலும், தமது குருவானவர் தடுத்தாலும், வாக்கு மாறக்கூடாது என்ற கருத்தும் வலியுறுத்தப்படுகிறது.

வாமனராக மகாபலியிடம் வந்து இரந்த திருமால், பேருருவாக (விஸ்வரூபம்) வளர்ந்து உலகை ஓரடியாகவும், வானை ஓரடியாகவும், மூன்றாம் அடியைப் பலியின் தலையில் வைத்து 'ஸுதலம்' என்றுக் கூறப்படும் கீழ் உலகத்திற்கு அழுத்தியதாகவும் வாமனவதாரத்தை விவரிக்கிறது.

ரிக் வேதத்திலும் (I–22 : 17,18–இல்) திருமால் இவ்வுலகனைத்தையும் மூன்று அடிகளால் அளந்ததாக உள்ள குறிப்பும் ஒப்பிடத்தக்கதாகும்.

ஆகவே ஒருபுறம் தானம் செய்யப்பட்ட செய்தியைத் தெரிவிக்கும் கல்வெட்டு இருப்பதால் மறுபுறம் உள்ள கோட்டுருவத்தை வாமனராகவே கருதலாம்.

## நன்றிக்குரியவர்கள்

புதைந்து கிடைந்த இக்கல்வெட்டை அனைவரும் அறியவேண்டும் என்று பரந்த எண்ணத்துடன், தனது முதிர்ந்த வயதையும், தளர்ந்த உடலையும் பொருட்படுத்தாது உழைத்து வெளிப்படுத்திய குண்டூர் நடுத்தெருவைச் சேர்ந்த பெரியவர் திரு. ம. முதது முத்தரையர் அவர்களுக்கும், குண்டூர்க் கீழத்தெருவைச் சேர்ந்த தோஷன் மகன், திரு. முருகன் அவர்களுக்கும், முக்கியக் குறிப்புக்களையும், கருத்துக்களையும் வழங்கிய ஆய்வாளர்கள் திரு. கி. ஸ்ரீதரன், திரு. குடவாயில் பாலசுப்ரமணியன், ஸ்தபதி. திரு. வெ. இராமன், திரு. ப. சீனிவாசன் ஆகியோருக்கும் பழந்தமிழர் வரலாற்றுப் பேரவை நன்றி கூறுகிறது.



# குண்டூர்க் கல்வெட்டு



-Er. லெ. சுபாஷ் சந்திரபோஸ்

திருச்சிராப்பள்ளியிலிருந்து சுமார் பத்துக் கிலோ மீட்டர் தொலைவில் திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை நெடுஞ்சாலையில் உள்ள சரித்திரப் புகழ்பெற்ற ஊர் குண்டூர்.

குண்டூரின் ஒரு பகுதியாகப் புதிதாக அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் நகருக்குக் கிழக்குத் திசையில் சிறியதொரு பாசன வாய்க்கால் உள்ளது. அவ்வாய்க்கால் கரையில் மிகவும் சிறப்பு வாய்ந்ததும், தமிழகத்தில் குறைந்த எண்ணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களுடன் கூடிய சிலைகளுள் ஒன்றுமான (ஸ்ரீ பெருங்குண்டூர் அய்யன் தந்மம் மாறங் குவாவன் செய்வித்த மகாசாத்தன்' என்ற கல்வெட்டுடன் கூடிய) சாஸ்தாவின் திருவுருவச் சிலை உள்ளது.

அந்தச் சாஸ்தாவின் சிலையிலிருந்து, கிழக்குத் திசையில் சுமார் 100 மீட்டர் தொலைவில் ஒரு வயலின் வரப்பில் 34 x 76 x 23 செ.மீ. அளவுள்ள ஒரு கல்லில் ஒருபுறம் சூரிய சந்திர உருவத்துடன் கல்வெட்டுச் செய்தியும், மறுபுறம் கோட்டுருவச் சித்திரமும் பொறிக்கப்பட்டுள்ளதைப் பழந்தமிழர் வரலாற்றுப் பேரவையின் நிறுவனரான இக்கட்டுரை ஆசிரியர் கண்டுபிடித்துள்ளார்.

## கல்வெட்டுச் செய்தி

சூரியன் சந்திரன் (சாட்சியாக) உள்ளவரை சித்திர (பானு) வருடம். ஆடி, பூச, உத்திரபதி நாயக்கர் என்பவர், னாஞ்ரி (நாஞ்ரி) நம்பி என்ற அந்தணர் ஒருவருக்குத் தானம் கொடுத்ததையும், இதற்கு அகிதம் செய்தவன் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்றவனாவான் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

சித்தா ஆடி பு
ச வுத்தரபதினாய
க்கர் னாஞ்ரிநம்பி
க்கு விட்ட படிக்கு
யிதுக்கு அகிதம்ப
ண்ணி -------
கெடால கெங்கை
கரையல் காராம்
பசுவை கொ
ண்ணவன்.



## கல்வெட்டின் காலம்

'சித்தர (பானு) வருடம், ஆடி, பூச' என்று மட்டுமே காட்டப்பட்டுள்ளபடியால், கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு (சுமார் 300 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக) நாயக்க மன்னர்களின் காலத்தைச் சார்ந்ததாகக் கருதலாம்.

## கல்வெட்டிலுள்ள கோட்டுருவம்

இவ்வுருவம் ஒரு பிராமணரின் உருவமா அல்லது வாமனாவதாரத் திருஉருவமா என்று தீர்மானிக்க இயலாதபடி, ஒரு பிராமணர் ஒரு கையில் குடை, மற்றொரு கையில் கமண்டலத்துடன் நடப்பது போல் காட்டப்பட்டுள்ளது.

திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்றான வாமனவதாரத்தில் தான், வாமனர் கையில் குடையுடனும், கமண்டலத்துடனும் செல்வதாக வருணிக்கப்படுகிறார். *(VAISNAVA ICONOGRAPHY - ACCORDING TO PANCARTRAGAMA சுலோகம் 300 - 301, SESA XXV 5b - 6a - PARASARA XV : 186 - BY - H. DANIEL SMITH AND K.K.A. VENKATACHARI)*

## வாமனாவதாரம்



ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்கந்தம் 8, அத்தியாயம் 15லிருந்து 23 வரை வாமனாவதாரம் விவரிக்கப்படுகிறது. பிரம்மனால் வணங்கப்பட்ட திருமால் வானவர்களுக்கு, உதவுவதற்காகக் கச்யப முனிவருக்கும், அதிதிக்கும் மகனாக வாமனராக அவதாரம் எடுத்ததையும், அவ்வவதாரத் தோற்றம் சூரியனுக்கும் அக்னிக்கும் ஒப்பிடப்படுவதையும் காண்கிறோம். மேலும், குடை, தண்டம், நீர் நிறைந்த கமண்டலம், மௌஞ்சி (முஞ்சப்புல் என்ற ஒருவகைப் புல்லாலான, இடுப்பில் கட்டப்படும் கயிறு), யக்ஞோபவீதம் (பூணூல்), அஜனமாகய உத்தரீயம் (மான் தோலிலான, தோளிலிருந்து மார்பின் குறுக்காக கட்டப்படும் தோல் வார்) ஆகியவற்றைத் தரித்துக் கொண்டு சிகை (குடுமி)யுடன் கூடிய தலையும் குள்ளமான உருவமும் உடையவராக வாமனர் சித்தரிக்கப்பட்டுள்ளார்.

மேலும், தானம் செய்வது பற்றிய குறிப்புகளில் அறம் செய்யும் அறவோனின் சிறப்பும், இரப்போர் தன் தேவைக்கும் அதிகமாகக் கேட்டுப் பெறக்கூடாது என்ற நிபந்தனையும் விவரிக்கப்படுகிறது.

(தொடர்ச்சி – பக்கம் 27–இல்)

# புதுக்கோட்டை சமஸ்தான ஆவணங்கள்



- இரா. திருமலை நம்பி

தமிழகத்தில் புதுக்கோட்டை என்றாலே தொண்டைமான் புதுக்கோட்டை என்றே பிரசித்தமான பெயராகும். தொண்டைமான் காலத்திற்கு முன்பு பல்லவரையர் என்ற வம்சத்தினர் புதுக்கோட்டைப் பகுதியைப் பல்லவரையன் சீமை என்ற பெயரிலேயே ஆண்டுள்ளார்.

இன்றைய புதுக்கோட்டை மாவட்டத்தில் பல இடங்களில் கோட்டைகள் இருந்துள்ளன. இன்றும் கோட்டை என்று முடியக் கூடிய ஊர்களாக 58 இடங்கள் உள்ளன. புதுக்கோட்டைத் தொண்டைமான் வம்சத்தில் இரகுநாதராயத் தொண்டைமானுக்கு இராமநாதபுரம் அரசர் கிழவன் சேதுபதியால், திருமயம் கோட்டையில் வைத்து, கி.பி. 1686-இல் மன்னராகப் பட்டம் கட்டியது முதல் அரச வம்சம் தொடங்கியது.

தொண்டைமான்கள் ஆட்சிக் கட்டிலேறுவதற்குப் பல நூற்றாண்டு-களுக்கு முன்பே "புதுக்கோட்டை" என்ற பெயர் கூறும் கல்வெட்டுச் சான்றுகள், கோவிலூர் பாலபுரீஸ்வரர் கோவில் திருவரங்குளம், திருக்கோகர்ணம் முதலிய இடங்களில் காணப்படுகின்றன. இவ்வாறு பல கோட்டைகளைக் கொண்டிருந்த புதுக்கோட்டை, குன்றிமணி போல மண், தூசி படிந்து சிறப்பிழந்திருந்து, தொண்டைமான்கள் காலத்தில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கத் தொடங்கியுள்ள பெயராகவே உள்ளது.

மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் மக்களின் வாழ்க்கை நிலை ஆட்சிக் கால மாண்புகளை விளக்கும் சான்றாகும். தொண்டைமான்களின் ஆட்சிக் காலத்தில் மக்கள் மகோன்னத நிலையில் வாழ்ந்திருந்தனர் என்று சான்றுகள் மூலம் அறிய முடியவில்லை. புதுக்கோட்டைத் தொண்டைமான்கள் ஆங்லேயருடன் கொண்டிருந்த உறவை, எதிர்த்த பக்கத்து மன்னர்களும், பாளையக்காரர்களும் அடிக்கடி போரிட்டதால், போரில் உதவிட வேண்டிய கட்டாயம் ஆங்கிலேயர்க்கு ஏற்பட்டது.

மேலும் இயற்கையின் இடர்ப்பாடுகளும் தொண்டைமான்களைத் தொடர்ந்தன. கி.பி. 1900இல் நில நடுக்கம் ஏற்பட்டது.[1] வெள்ளப் பாதிப்புகள் பெரும் சேதங்களை கி.பி. 1709, 1809, 1827, 1884, 1887, 1888, 1890, 1893 ஆகிய ஆண்டுகளில் ஏற்படுத்தின.[2] மேற்கண்ட கொடிய பஞ்சக்காலங்களில் குறிப்பாக கி.பி. 1709-இன் போது பசியாலும், பட்டினியாலும் பலர் இறந்தனர். மனிதரை மனிதர் விற்றனர். பிறர்க்கு அடிமை ஆயினர். பல்வேறு இடங்களுக்கும் குடிபெயர்ந்தனர்.

1) இந்திய விவரச் சுவடி பக். 30 2) இந்திய விவரச் சுவடி பக். 42

இப்பஞ்சம் பற்றிய ஆவூர் கிறிஸ்தவப் பாதிரியார்கள் ரோமுக்கு எழுதிய கடிதக் குறிப்பில் "அக்கொடிய பஞ்சத்தில் 30–இல் 1 பங்கு மக்கள் கூட உயிர் பிழைக்கவில்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.[3]

பஞ்சத்தைத் தாக்குப்பிடிக்க முடியாமல் 19 ஆம் நூற்றாண்டில் மட்டும் (11 ஆண்டுகளில்) 56,107 பேர் இலங்கைக்குக் குடிபெயர்ந்துள்ளனர்.[4] இயற்கையாகவே சமஸ்தானம் காடுகள் நிறைந்த பகுதியாகவே இருந்தது. அடர்த்தியான மரங்கள் இருந்ததாகச் சென்னை அரசாங்கப் பிரதிநிதி தாமஸ் மன்றோ குறிப்பிட்டுள்ளார். "ஊசி நுழையாத உடை வேலங்காடு" இருந்ததை நாட்டுப் பாடல் விவரிக்கிறது.

புதுக்கோட்டைச் சமஸ்தானத்தில் வாழ்ந்த ஏழை, எளிய, பலவீனப் பட்ட மக்களுக்கு இக்காடுகளே தஞ்சம் அளித்துள்ளன. இந்த வனத்தில் கிடைத்த காய், கனிகள், மரம், விறகு கிழங்குகளைப் பயன்படுத்தி வாழ்ந்த குடும்பங்கள் ஏராளமாகும்.

இக்கட்டுரை ஆசிரியர் (இரா. திருமலைநம்பி) திருமயம் வட்டத்தில் ஊர் நல அலுவலராகப் (Rural Welfare Officer) பணியாற்றிய காலத்தில் (கி.பி. 1964) ஒரு சுவையான, மனித குலம் சிந்திக்க வேண்டியது–மான நிகழ்வு நடந்தது. இவ்வட்டத்திலுள்ள காட்டோரம் வசிக்கும் பலவீனப் பிரிவு மக்கள் காட்டை அழித்து விறகு வெட்டி விற்றுப் பிழைத்தனர். வனக் காவலர்கள் இவர்களைப் பிடித்துத் திருமயம் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து தண்டித்து வந்தனர். தினசரி நூற்றுக் கணக்கானவர்கள் பிடிபடுவதும், வழக்குத் தொடுப்பதும் தண்டத் தொகை கட்டித் திரும்புவதுமாகவே இருந்தனர். குடும்பத்தில் ஒருவர் பிடிபட்டால் குடும்பத்திலுள்ள இதரர் காட்டில் புகுந்து விறகுவெட்டித் தண்டத் தொகைக்கு ஈடுசெய்து வந்தனர். பிடிபட்டவர் 3ஆம் நாளில் மீண்டும் பிடிபட்டு வழக்கு மன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டனர். காரணம் கேட்கும் போது, நேற்றைய தண்டத்தைச் சரிக்கட்ட, விடுதலையாகிப் போகும்போது காட்டில் புகுந்து விறகுவெட்டி ஈடு கட்டிய உண்மைகளையறிந்த நீதிபதி–யவர்கள், இவ்வாறான பலவீனப் பிரிவு மக்களைத் தண்டிப்பதை விட்டு, உயிர் பிழைக்க, அரசு மாற்றுத் தொழில்களை உருவாக்கிக் கொடுக்காத வரை இவர்களுக்கு வேறு வழியே இல்லை எனக் குறிப்பிட்டுப் பலரை விடுவித்துத் தீர்ப்புக் கூறியதாகப் பலரும் தெரிவித்தனர்.

இவ்வாறு வனக் காவலர்களின் கெடுபிடிகள் அதிகமாகிய காலத்தில், வறுமையில் வாடிய பலவீனப் பிரிவு மக்கள், காட்டை நம்பி அரைவயிறு, கால்வயிறு கஞ்சி குடித்தார்கள். வனப் பிராணிகளான, பாம்பு, எலி, முயல், கீரி, நரி, தவளை போன்றவற்றை வேட்டையாட ஆரம்பித்தனர். புதுக்கோட்டை சமஸ்தானக் கட்டை ஆய்வு செய்த ஒரு குழுவினர் 28 இனங்களும், 48 வகைகளும் சார்ந்த 104 மாதிரிப் பாம்புகள் பிடிக்கப்பட்டதைக் கண்டுள்ளனர்.

3) இந்திய விவரச் சுவடி பக். 191, 210. 4) இந்திய விவரச் சுவடி பக். 243

புதுக்கோட்டை சமஸ்தான திவான் சேஷய்யா சாஸ்திரிக்கும் ஒரு இளநிலை ராணிக்கும் ஏற்பட்ட மனவேறுபாட்டால், திவானைக் கொலை செய்யும் விதமாகப் பல சூழ்ச்சிகள் செய்து, எரியும் நெருப்பின்மீது 100 நாகப் பாம்புகளைக் கொண்டு வேள்வியும் செய்யப்பட்டுள்ளது.[5] இவ்வாறு பல்கிப் பெருகிய பாம்புகளை வேட்டையாடி வயிறு பிழைத்த வறியவர்களை ஒரு குழு சந்தித்து, பல்வேறு விபரங்களையும் விற்பனை செய்து வரும் தோல்களையும் நேரில் கண்டனர். உப்பிட்டுப் பதனம் செய்த தோல்கள், ஒரு வெள்ளிக்கிழமை (சந்தை நாள்) ஐந்து பெரிய குவியல்களில் ஆயிரக் கணக்கில் இருந்ததைப் பார்த்துள்ளனர்.

இத்தோல்களைக் குறைந்த விலைக்கு வாங்கிக் கொள்ளை லாபத்திற்கு விற்று வந்த சென்னையைச் சேர்ந்த முகவர், வாரந்தோறும் 5000 தோல்களைக் கொள்முதல் செய்து, அனுப்பிவந்துள்ளார். பாடம் செய்த தோல்களாக வாரம்தோறும் 20,000 தோல்களை அனுப்பியுள்ளார். இந்த விற்பனையின்போது 12 அடி நீளமுள்ள இரண்டு பைதான் பாம்புத் தோல்கள் இருந்துள்ளன.

அன்றைய நிலையில் நல்லபாம்புத் தோல் ஒன்று ரூ. 5.50, எலிப் பாம்பு ரூ. 6.00 ரஸ்ஸல் வைப்பர் ரூ. 2.50, தண்ணீர்ப் பாம்பு ரூ. 0.70, பைதான் பைதான் ரூ. 2.50. மாலிம் பல்லி ரூ. 0.50 என்று அதிகபட்ச விலைக்கு விற்கப்பட்டுள்ளன. இதே காலத்தில் தவளைக் கால் (பச்சைத் தவளை) தொழிலும் நன்றாக வளர்ச்சி பெற்றிருந்ததாகக் குறிப்பிட்ட இக் குழுவினர் வேலையில்லாத பழங்குடியினருக்கும் மற்ற கிராம மக்களுக்கும் தோல் தொழில் நல்ல ஆதரவளிக்கின்றது என்பதைக் குறிப்பிட்டுள்ளனர்.[6]

மேலும், இத்தகைய விசப் பாம்புகளைப் பிடிப்பவர்கள் அம்பலகார்கள் (முத்தரையர் பிரிவைச் சேர்ந்த அம்பலகாரர், வலையர்) செங்கல்பட்டு மாவட்ட இருளர்களைப் போன்று பாம்பு வேட்டையில் மிக நுட்பமான திறமை படைத்திருந்தனர் என்பதையும் குறிப்பிட்டுள்ளனர்.[7] இத்தகைய தொழில்கள் கி.பி. 1962 முதல் 1968 ஆம் ஆண்டுவரை நிலவின. இது சுதந்திரத்திற்குப் பிந்திய காலம் என்றாலும் தொண்டைமானின் காலத்தில் கேட்பாரற்றுக் கிடந்த வறிய மக்களின் முன்னேற்றத்திற்கு எந்தவிதமான அடித்தளம் அமைக்கப்படாததாலேயே ஏற்பட்ட நிகழ்வுகளாகும்.

இனிச் சில சமஸ்தான ஆவணங்களைக் காணலாம்.

---

5) இந்திய விவரச் சுவடி பக். 87 6) இந்திய விவரச் சுவடி பக். 93–95.
7) இந்திய விவரச் சுவடி பக். 93

**முனைவர். பேரா. தி. கு. நடராசன் அவர்களுக்கு நன்றி!**

முனைவர் திரு. நடராசன் அவர்கள் பழங்காசின் ஆர்வலர். கந்தசாமி கவுண்டர் கலை அறிவியல் கல்லூரியில் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

20.5.2001 அன்று பழங்காசின் அலுவலகத்திற்கு தேரில் வந்திருந்து ஆசிரியர் மரு. சுசீலாதேவி சீனிவாசன் மற்றும் அறிவுரைஞர் ப. சீனிவாசன் ஆகியோரோடு உரையாடி, பழங்காசின் நோக்கம் மற்றும் செயல்பாடுகளையறிந்து, வெகுவாகப் பாராட்டினார்.

அதோடு நில்லாது, அவரும் அவரின் ஆய்வாளர்களும் சேர்ந்து, பழங்காசின் வளர்ச்சிக்காக ரூ. 500/–ஐ நன்கொடையாக அளித்துள்ளனர். அவருக்கும் அவரின் நண்பர்களுக்கும் பழங்காசு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

## நிலக் கிரயம் பத்திரம் (ஓலைச் சுவடி) கி.பி. 1878

1) ௲அ௱௭௰அ (1878) ஷ ஜனவரி மீ எ(7) தீ-க்கு................ ஷ மார்கழி மீ உ௰ (20) தீக்கு புதுக்கோட்டை சமஸ்தானம் சப்திரிக் கட்டைச் சேர்ந்த ஆலங்குடி தாலுகா கவிநாடு வட்டம் பொன்னம்பட்டியி-லிருக்கும் பழனியாண்டி சேருவை காரன் மகன்

2) சாதி வலயன், சிவமதம் தொழில் குடித்தனம் செல்லப்பனுக்கு ஷி தாலுகா ஷி வட்டம் திருமலைராயசமுத்திரத்திலிருக்கும்..... ராவுத்தன் மகன் சாதி துலுக்கன் மகமது மதம் தொழில் குடித்தனம் சின்னயராவுத்தன்

3) எழுதிக்கொடுத்த புஞ்சை நிலம் கிறைய சாதனம் யென்ன மெண்டால் குன்னாம் குளத்துக்கும் தொனபதி கொளத்துககும் வார வாரிக்கு மேற்கு பற செல்லன் பிரகார கொல்லைக்கு வடக்கு ஒட்டைக் குளத்துக்கு தண்ணீர் போற

4) வாரிக்குக் கிழக்கு... வீரப்பன் கொவ்லைக்குத் தெற்கு யிந்த நான்கொவ்லைக்கு உள்பட்ட புஞ்சை நிலம் தாக்கு... பதினாலு அடி ௲௫௰௯(1059) குளி ௬ நிலத்துக்கு விபரம்.. புஞ்சை நிலத்ந்தை யென் தகப்பன்..

5) சித்திரை மீ உ௰௩(23) தீ ஷ தாலுகா திருமலைராய சமுத்திரத்-திலிருக்கும் கேப்பறைக்கி வீரப்பன் சேர்வை காரனிடத்தில் கிரையம் பெத்து அனுபவித்து வந்த பிஞ்சை கொல்லையை தன்னிடத்தில் நான் சுத்தக் கிரைய சாதனம்

6) செய்து குடுத்து நான் வாங்கினதுக்கு 1 விவரம் நான் தன்னிடத்தில் ஷி புஞ்சை கொவ்லையை ஒத்தி வைத்து வாங்கியிருந்ததுஉ௰௫(25)... நான் ரொக்கம் வாங்கினது ரூ.உ௰௪ ௸ (24) ஆக ..க்கி ௫௰ (50)ம் நான் பத்திக்

7) கொண்டது..... யிப்போது ஷி புஞ்சை நிலத்துக்கு ஏற்பட்டிருக்கிற பட்டா, சிட்டா கணக்குப்படி உள்ள கிஸ்தி பணத்தை தானகப்படி கொண்டு புத்திர பவுத்திர பாரம்பரியாய் தானாதி விக்கிறய

## பின்பக்கம்

1) ங்களுக்கு போக்கியமாய் ஆண்டு அனுபவத்து கொள்ளக் கடவீராகவும் ஷி புஞ்சை கொவ்லைக்கு என் தொகப்பன் பேராவ் பட்டா ஏற்பட்டு யிருப்பதை நான் தன்பேருக்கு ஆகும்படி

2) (சர்க்காரிலே) மனுக் கொடுத்து விடுவேனாகவும் யிந்தப்படி புஞ்சை நிலம் கிறைய சாதனம் செய்து கொடுத்தேன். யிதற்கு அறிவேன் சாட்சியான சின்னியா ராவுத்தன் சம்மதி திருமலைராயசமுத்திரத்திலி

3) ருக்கும் பண்டுதம் சேகுகனி ராவுத்தர் மகன் பிச்சை யெண்டு கூப்பிடப்படும் மகமது மீரா ராவுத்தர் அறிவேன்... சீனி ராவுத்தன் மகன் மகமது மீரா அறிவேன். யிந்த பத்திரத்தை

4) எழுதினது புதுக்கோட்டையிலிருக்கும் வீரப்பபிள்ளை குமாரன் முத்துச்சாமி... ஷி புஞ்சை நிலத்துக்கு யென் தொகப்பன் கிரையம் பெற்ற சாதனம்... யித்துடன் தன் வசம் குடுத்திருக்கிறது. சின்னியா ராவுத்த(ன்)

5) ன் சம்மதி ௲அாஎ௰அ(1878) ஷு சினவரி மீ உ௰சு(24) உ யிதில் கண்டு யிருக்கிற நிலம் கவிநாடு கிராமத்தில் யிருக்கிறது. சின்னியா ராவுத்தன் சம்மதி யிந்தக் கிரைய சாதனப் பத்திரத்தில் பின்

6) பக்கம் யெழுதினது திருமலைராய சமுத்திரத்திலிருக்கும் பண்டுதம் சேகு கனி ராவுத்தர் மகன் பிச்சை யெண்டு கூப்பிடப்பட்ட மகமது மீரா ராவுத்தர் கயி நெட்டு யெல்லு

குறிப்பு : இந்த ஓலைச் சுவடிப் பத்திரத்தில் ஜனவரி என்பது தவிர அனைத்து எழுத்துக்களும் வருடம், மாதம், தேதி எண், தொகை அனைத்தும் தமிழ் எண்களிலேயே எழுதப்பட்டுள்ளன. பதிவு அலுவலகத்தார் ஓலையின் இடது ஓரத்தில் No.139 of 1878 BI நாள் 4.1.1878 என்று எழுதி சுருக்கொப்பம் செய்துள்ளனர். முன்பக்க வலது ஓரத்தில் வட்ட வடிவில் உலோக முத்திரை யிட்டுள்ளனர். வட்டத்திற்குள் நட்சத்திரக் குறியும் வட்டமாக புதுக்கோட்டை சமஸ்தானம் என்றும் உள்ளது. பத்திரத்தில் காணப்படும் ஊர்களும், புதுக்கோட்டை நகரமும் அப்போது ஆலங்குடி தாலுகாவில் இருந்துள்ளது. பின் புதுக்கோட்டை சப் தாலுகா எனப் பிரித்துத் தற்போது முழு அந்தஸ்து பெற்ற தாலுகாவாக உள்ளது. பத்திரம் பெறுபவர், விற்பவர் பெயர், சாதிகள் குறிப்பாக வலயன், ராவுத்தன், துலுக்கன், மகமது மதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளன. இங்கிருந்த முஸ்லீம்கள் அனைவரும் சுமார் 100 ஆண்டுக்கு முன்னர் குடிபெயர்ந்து இன்றைய புதுக்கோட்டை நகரம் பிள்ளை தண்ணீர்ப்பந்தல் (அன்றைய நாளில் இப்பகுதி துலுக்கன் குண்டு) என்ற இடத்தில் (இன்றைய பெயர் கலீப் நகர்) வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் காலப் போக்கில் இஸ்லாம் ஆனவர்கள் (ஆக்கப்பட்டவர்கள்) என்பதற்குப் பழமைப் பெயர்களான சின்னையா ராவுத்தர், பிச்சை, சீனி என்ற சொற்களைக் கருத முடிகிறது.

நிலத்திற்குச் சர்வே எண்கள் குறிப்பிடப்படவில்லை. ஒரே சுவடியில் இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது.

## வட்டிக் கடன் பத்திரம் கி.பி. 1883

## முன்பக்கம்

1) ௲அாஅ௰௩ (1883) ஷு மே மீ ௰௯(19) உக்கிச் சரியான சுபானு ஷு வைய்யாசி மீ உ௰உ (22) புதுக்கோட்டை சமஸ்தானம் சப்டிஸ்த்திரிக் கட்டைச் சேர்ந்த ஆலங்

2) குடித் தாலுகா கவிஞடு வடக்கு வட்டம் சேர்க்கை திருமலைராய சமுத்திரத்திலிருக்கும் பண்டிதம் சேருகனி ராவுத்தர் மகன் துலுக்க சாதி மகமதியர்

3) மதம் தொழில் வயித்தியம் சவளி வியாபாரம் மகமது மீரா ராவுத்தருக்கு ஷி வட்டம் சேர்க்கை அன்ன சத்திரத்திலிருக்கும் சிலம்பன் அம்பலகாரன் மகன் வல

4) ச் சாதி, சிவ மதம் தொழில் குடுத்தனம் மண்டய நெண்டு கூப்பிட்ட செல்லக்குட்டி வட்டிக் கடன் பத்திரம் யெழுதிக் கொடுத்தபடி பத்திரமாவது யிதற்

5). க்கு முன் தாது ஷு பிறட்டாசி மீ எ (7) உ தங்களிடத்தில் நான் சவளி வாங்கின் வகையில் ரூ க (1) யென் தகப்பன் சிலம்பன் அம்பலகாரன் சவளி வாங்கினது

6) ரூ. க (1)... முக்குணாமலைப்பட்டி சின்னையா ராவுத்தரிடத்தில் நான் சவளி வாங்கி யிருந்ததில் ஷி யாருக்கு கொடுக்க வேண்டிய துகைக (1) தி

7) தங்களே யேத்துக் கொண்ட வகையில் ரூ உ (2) வகை நாளது தேதியில் நான் ரொக்கம் வாங்கின வகையில் ரூ வஹு (3/8)மீ ச ஆக வகை ச (4)ம் நாளது உ தேதியில்

## பின்பக்கம்

1) கணக்குத் தீர்ந்து தங்களுக்கு நான் கொடுக்க வேண்டியது ரூ சு (6) யிந்த ரூபாயி ஆறுக்கும் மீ க (1) ரூ க ஹவட்டி மீ வட்டி கூட்டி நிண்ணை நாளைக்கி யேருண

2) வட்டியும் முதலும் உடையாற் வேணும்போது குடுத்து யிந்தப் பத்திரத்தை வாங்கிக் கொள்வேனாகவும், யிந்த பத்திரத்துக்குச் செல்லான வி

3) ந்தப் பத்திரத்தில் தானே வரவு வயித்துக் கொள்ளுகிறது யிந்தப் பத்திரத்துககும் யிதையே வகைச் செல்லுச் சொன்ன போதிலும் யேத்துக கொ

4) ள்ளத் தக்கதில்லை யிந்த படிக்கி சம்மதிச்சு வட்டிக் கடன் பத்திரம் யெழுதிக் கொடுத்தேன் செல்லக்குட்டி சம்மதி விலாக்குடியிலிருக்கும் ஆருமுக னா

5) டாவி மகன் ஆண்டியப்பன் அறியேன். விலாக்குடியிலிருககும் ராம நாடார் மகன் தனுக்கோடி நாடார் அறிவேன். யிந்த வட்டிக் கடன் பத்திரம் யெழு.

6) தினது விலாக்குடி பறச் செல்லன் மகன் கருப்பன் கய்யெளுத்து யிந்த பத்திரத்துக்கு சா தாண்ட கூலி... ரூ விட்டுப்போனதுனால சா கண்டு சேர்த்து எழுதி இருக்குது.

7) செல்லக்குட்டி சம்மதி

குறிப்பு : ஜவுளி வாங்கியது ரூ. ஒன்று. தந்தை வாங்கியதைக் கொடுக்க முடியாத நிலை. தானும் வாங்கியதைக் கொடுக்க முடியவில்லை. நான்கு ரூபாய்க்குப் பத்திரம் எழுதிப் பதிந்துள்ளனர். இந்தப் பத்திரத்திலும்

இடது ஓரத்தில் பதிவு அலுவலகத்தினர், No. 288 of 1883 க IV 19.51883 என்று குறிப்பு எழுதியுள்ளனர். முந்திய ஓலையின் அகலத்தை விட இந்த ஓலை அகலம் குறைவாக உள்ளது. எனவே வலது ஓரத்தில் உலோக முத்திரை நீள்வட்டத்தில் இடப்பட்டுள்ளது.

## நெல்லு லாபக் கடன் பத்திரம் கி.பி. 1898

### முன்பக்கம்

*1) ௲அா௲௯அ (1898) அக்டோபர் மீ ௧௯ (19) உ புதுக்கோட்டை சமஸ்தானம் டிஸ்திரிக்கட்டு டவுன் தெற்கு ராஜவீதி பழய....யில் சந்துக்குள்ளிருக்கும் காஜி அப்துல்காதர் லெவை சாயபு அவர்.*

*2) காஜி முகமது ஜவுளி வியாபாரம் காஜி முகமது சுல்தான் லெவை சாயபு அவர்களுக்கு ஷ சமஸ்தானம் ஆலங்குடி தாலுகா சப்டிஸ்திரிக்கட்டு கவினாடு வடக்கு வட்டம் பொன்னம்பட்டி..*

*3) ம் பலகாரன் மகன் சிவ மதம் தொழில் குடித்தனம் பழனியாண்டி அம்பலகாரன் வலச்சாதி பழனியாண்டி அம்பலகாரன் எழுதிக் கொடுத்த வென்னிலை நெல்லு லாபக் கடன் பத்திரம்...*

*4) த்தில் குடும்ப செலவுக்காகவும், வாயிதாவுக்காகவும் வாங்கியது ரொக்கம் ரூ ௩௰௫(35) இந்த ரூபாய் முப்பத்தி அஞ்சுக்கும் ரூ கர நெல்லு மரக்கால் கஇ (1 1/2) வீதம் லாபம் சேர்த்து கூடிய....*

*5) ரூ ௩௰௫ (35) ம் நாலது வருஷம் மாசி மீ ௩௰ (30)க்குள் ஷ லாப நெல்லையும் முதக் காயும் (தலையடிநெல்)ஈறம் பதர் போக்கி ஒருவழியாகக் கைவரிகை பாத்து (தூர்த்தி புடைத்து, காய வைத்து) முத்திரை மரக்காலால் அள*

*6) ந்து குடுத்து இந்த நெல்லை லாபத்துடன் பத்திரம் வாங்கிக் கொள்வேனாகவும் குடுக்க தவறினால் ஆடிக் காலாவதி, வீகாப்பட்டி...*

### பின்பக்கம்

*1) ....படி லாபம் சேர்த்து உடையவர் வேண்டும்போது பணம் குடுத்து யிந்த நெல்லு லாபக் கடன் பத்திரம் வாங்கிக் கொள்வேனாகவும்*

*2) ச செல்ந்து சொன்னபோதிலும் ஏத்துக் கொள்ளத் தக்கதில்லை. இந்த பத்திரத்துக்கு நேரிடும் ரஜிஸ்தர் சிலவு நானே ஒத்துக் குடுப்பேனாகவும்... என் மனோ ராசி...*

*3) ட்டு இந்த நெல்லு லாபக் கடன் பத்திரம் எழுதிக் கொடுத்தேன். இந்த கீரல் பழனியாண்டி அம்பலகாரன் சம்மதி. திருமலைராய சமுத்திரத்திலிருக்கும் ப. சேகுக்கனி சம்...*

*4) புதுக்கோட்டையிலிருக்கும் மீரா ராவுத்தர் மகன் பிச்சை ராவுத்தர் அரிவேன் ஷ யூரிலிருக்கும் சாமிநாதன் மகன் காமாட்சி... அரிவேன் ஷ யூரிலிருக்கும்*

*5) இந்தப் பத்திரம் எழுதியது ஷியூரிலிருக்கும்.... சாமி சேர்வை மகன் துரைச்சாமி*

## குறிப்பு

*இந்தப் பத்திரத்தின் இடது பக்க ஓரத்தில்... 1898 of.............No. 4.................98 என்றுள்ளது. மீதப் பகுதி சேதமடைந்துள்ளது. பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் உலோக முத்திரை எதுவுமில்லை. தை, மாசி அறுவடை காலத்தில் நெல் தருவதாக மார்கழி தை மாதம் கடன் பெறுகின்றனர். "கார்த்திகை மாதத்துப் பஞ்சம் கண்ணைப் பறிக்குது" என்ற பழமொழி, விவசாயிகளுக்குப் பொருந்தியுள்ளதை அறியலாம். வாயிதா கட்டவும், குடும்பம், விவசாயச் செலவிற்காக ரூ. 35/ க்கு கடன் வாங்க வேண்டிய நிலைமை நிலவியுள்ளது. கடன் கொடுத்தவர், நெல்லைப் பதராகக் கொடுத்து விடுவார்களோ என்பதற்காக முதல் காய் (தலையடி) ஈரம், பதர் போக்கி (காய வைத்து, தூற்றி, புடைத்து) ஒருவழியாகக் கை வரிசை பாத்து, முத்திரை மரக்காலால் (அப்போது சமஸ்தானத்தில் மரத்தாலான மரக்கால், முத்திரைப் படி வழக்கத்தில் இருந்தது) அளந்து தரும்படி கூறுகிறது.*

## போதுக் குறிப்பு

*புதுக்கோட்டை டவுன் வட்டம் பொன்னம்பட்டிக் கிராமத்தில், முத்தரையர் ஊர் அம்பலகாரர் வம்சாவழியினரானவரும் 1 ஆ[illegible] பட்டாதாரருமாகிய, மூன்றாவது தலைமுறை திரு. சு. பழனியப்பன் அவர்களிடமிருந்து இவ்வேலைகள் பெறப்பட்டன. [illegible] சுவையான செய்திகளைக் கூறும் சுவடிகளும் உள்ளன. 1-ஆம் நம்பர் பட்டாதாரரும், ஊர் அம்பலகாரருமாகியவரே இந்த நிலையில் இருந்தால், பிற மக்களின் வாழ்க்கை நிலை எப்படி இருந்திருக்கும்?*

*மேற்கண்ட ஆவணங்களின் காலத்தில், ராஜா ராமச்சந்திர தொண்டைமான் பகதூர் (கி.பி. 1839–1886)ம் மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் பகதூர் (கி.பி. 1886–1928) ஆகியோர் ஆட்சி செய்துள்ளனர்.*

*ராஜா ராமச்சந்திரத் தொண்டைமான் பகதூர் (கி.பி. 1839 1886) பட்டத்தினை ஏற்றபோது வயது 9 ஆகும். எனவே ஒரு குழுவே அரசு நிர்வாகத்தைக் கவனித்தது. 1844ல் மன்னர் தானே ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். இவரது காலத்தில் நிர்வாகச் சீர்கேடுகள் நிகழ்ந்தன. பொது மக்கள் கிளர்ச்சி நடத்தினர் (10) நிர்வாகத்தில், தஞ்சாவூர் மதுரை கலெக்டர்களை வெள்ளையர் ஈடுபடுத்தினர், இவர்களின் கட்டுப்பாட்டில் மன்னர் செயல்பட்டு வந்துள்ளார். கடனாளியானார். ஆங்கிலேயர் 1857ல் "ஹிஸ் எகுஸலன்சி" விருதைப் பறித்தனர். மிகக் குறைந்த வரியே விதிக்கப்பட்டிருந்தும், பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது.*

(தொடர்ச்சி பக்கம் 8–இல்)

சென்ற இதழ்த் தொடர்ச்சி....

# திருமுருகாற்றுப்படையின் ஆசிரியர்



- முனைவர் பே.க. வேலாயுதம்

இந்த ஆயிரக்கணக்கான பேரண்டங்களை முறைப்படுத்தி இயங்கவைப்பது எது?

ஒன்பது கோள்களை இயக்கிக்கொண்டிருக்கும் சூரியனிலுள்ள சக்தியா? இல்லை.

நமது பேரண்டத்திலுள்ள பத்தாயிரங் கோடி (10000000000) நட்சத்திரங்களை மோதிக் கொள்ளாமல் முறைப்படி இயக்கும் பரந்த சக்தியா? பராசக்தியா? அதுவும் இல்லை.

அதனினும் காலத்தால் பழமையான பரந்த சக்தியாகிய ஆதி பராசக்திதான் ஆயிரக் கணக்கான பேரண்டங்களையும் அழகாக இயக்குகிறது.

அகன்ற வானத்துள்ளே ஆதிபராசக்தி இருப்பதால் அது சிவனுக்கு மகளாக உருவாக்கப்பட்டது. அவ்வாதி பராசக்தி பேரண்டங்களைத் தோன்றச் செய்து இயக்குவதால் ஆடுஞ் சிவனுக்குத் தாயாக்கப்பட்டது.

இவ்வாறு தத்துவங்கள் விரிந்துகொண்டே செல்கின்றன. இவை ஆரியர் அறியாதவை. ஆரியர் இந்தியாவில் பரவும் முன் இந்தியா முழுவதும் வழக்கிலிருந்த கடவுள் வழிபாடு இதுதான். பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய மூவரும் ஆரியக் கடவுளர் அல்லர். அவர்கள் ஆரியரல்லாதார் கடவுள்கள்.

வானமோ உருவமற்றது. எனவே, (ஓகநிலைச்) சிவன் உருவமற்றவன் என்றே தத்துவம் பேசும். உண்மைதான். ஆனால் மக்களின் வழிபாட்டிற்கு ஓர் உருவம் தேவைப்பட்டதே. அதனை நிறைவு செய்வது சமுதாயச் சான்றோர் கடனல்லவா? சிற்ப நுட்பம் செழித்தோங்காத அக்காலத்தில் ஓர் எளிய உருவத்தைக் குறியீடாக அல்லது இலிங்கமாக அமைத்தனர். தென்பால் பிரமனையும் வடபால் திருமாலையும் நடுவில் சிறிது உயரமாக உருத்திரனையும் அமைத்துச் சேர்ந்துள்ள சிவனுக்கு விளக்கந் தந்தனர். அதனால் அது சிவலிங்கம் எனப்பட்டது.

உண்மைச் சிவனோ அருவமானவன். அதனை அருவ நிலை என்கிறோம். கண், காது, மூக்கு முதலிய உறுப்புக்களோடு அமர்ந்த நிலை உருவ நிலை. சிவலிங்கத்திலோ அருவமும் இல்லை; கண், காது முதலிய உருவமே இல்லை. எனவே, சிவலிங்கம் அருஉருவ நிலை எனப்பட்டது.

இலிங்கத்தின் இந்நுட்பம் உணராத சப்த சிந்து ஆரியர் சிந்து வெளி மக்களின் சிவ வழிபாட்டைச் 'சிசுண தேவ' (ஆண்குறி வழிபாட்டினர்) என இழித்தனர். பின்னே வந்தவர்களும் கீழ்ப் பகுதியைப் பெண்குறி எனப் பிறழ உணர்ந்தனர். அவர்களே பின்னர் இவ் வழிபாட்டை ஏற்றுக்-கொண்டபோது வெவ்வேறு தத்துவங்கள் உணர்ந்தனர். இது ஒரு நிலை.

மற்றொரு நிலையையும் சுருக்கமாகக் காணலாம்.

சப்தசிந்து பகுதியிலிருந்து இந்தியாவிற்குள் புகுந்த ஆரியர்கள் அத்தினாபுரி, பிரதிஷ்டானம், மதுரை, மேற்குப் பகுதியில் துவாரகை, கிழக்குப் பகுதியில் கோசலம், மகதம், விதேகம், அங்கம், வங்கம், வைசாலி முதலிய எண்ணிறந்த பேரரசுகள் செம்மாந்து ஆட்சிபுரிபவதைக் கண்டனர். இவையெல்லாம் ஆரிய அரசுகள் அல்ல என்பதை மறந்துவிடக் கூடாது.

புகுந்த நிலையில் தங்களைப் படைப் பயிற்றுநராக ஆக்கிக் கொண்டு அரசாங்கப் பணியில் ஈடுபட்டனர். அவ்வாறு அத்தினபுரியில் அமர்ந்தவர்களே கிருபாச்சாரியாரும் துரோணாச்சாரியாரும். அரண்மனையில் ஆரியக் கலப்பு நிகழ்ந்தது என்பதற்குத் திருதராஷ்டிரனுக்கும் பாண்டு-விற்கும் விதுரனுக்கும் வியாசர் தந்தையாக அமைந்ததே தக்க சான்று.

திரும்பும் இடமெல்லாம் வளமான வாழ்க்கையைக் கண்ணால் கண்டனர். தங்களை உயர்த்திக்கொள்ளத் திட்டமிட்டனர். அதன் விளைவாகத் தங்கள் வாழ்க்கையில் பல மாற்றங்களைத் துணிந்து ஏற்றுக் கொண்டனர்; செயலிலும் கொண்டுவந்தனர்.

## மொழிமாற்றம்

சப்த சிந்து பகுதியில் தாங்கள் பேசிய வைதிக மொழியைக் கைவிட வேண்டிய சூழல் அமைந்தது. அதையும் செய்யத் துணிந்தனர். உள்நாட்டில் வழக்கிலிருந்த (வடதமிழ்) மொழியைச் செப்பம் செய்து அதற்குச் 'சமஸ்கிருதம்' = (நன்றாகச் செய்யப்பட்டது) என்ற பெயரையும் சூட்டினர். அது 'தேவலோக மொழி' என உயர்வும் கற்பித்தனர். சமஸ்கிருதத்திற்கு மூலமாய் இருந்த மொழியைப் 'பிராகிருதம்' (முன்னர்ச் செய்யப்பட்டது அல்லது இயற்கையானது) என்றனர். காலஞ் செல்லச் செல்ல, சமஸ்கிருதத்திற்கு உயர்வு தேடும் பொருட்டு வரலாற்றையே மாற்றிப் 'பிராகிருதம்' என்பது சமஸ்கிருதத்தின் சிதைந்த நிலை என்ற எண்ணத்தையும் கருத்தையும் பரப்பினர். இவ்வாறு வடதமிழ் என்ற பெயர் மறைந்து பிராகிருதம் என்ற பெயர் அமைந்தது.

மேலே ஆரியர்கள் வைதிக மொழியைக் கைவிட வேண்டிய சூழல் அமைந்ததைச் சொன்னோம். முற்றிலும் கைவிடத் தமிழர்களா, என்ன? முற்றிலும் கைவிடவில்லை. கிருஷ்ணத்வைபாயணர் என்னும் வேதவியாசர் தம் இன மக்கள் சென்ற இடமெல்லாம் சென்று

ஆரியரிடையே வழங்கிய பாடல்களைத் தொகுத்தார். அதற்கு 'இருக்குவேதம்' எனப் பெயரிட்டு, சிறந்த மாணவர்களைப் பொறுக்கி-யெடுத்துப் பரம்பரை பரம்பரையாக ஓதிவர ஏற்பாடு செய்தார். அது ஓதும் முறையை ஆறு அங்கங்களைக் கொண்டு காப்பாற்ற ஏற்பாடாயிற்று.

ஆனால் ஒன்று. வைதீக மொழி வேறு; சமஸ்கிருத மொழி வேறு என்பதனைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளல் வேண்டும்.

## தெய்வ மாற்றம்

இந்தியாவில் புகுந்த ஆரியர்கள் இமயம் முதல் குமரி வரை சிவ வழிபாட்டையே கண்டனர். அதனை அழிக்க முடியவில்லை. முடிந்தால் அழிப்பது, முடியாதபோது தாம் அவற்றை மேற்கொண்டு சில மாற்றங்களைச் செய்துகொண்டு அவையெல்லாம் தம்முடையன என உலகவரை நம்பவைப்பதே ஆரியர் வாழ்க்கை நெறி.

எங்கும் பரவி நின்றது சிவநெறி. கொல்லாமையை மேற்கொண்டது. ஆனால், ஆரியர் மேற்கொண்டிருந்த வைதிக நெறியோ உயிர்க்கொலை புரியும் வேள்வியை மையமாகக் கொண்டது. முதலில் சிவனின் செல்வாக்கை அழிக்க முடியாது எனக் கண்ட ஆரியர் தாங்கள் வணங்கிய இந்திரன் முதலாய கடவுள்களை இந்தியக் கடவுள் தத்துவத்தோடு இணைத்துக்கொண்டனர்.

தங்கள் தோற்றப் பொலிவை வைத்துக்கொண்டு அரசப் புரோகிதராக மாறினர். அரசர்களைத் தங்கள் கைகளில் வைத்துக்கொண்டனர். அடுத்து, அரசர்களின் துணையோடு உயிர்க்கொலை நிறைந்த யாகங்களைப் பேரளவில் இயற்றினர். சிவனின் செல்வாக்கை அழிக்கத் திட்டமிட்டு, சிவனுக்கு எதிராகத் திருமால் நெறியை வழக்கிற்குக் கொணர்ந்து, உயர்த்திச் சிவநெறியோடு மோதவிட்டனர். இவ்வகையில் தோன்றியதுதான் வான்மீகி இராமாயணம்.

## எண்ணத் தகும் சில சான்றுகள்

இராமாயணம் வானியல் அடிப்படையில் அமைந்த புராண - தமிழ்க் கதை. தசரதனின் சொந்த மகளே சாந்தை; இருசிய சிருங்கனின் மனைவி. யாகத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவே தசரதனுக்குப் பிள்ளைப் பேறு இல்லை என்னும் கதை. புத்திர காமேஷ்டிக்கும் அசுவமேதத்திற்கும் தொடர்பில்லையென்றாலும் இரண்டையும் செய்ததாகக் கூறுவது. சப்தசிந்துவில் வாழ்ந்த வசிட்டனை அயோத்தியில் குலகுருவாகக் காட்டுவது. இராமன் கால் தூசி பட்டாலும் புண்ணியம் என எண்ணவைப்பது. எத்துணைக் கொடுமை செய்திருந்தாலும் இராமன் மெய்தீண்டினால் பாவம் நீங்கிப் புண்ணியம் சேரும் என நம்ப வைப்பது போன்ற செய்திகள் சமுதாயக் கட்டுக்கோப்பைக் கலைத்தன.

தீமையைத் தெரியாமல் செய்தாலும் அதற்குரிய பாவம் உன்னைச் சாரும் என்ற நினைப்பினால் கட்டுக்கோப்பாய் இருந்த இந்தியச் சமுதாயத்தில் எத்தகைய தீமை செய்தாலும் ஈடேற்றம் உண்டு என்ற எண்ணம் வந்தது. அதனால், தீமை செய்ய யாரும் தயங்கவில்லை. சைவநெறியை விடாது பின்பற்றிய சிவநெறிச் செல்வர்களே சமணர் என்னும் பெயரில் இவ்வேதநெறியாகிய வேள்வி நெறியை எதிர்த்தனர். வேள்விநெறி நிறைவேற வேந்தர்களும் துணைநின்றனர். இவை ஒருபாலிருக்க, வேதத்தையே கடவுளாக எண்ணி ஒரு மதம் தோன்றியது. தமிழ்நாட்டில் அவ்வேதவாதம் பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை இருந்தது என்பதற்கான சான்றுகள் கிடைக்கின்றன.

தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களும் (உயர்ந்தவர்களும்) பஞ்சகச்சங் கட்டிக்கொண்டு வேதமொழி தங்களுக்கே உரியது எனக் காட்டிக்கொண்டு சிவனையேயன்றி வேறு தெய்வங்களின் சிறு செயல்களையும் விரித்து உரைத்ததையே

"கச்சங் கொண்டு, கடுந்தொழில் முடியாக்
கொச்சைத் தேவரைத் தேவரென்று எண்ணிப்
பிச்சரைப் போலவோர்
ஆரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று
வட்டணை பேசுவர்"

என்ற பகுதியில் சுருக்கமாக உரைக்கின்றார்.

இவர் உரைக்கும் கொச்சைத் தேவரில் முருகனும் அடங்குவான் என்பது வெளிப்படை. அத்தகைய கொச்சைத் தேவனாகிய முருகனையோ திருமால் முதலாய பிறரையோ சிறப்பித்து எந்த நூலிலும் பாடவில்லை. ஆகையால், முருகனை முழுமுதல் கடவுள் போலச் சிறப்பித்துப் பாடியுள்ள திருமுருகாற்றுப்படை நக்கீரதேவ நாயனாரால் பாடப்பட்டது அன்று என்பது தெளிவு.

## முருகாற்றுப்படையில் முரண்

திருமுருகாற்றுப்படையில் பிரமன் திருமால் சிவன் ஆகியோர் முதன்மை பெறுவதற்காகவே முருகன் தோன்றினான் என்னும் செய்தி (திருமுருகு 160 165) நக்கீரதேவ நாயனாரின் கொள்கைக்கே முற்றிலும் முரணான செய்தியாகும்.

இதுகாறும் கூறியவற்றால் கடைச் சங்கச் சூழலுக்கு ஏற்றவாறு மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் திருமுருகாற்றுப்படையை இயற்றினார். சைவத்தின் மறுமலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்த நக்கீரதேவ நாயனாரோ சிவனையன்றிப் புறந்தொழாச் செம்மை மனத்தினராய் வாழ்ந்துள்ளார் என்பதே உண்மையாகும். திருமுருகாற்றுப்படைக்கு நக்கீரதேவ நாயனாரை ஆசிரியராக்குவது சிறிதும் பொருந்தாது.

(நிறைந்தது)

சென்ற இதழ்த் தொடர்ச்சி....

# சோழமாதேவி கைலாயமுடையார் திருக்கோயில்



-- கி. ஸ்ரீதரன்

சோழமாதேவி கோயில் கல்வெட்டில் கரடிகை, மத்தளம், சங்கு, காளம் என்ற இசைக் கருவிகள் குறிக்கப்படுவது சிறப்பாகும். கரடிகை ஒன்றும், மத்தளம் இரண்டும், சங்கு இரண்டும், காளம் நான்கும் ஆக மொத்தம் ஒன்பது இசைக் கருவிகள் நாள்தோறும் வாசிக்கப்பட்டதை அறியும் பொழுது இக்கோயிலில் எவ்வளவு சிறப்பாக வழிபாடு நடந்திருக்க வேண்டும் என்பதை நம்மால் உணர முடிகிறது. இராஜேந்திர சோழன் காலத்திய 2-ஆவது, 3-ஆவது, 20-ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகளும் இக்கோயிலில் காணப்படுகின்றன. சந்திவிளக்கு எரிக்கத் தானம் அளித்த செய்தி ஒரு கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. இவன் பிறந்தது திருவாதிரை நாளாகும். அதைக் குறிக்கச் சித்திரை மாதத்தில் 7 நாட்கள் திருவாதிரை விழா இக்கோயிலில் கொண்டாடப்பட்டது.

இராஜேந்திரனுடைய கல்வெட்டில் ஊர்வாரியம், உய்யக்கொண்டான் ஆற்று வாரியம் என்ற அமைப்புகளின் பெயர்கள் காணப்படுகின்றன. காவேரிப்பாக்கம் கல்வெட்டில் ஏரிவாரியம், கலிங்குவாரியம், கழனிவாரியம் முதலிய அமைப்புகள் இருந்ததாக அறிகிறோம். சோழமாதேவி கோயிலில் ஆற்றுவாரியம் என்ற அமைப்பினைக் குறிப்பது ஒரு சிறப்பாகும். உய்யகொண்டான் ஆற்றுக்கரையில் இவ்வூர் அமைந்திருப்பதால் இங்குள்ள நிலங்களுக்கு நீர் முறையாகப் பாய்வதற்கு இந்த அமைப்பு செயல்பட்டிருக்க வேண்டும்.

இக்கோயிலில் உள்ள வீர ராஜேந்திரசோழனுடைய கல்வெட்டு மேலும் முக்கியமானதொரு செய்தியைத் தருகிறது.

## கல்வெட்டு வரிகள்

"பாண்டியகுலாசன வளநாட்டு பிரம்ம தேயம் ஸ்ரீ சோழமகாதேவி சதுர்வேதி மங்கலத்து பெருங்குறிசபையோம் திருமாதிரி நல்சாலை ஆழ்வார் திருமுற்றத்தவக் கூட்டம் குறைவறக் கூடியிருந்து பணிப்பணியால் பணித்து பகவத் பாதீயம் சாரீரக பாஷ்யத்திற்கு சிதாநந்தபடாரர் பண்ணின பிரதிபகம் ஆகிறவார்த்தீகம் வக்கணிப்பார்க்கு விருத்தியாக விட்ட நிலம்"



சோழமாதேவி ஊர்சபையார் சங்கரபகவத் பாதாள் அருளிய பாஷ்யத்துக்கு சிதாநத்படரார் என்பவர் எழுதிய பிரதீபகம் என்னும் உரையை இவ்வூரில் விரிவுரை செய்பவர்களுக்கு நிலம் தானம் அளிக்கப்பட்டிருக்கிறது. வேதாந்தங்களின் தத்துவப் பொருளை ஆய்வு செய்யும் சாஸ்திரத்திற்கு சாரீகமீமாம்சை என்று பெயர். ஆதிசங்கர பகவர் பாதாள் பிரம்ம சூத்திரத்திற்கு தாம் எழுதிய பாஷ்யத்தை சாரீக மீமாம்சை என்றே குறிக்கிறார். அதையே இக்கல்வெட்டு சாரீக மீமாம்சை என்றே குறிக்கிறது. இக்கல்வெட்டில் 'பகவத்பாதீயம் சாரீரக பாஷ்யம்' எனக் குறிப்பிடப்படுகிறது.

சங்கர பாஷ்யத்திற்கு சிதாநந்தர் என்பவர் விரிவுரை ஒன்று எழுதியிருக்கிறார். அதற்குப் பிரதீபகம் என்றும் வார்த்தீகம் என்றும் பெயர். கி.பி. 8–ஆம் நூற்றாண்டின் மத்தியில் சிதானந்தர் என்பவர் காஞ்சி சங்கர மடத்தில் 36–ஆவது குருவாக அலங்கரித்துள்ளார். எனவே ஆதிசங்கரரையும், அவரது பாஷ்யத்தையும் குறிக்கும் மிகவும் தொன்மையான ஆதாரபூர்வமான கல்வெட்டு இதுவேயாகும். இராஜராஜசோழனுக்கு பல தேவியர்கள் இருந்தனர். அவர்களுள் சோழமாதேவி என்ற தேவி தஞ்சைப் பெரிய கோயிலுக்கு ஆடவல்லான், ரிஷபவாகனர் போன்ற செப்புத் திருமேனிகளை வழிபாட்டிற்காக செய்தளித்துள்ளாள். அவள் பெயரிலேயே இவ்வூர் 'சோழமகாதேவிச் சதுர்வேதிமங்கலம்' என அழைக்கப்பட்டிருக்க வேண்டும். தஞ்சைப் பெரிய கோயிலுக்கு மெய்க்காப்பாளராகவும், திருப்பரிசாரகம் செய்யும் ஆட்களை அனுப்பி வைத்த ஊர்களில் சோழமாதேவிச் சதுர்வேதி மங்கலமும் ஒன்று என்பதை தஞ்சைக் கோயில் கல்வெட்டில் அறிகிறோம்.

இவ்வூரைப் பற்றிய குறிப்புகள் திருவெறும்பூர், கூத்தப்பார், திருப்பாலத்துறை ஆகிய கோயில் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. வரலாற்றுச் சிறப்புமிக்க கல்வெட்டுகள், சிற்பங்கள் கொண்ட இக்கோயிலைத் தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறை ஆய்வு செய்து கல்வெட்டுகளைப் படியெடுத்து, இக்கோயிலின் சிறப்பை வரலாற்று உலகுக்கு வெளிப்படுத்தியது.

1990ஆம் ஆண்டு இக்கட்டுரையின் ஆசிரியர் கோயிலை ஆயவு செய்தபொழுது கோயிலைச் சுற்றியும், கோயிலின் மீதும் செடிகள் வளர்ந்து பாழ்பட்ட நிலையில் இருந்தது. இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மைய இயக்குநர் மருத்துவர் இரா. கலைக்கோவன் அவர்களின் ஆதரவுடன், சீதாலட்சுமி இராமசாமி கல்லூரி நாட்டுநலப் பணிதிட்ட மாணவர்களுடன் இணைந்து செடிகளை அகற்றி கோயிலைத் தூய்மை செய்தது. திருச்சி வானொலி, கிராமத்துக் கோயில்கள் நிகழ்ச்சியில் இக் கோயிலின் சிறப்பு பற்றி ஒலிபரப்பு செய்தது. அப்போதைய தொல்லியல் இயக்குநர் திரு. நடன. காசிநாதன் இக்கோயிலுக்கு வருகை தந்து,

வரலாற்றுச் சிறப்பு மிக்க இக்கோயிலை தொல்லியல் துறையே ஏற்றுப் பராமரிக்க நடவடிக்கை எடுத்தார். பின்னர் தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்த ஒரு லட்சம் தொகையைக் கொண்டு கோயில் புணரமைக்கப்பட்டது. இடிந்திருந்த அம்மன் கோயில் மீண்டும் தொன்மைச் சிறப்பு குறையாமல் பாதுகாக்கப்பட்டது. கோயிலின் கிணறு பராமரிக்கப்பட்டது.



உலக மரபு வார விழா இக்கோயிலில் தொல்லியல் துறையின் திருச்சி அலுவலகத்தால் நடத்தப்பட்டது. இக்கோயிலின் தொன்மை வரலாற்றுச் சிறப்பினை அறிந்த காஞ்சி சங்கராச்சாரியார் ஜகத்குரு விஜயேந்திரர் அவர்கள் அண்மையில் இக்கோயிலுக்கு விஜயம் செய்து இக்கோயிலைத் திருப்பணி செய்ய உதவி செய்வதாகக் கூறியுள்ளார். (படம் - விஜயேந்திரரிடம் தொல்லியல் துறைப் பதிவு அலுவலர் திரு. கி. ஸ்ரீதரன் – இக்கட்டுரை ஆசிரியர் – கல்வெட்டு பற்றி விளக்குகிறார்) வரலாற்றுச் சிறப்பு மிக்க சோழமாதேவி கைலாய முடையார் கோயிலைப் போற்றி பாதுகாப்போம்! பெருமை கொள்வோம்!

## இக்கோவிலில் காணப்படும் கல்வெட்டுகள்

**கல்வெட்டு - 1 :** கருவறை வடக்குச் சுவர் – முதலாம் இராஜேந்திரன் – 3–ஆவது ஆட்சி ஆண்டு–சித்திரை மாதம் திருவாதிரை 7 நாட்கள் திருவிழா நடைபெற்ற செய்தி. பெருங்குறிச்சபை திருச்சுற்றுக்கல்லூரியில் நடைபெற்ற செய்தி கூறப்படுகிறது.

**கல்வெட்டு - 2 :** கருவறை வடக்குச்சுவர் – முதலாம் இராஜராஜன் – 8–ஆவது ஆட்சி ஆண்டு – இவ்வூர் மத்யஸ்தன் நந்தவனம் அமைத்து அதன் பராமரிப்புக்காக நிலங்கள் நந்தவனப்புறமாக அளித்த செய்தி சுப்ரமணியவதி, திருநாராயணவாய்க்–காலின் கண்ணாறு ஆகியவை குறிக்கப்படுகின்றன.

**கல்வெட்டு - 3 :** கருவறை – வடக்குச்சுவர் – முதலாம் இராஜராஜன் 15–ஆவது ஆட்சி ஆண்டு – ஊரின் மைய இடமான பிரம்மஸ்தானம் இராஜராஜன் என்ற மண்டபத்தில் கூடி ஊர்ச் சபையினர் முடிவெடுத்தனர். இவ்வூரில் இருந்த வீரசோழ விண்ணகர் பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவி ஆகிய திருமேனிகளுக்கு வழிபாடு செய்ததைப் பற்றியும் குறிப்பிடுகிறது. ஊர் மைய இடம் பிரம்மஸ்தானம் இராஜராஜனின் பெயரில் இருப்பதால் இச்சதுர்வேதிமங்கலம் அவன் காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும்.

**கல்வெட்டு - 4 :** கருவறை – வடக்குச்சுவர் – முதலாம் இராஜராஜன் – 26–ஆவது ஆட்சி அண்டு – ஊரின் வடக்கில் இருந்த ராஜராஜன் என்ற பெயருடைய தண்ணீர்ப் பந்தலில் கூடி எடுத்த முடிவு பற்றிய கல்வெட்டு. இக்கோயிலிலும், திருமால் கோயிலிலும் 'பஞ்ச மகா சப்தம்' (கரடிகை, மத்தளம், சங்கு, காளம், மிடறு) செய்யத் தானமளித்ததைக் கல்வெட்டு குறிக்கிறது.

**கல்வெட்டு-5:** கருவறை – மேற்குச்சுவர் – முதலாம் இராஜராஜன் – 19–ஆவது ஆட்சி ஆண்டு. சோழமாதேவி சபையினர் பிரம்மஸ்தானம் ராஜராஜனில் கூடி உவச்சுப்பணி செய்ய நான்கு சகோதரர்களை நியமித்த செய்தி கூறப்படுகிறது.

**கல்வெட்டு-6 :** கருவறை – மேற்குச்சுவர் – இராஜராஜசோழன் – 8–வது ஆட்சி ஆண்டு. வீரசோழ இளங்கோவரையர் தேவி ஆதித்தபடாரி என்பவர் தானமளித்த செய்தி.

**கல்வெட்டு-7 :** கருவறை – தெற்குச் சுவர் – காந்தலூர் சாலை கலமறுத்த – இராஜராஜன் – 13–ஆவது ஆட்சி ஆண்டு– சோழமாதேவி சதுர்வேதி மண்டல சபையார் பேரம்பலம் ராஜராஜனில் கூடி எடுத்த முடிவு பற்றிய செய்தி

**கல்வெட்டு-8 :** கருவறை – தெற்குச் சுவர் – இராஜேந்திரசோழன் – 2–ஆவது ஆட்சி ஆண்டு – விளக்கெரிக்கக் கொடுத்த தானம் பற்றிய செய்தி.

**கல்வெட்டு-9 :** கருவறை – அர்த்தமண்டபச் சுவர் தெற்கு – வீரராஜேந்திரன் கல்வெட்டு – ஆதிசங்கரர் பாஷ்யம் பற்றிய செய்தி கூறும் முக்கியமான கல்வெட்டு.

**கல்வெட்டு-10 :** கருவறை – அர்த்தமண்டபம் வடக்குக் குமுதம் – இராஜேந்திரன் – நிலமளித்த செய்தி.

**கல்வெட்டு-11:** கருவறை – வடக்குப் பட்டிகை – நெல் அளிக்கப்பட்ட செய்தி.

**கல்வெட்டு-12:** கருவறை – அர்த்த மண்டபம் – வடக்குக் குமுதம் இராஜேந்திரன் – 20–ஆவது ஆட்சி ஆண்டு.

**கல்வெட்டு-13** கருவறை – மேற்குப் பட்டிகை – இராஜேந்திரன் – 7–ஆவது ஆட்சி ஆண்டு – ஆற்று வாரியம் பற்றிய செய்தி.

**கல்வெட்டு-14:** கருவறை – மேற்குச்சுவர் – ஜகதி – குமுதப் படை – இராஜேந்திரசோழன் – கல்வெட்டு.

**கல்வெட்டு-15:** கருவறை – மேற்குசுவர் – பட்டிகை – உய்யக்கொண்டான் ஆற்றுவாரியம் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு.

**கல்வெட்டு-16:** கருவறை – தெற்குச்சுவர் – பட்டிகை – இராஜராஜன் கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

## அடிக்குறிப்பு

1. இக்கோயிலை முதல் ஆய்வு செய்தவர் தற்போதைய இயக்குநர் திரு. அ. அப்துல் மஜீத் மற்றும் திரு. நாக. கணேசன் காப்பாட்சியர் கரூர்.
2. 1990–இல் இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து ஆய்வு மேற்கொண்டவர்கள் திரு. கி. ஸ்ரீதரன், திரு. மே. சீனிவாசன் இ.நி. கல்வெட்டாய்வாளர் – கல்வெட்டு ஆய்வுக்கு உதவியவர்கள் முனைவர் சு. இராஜகோபால், வெ. வேதாசலம் – முனைவர் பத்மாவதி.
3. கல்வெட்டுக்களைப் பற்றி ஆய்வுக் கட்டுரை தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும், இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மையத்திலும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலும், படிக்கப்பெற்றது. தொல்லியல் துறை சென்னை தலைமை அலுவலத்தில் சொற்பொழிவும் இக்கட்டுரை ஆசிரியரால் நிகழ்த்தப்பட்டது.
4. இக்கோயில் பற்றித் தொல்லியல் துறைக்கு தெரிவித்தவர் சோழமாதேவி திரு. ஜி. லூயிஸ்.
5. இக்கோயிலின் கட்டிட தொன்மைச் சிறப்பு குறையாமல் திருப்பணி செய்தவர் தொல்லியல் துறைப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் – செயற்பொறியாளர் திரு. முத்துகாமாட்சி, இ.நி. பொறியாளர், திரு. கோ. தேவராஜ், திருமதி சீ. கமலா, ஸ்தபதி வே. இராமன்.
6. இக்கோயிலின் கட்டிடக் கலைச் சிறப்பினை ஆய்வு செய்தவர் ஸ்தபதி வே. இராமன், தொல்லியல்துறை. திருச்சி.
7. இக்கோயிலின் கல்வெட்டுக்களைப் படியெடுக்க உதவியவர்கள் திரு. சு. நடராசன் இ.நி. உதவியர், திரு. ப. இராசேந்திரன் அலுவலக உதவியர், பதிவு அலுவலர் அலுவலகம், திருச்சி.

(நிறைந்தது)



சென்ற இதழ்த் தொடர்ச்சி....

# கொங்கு மலைகளில் சமணர் தவப்பள்ளிகள்



- ஆர். பூங்குன்றன்

## பெருவழிகளும் சமணப் பள்ளிகளும்

கொங்குநாடு பெருவழிவளம் பெற்ற நாடு. சமணப் பள்ளிகளும் வாழ்விடங்களும் பெருவழிகளுக்கு அருகிலேயே உருவாக்கப்பட்டன. இன்று தேசீயப் பெருவழியாக விளங்கும் 7–ஆம் எண் பெருவழி அசோகர் காலத்திற்கு முன்பிருந்து வழக்கத்தில் உள்ள பெருவழி. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தில் இப்பெருவழிபற்றிக் குறிக்கப் பெறுகின்றது. அப்பெருவழிக்குத் தட்சிணபதம் என்று பெயர். கங்கை நதிப் புறத்திலிருந்து சாதவாகனர் தலைநகரான பைதான், யவனர் வாழ்ந்த பிரம்மசிரி, சந்தவெல்லி, அதியமான் தகடூர், சேரர் கருவூர் மதுரை வழியாக ராமேசுவரம் சென்றடைந்தது. இப்பெருவழியில் ஈழம், கொங்கு நாட்டுப் படியூர் ஆகிய ஊர்களில் கிடைத்த வைடூர்யம் கொண்டு வரப்பெற்றதாகக் கௌடில்யர் அர்த்த சாஸ்திரத்தில் எழுதியுள்ளார்.

அப்பெருவழியில் ஆர்நாட்டார்மலை சமணப் பள்ளி, செந்நாக்–குன்றுப்பள்ளி அர்த்தநாரிப்பாளையம் பள்ளி, குந்தி அம்மன் மலைப்பள்ளி (தருமபுரி) ஆகிய மலைப் பள்ளிகள் அமைந்துள்ளன. பெருவழிகள் பௌத்த, சமணப் பள்ளிகளுடன் நெருங்கிய தொடர்புடையன. வடமேற்கு தக்கணத்தில் பௌத்த விகாரைகள் நூற்றுக்கும் அதிகமாக உருவாக்கப் பெற்றுள்ளன. இந்த விகாரைகள் மேற்குக் கடற்கரையிலிருந்து தக்காணத்–திலிருந்த சாதவாகனர் வாணிக நகரங்களை இணைக்கும் பெருவழிக்–க்ருகிலேயே அமைந்திருந்தன. இந்த விகாரைகள் பற்றிப் பெருங் கதையிலும் குறிக்கப் பெற்றுள்ளது. பெருவழியில் செல்லும் வணிகர்கள் இந்த விகாரைகளில் தங்கிச் சென்றனர். இந்தப் பின்னணியில் கொங்கு மலைச் சமணப் பள்ளிகளின் இருப்பிடத்தை அணுக வேண்டும்.

பாலக்காட்டுக் கணவாயிலிருந்து பிரிந்து செல்லும் மூன்று பெருவழிகள் தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையைச் சென்றடைந்தன. இவற்றில் ஆனைமலை, திருமூர்த்திமலை, ஐவர்மலை ஆகிய மலைகளின் அருகிலேயே இன்றும் ஒரு பெருவழி செல்கிறது. இப்பெருவழி அருகிலேயே உரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன. வடபூதிநத்தம், ஆனைமலை கலையமுத்தூர் ஆகிய ஊர்களில் இரண்டாயிரம் உரோமானியக் காசுகளைக் கண்டெடுத்துள்ளனர். அதனால் இப்பெருவழி, சங்க

காலத்திற்கு முன்பிருந்தே வழக்கத்தில் இருந்திருக்க வேண்டும். இடைக்காலக் கல்வெட்டில் இப்பெருவழிக்கு வீரநாராயணப் பெருவழி என்று பெயரிடப்பட்டிருந்தது. இப்பெயர் கொழுமம் வரையிலான பெருவழிக்கு வழங்கப்பெற்றது. அதற்கும் அப்பால் பழனி வழியாக இப்பெருவழி மதுரை, திருத்தங்கல் ஆகிய ஊர்களைத் தொட்டுக்கொண்டு இராமேசுவரம் வரை சென்றது. இப்பெருவழிக்குச் சோழர் காலத்தில் அசரர்மலைப் பெருவழி என்று பெயர். இப்பெயர் அயிரைமலை என்ற பெயரின் திரிபு என்று கொள்ளலாம். இச்செய்திகளால் இப்பெருவழி சோழர்காலத்திலும் வாணிகர், கடை கொண்ட பெருவழியாக விளங்கியது என்பதை விளக்குகின்றது. இப்பெருவழியில் ஆதாழி அம்மன் கோயில், திருமூர்த்தி மலைக் கோயில், ஐவர்மலை ஆகிய மலைகளில் சமயப் பள்ளிகள் இருந்துள்ளன. இச்செய்தியும் பெருவழி அருகில் உள்ள மலைகளில் மட்டுமே சமணப் பள்ளிகள் இருந்துள்ளன.

## மலைப் பள்ளி ஏன் ?

மலைகளில் பள்ளிகள் உருவானதற்குக் காரணம் இருந்திருக்க வேண்டும். தனித்திருந்துதவம் செய்யும் மெய்த்தவமணிகளாகச் சமணர்கள் வாழ்வதற்கு மலைகளில் பள்ளிகளை உருவாக்கினார்களா? அல்லது உண்ணா நோன்பிருந்து உயிர் துறக்க மலைக்குகைகளைத் தேர்ந்தெடுத்தார்களா? கெட்ட போரிடும் உலகத்திலிருந்து தங்களைப் பிரித்துக் கொள்ள மலைக் குகைகளைத் தேர்ந்தெடுத்தார்களா? முதலிய கேள்விகள் எழுகின்றன. தவமியற்றிய முனிவர்கள் உலக இன்பங்களைத் துறந்ததால் சமூக வாழ்வில் உயர்ந்த இடத்தில் வைத்தெண்ணப் பெறுகிறார்கள். தனித்திருந்து தவமியற்றும் முனிவர்கள் மனித வடிவில் தெய்வங்களாகப் போற்றப் பெற்றார்கள். கோலோச்சும் அரசர்களும் அடிபணிந்தார்கள். தவ வலிமையால் எதையும் மாற்றி அமைக்கும் சக்தியை முனிவர்கள் பெற்றிருந்தார்கள் என்று அந்நாளைய மக்களும், மன்னரும் நம்பினார்கள். அரசனுடைய ஆழியைக் காட்டிலும் ஆன்றவிந்தடங்கிய சான்றோரின் அறவாழியே வலிமை மிக்கதாகக் கருதப்பெற்றது. ஆதலால் அரசவாழ்விலும், சமக வாழ்விலும் முனிவர்களுக்குப் பெருமதிப்பு இருந்தது. அதனால் மன்னர்களும், மக்களும் மலைப்பள்ளிகளுக்கு வாரி வழங்கினர். முனிவர்களுடைய அருள் பார்வை இருந்தால் ஆட்சி தொல்லையின்றி நடைபெறும் என்று மன்னர்கள் நம்பினார்கள். அருளாளர்களால் வாழ்வில் வளம் வரும் என்று மக்கள் நம்பினர்.

சமண முனிவர்கள் மலைக் குகைகளில் வாழ்ந்தாலும் உண்பதற்கென அருகில் உள்ள ஊர்களுக்கு சென்று உணவு பெறுவர். அவ்வாறு செல்லும் போது யார்வீட்டு முன்பும் நின்று கேட்க மாட்டார்கள். அதனால் அன்னமிடும் மக்கள் முனிவர் வருகைக்காக வாயிலில் காத்து நிற்பார்கள் இதையே வள்ளுவர்

“செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவ ர்க்கு.”

என்று குறிப்பிட்டதாகக் கருதலாம்.

சமண பௌத்த முனிவர்களைப் பிக்கு என்றே வடமொழியில் கூறுவர். பிக்கு என்ற சொல் பஞ் என்ற வேர்ச் சொல்லிலிருந்து வந்தது. பஞ் என்பதற்கு வடமொழியில் பாதீடு என்று பொருள். மக்கள் தேடய பொருளில் உணவு பெறுவதால் பாதீடு செய்து கொள்பவர் என்ற பொருளிலேயே பிக்கு என்ற சொல் உருவாயிற்று என்பர். முனிவர்கள் உலக வாழ்வைத் துறந்தவர்களாயினும் மக்கள் வழ்விலிருந்து பிரிந்தவர்கள் அல்லர். மக்களுக்கு அறவுரை வழங்கும் அருளாளர்களாகத் திரிந்தனர். அந்நிலையில் மக்கள் உணவைப் பகிர்ந்து கொண்டனர். இது பழங்குடி வாழ்க்கையில் நிலைபெற்றிருந்த பாதீடு முறையை நினைவுறுத்துகின்றது.

## படுக்கை அமைத்ததன் நோக்கம்

மலைக்குகைகளில் படுக்கை அமைத்ததற்குக் காரணம் வெளியில் செல்லமுடியாத மழைக்காலங்களில் மலைக்குகைகளில் தங்கியிருப்பர். அப்போது படுத்துக் கொள்வதற்குப் படுக்கை அமைக்கப் பெற்றதா? சமணமுனிவர்கள் சொகுசை விரும்பினார்களா? அல்லது உண்ணா நோன்பிருந்து இவ்வுலக வாழ்வை நீத்த பின் நினைவுச் சின்னமாகப் படுக்கை அமைக்கப் பெற்றதா? இவ்வினாக்களுக்குச் செஞ்சித் திருநாதர் குன்றின் மீது அமைந்துள்ள நிசிதிகைக் கல்வெட்டு விடை தருகின்றது.

ஐம்பதேழு அனசனம் நோற்ற சந்திர நந்தி நீசீதிகை என்று கூறுகின்றது. இக்கல்வெட்டு உண்ணா நோன்பிருந்தவர்களுக்கு மட்டுமே படுக்கை அமைக்கப்படிருந்தது என்ற கருத்தினை வலியுறுத்துகிறது. சங்க இலக்கியத்திலும் பாடப்பெற்ற மன்னர்கள் பெயர்களைக் குறிப்பிடும்போது குராப்பள்ளித் துஞ்சிய இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய என்ற அடைமொழிகள் வரும் இக்கருத்தினை வலியுறுத்துகின்றன. அதனால் மலைக்குகைகளில் உள்ள படுக்கைகள் உண்ணா நோன்பிருந்த சமய முனிவர்களுக்கு அமைக்கப்பெற்றது எனலாம்.

கொங்குநாடு மலைகள் சூழ்ந்த நாடாகையால் சமண முனிவர்கள் தனித்திருந்து தவம் செய்வதற்கேற்ற நிலைகளைக் கொண்ட குகைகள் நிறையவே இருந்தன. இருப்பினும் முனிவர்கள் எல்லா மலைகளிலும் தவப் பள்ளிகளை உருவாக்கவில்லை. பழங்குடித் தெய்வங்கள் வழிபாடு நடைபெற்ற மலைகளிலும் பெருவழிகளுக்கு அருகிலிருந்த மலைகளிலும் சமணர்கள் தவப்பள்ளிகளை உருவாக்கினர்.

**(நிறைந்தது)**

சென்ற இதழ்த் தொடர்ச்சி....



# இராஜராஜர் யார்?



– முனைவர், டாக்டர் **இரா. கலைக்கோவன்,**
M.A., M.A., M.B.B.S., D.O., Ph.D.,

தேவலோகத்தில் தாம் மையலுற்ற மங்கையரை மணப்பதற்காகவே இறைவனால் நிலவுலகப் பிறப்பிற்கு ஆட்படுத்தப்பட்ட சுந்தரர் சுந்தரமான வாழ்க்கையர். சிற்றரசர் மகனாய் வளர்ந்து, களப பஸ்தூரிகளில் மிதந்து, இறைவனிடமும் அதையே கேட்டுப் பெற்றுக் கலையரசியையும் கன்னிமாடக் காரிகையையும் கைப்பிடித்த இந்த இறைத் தோழரின் இனிய வரலாறு சுகமானதுதான் என்றாலும் எதிர்பாராத திருப்பங்களையும் கொண்டமைந்தது. மணங்கொள்ள மேடை வந்தபோது, வயதான கிழவர் அடிமை நீ என்று ஆட்கொண்டமை முதல் திருப்பம். நண்பரோடு நயந்து இறைவனோடு உவந்து அஞ்சைக்களத்தில் பாமாலைகள் புனைந்து கொண்டிருந்தபோது வாணன் வந்து வழிகாட்ட, நண்பரையே மறந்து, வான்வழிக் கயிலாயம் சென்றது இரண்டாவது திருப்பம். இந்த இரண்டுமில்லையேல் சுந்தரர் வாழ்க்கை களியாட்டக் குவியலும் கலக்க உருகலுமாய்க் கரைந்து போயிருக்கும். சுந்தர வாழ்க்கையை அந்நிலை–யிலிருந்து, உடுக்கையிழந்தவன் கைபோலக் காப்பாற்றி உயர்த்தியவர் அந்தக் கடவுள். உடம்போடு உயிரிடையன்ன மற்றென்ன மடந்தையொடு எம்மிடைத் தொடர்பென்ற காதல் இலக்கணத்தை நட்பிலக்கணமாக்கிச் சுந்தரருக்காகக் கால்தேயத் தெருவலைந்து காதல் சேகரித்தவர் இந்தக் கடவுள்.

கலிக்காமர் கொதிக்க, கண்டவர்கள் வியக்க நிகழ்ந்த இந்தக் காதல் தூதும் காதலால் விளைந்ததுதான். தோழமைக் காதல் அது இறைவனுக்கும் சுந்தரருக்கும் இடையில் விளைந்தது; வளர்ந்தது; வாழ்ந்தது.

இறைவன் நண்பரைக் கொண்ட சுந்தரரின் வாழ்க்கையில், ராஜராஜர் மனங்கொண்டது தோழமையில் அவருக்கிருந்த பற்றால், நம்பிக்கையால், அதன் தனித்தன்மையால் அவருக்கேற்பட்ட பத்திமையால் இறைவனை யார் வேண்டுமானாலும் நண்பராய்க் கருதலாம். ஆழ்வார்கள், நாயன்மார்களிலிருந்து பாரதியார் வரை அப்படிக் கருதிப் பாடியவர்கள் கணக்கிலர். ஆனால் இறைவன் தோழராய்க் கருதித் தம்பிரான் தோழரென்ற பெருமையைத் தந்தது சுந்தரருக்குத்தான். அதனால்தான் அரிய மனிதரான அப்பரை விடுத்து, அம்மைப்பால் அருந்திய சம்பந்தரை மறந்து, காதலிகளுக்கிடையில் கலந்துருகிய சுந்தரரைத் தேர்ந்தார் ராஜராஜர். ஆனால் அந்தத் தேர்வுக்குச் சுந்தரர் காரணமல்ல. சுந்தரரிடம் சொந்தம் கொண்ட இறைவன்தான் காரணம்.

உழைப்பது பலரால் முடியும். இறையருள் உண்மைத் தொண்டருக்குக் கைகூடும். ஆனால் தோள்மேல் கைபோட்டு, நட்புரிமையோடு, நவில்தோறும் நூல்நயம் போலப் படைத்தவனோடு பழகும்பேறு சமய வரலாற்றில் சுந்தரருக்கு மட்டும்தானே வாய்த்தது. நட்பாங் கிழமை தரும் புணர்ச்சியில் நம்பிக்கை மிகுந்த ராஜராஜர், தோழமைப் பண்பை, யாதும் ஊரே யாவருங் கேளிரென்ற பூங்குன்றக் குழலில், அதே சமயம் அரச அறத்திற்கு மாறுபாடில்லாத நிலையில் தம்மைச் சூழ வளர்த்து வாழ்ந்ததை அவருடைய கல்வெட்டுகள் விரிவாகப் பேசுகின்றன. கோயில் முழுதையும் தாம் ஒருவரே எடுத்து, அடைய முடியாத பெருமைகளையெல்லாம் அளப்பரிய நிலையில் கொண்டிருக்கக்கூடிய இந்தக் கோ, தாம் எடுப்பித்த கற்றளிக்குத் தம் படைத்தலைமைக் கொண்டு திருச்சுற்று மாளிகை எழுப்பியது ஏன்? ராஜராஜீசுவரருக்குச் சூட்டினாற்போல், திசைக்காவலர் திருமுன்கள் அனைத்திற்கும் தாமே குடமேற்றியிருக்கக் கூடுமென்ற நிலையிலும், தம் சைவாச்சாரியாருக்கு அவ்வாய்ப்பை ராஜராஜர் வழங்கியமை எதனால்? எக்காலத்தும் திசைவிளக்காய் விளங்கப் போகிறதென்பது தெரிந்தும், கட்டிய தமக்கோரிடம், உடன் ஒட்டிய பிறர்க்கோரிடம் என்று நினையாது, வடவாயில் இடப்புறம் தொடங்கும் கல்வெட்டில் தம்மையும், அக்கனையும், பெண்டுகளையும் குடுத்தார் அத்தனை பேரையும் ஒன்றாய் நிறுத்திய அந்தப் பெருந்தன்மையின் நோக்கமென்ன? தம் பணியாளர்கள் அந்நாளைய வீரவிளையாட்டுக்களில் தோல்வியுறக் கூடாதென்ற பெருநோக்கோடு ராஜராஜீசுவரத்தில் அவர்தம் வெற்றிக்காக விளக்கெரித்தாரே அந்த நித்தவிநோதர், அதன் அடிப்படைதான் என்ன? களத்தூரில் இருந்து வந்து, 'பேரரசே உம் நலத்திற்கு விளக்கெரிப்பேன்' என்றவரை 'உலக நலத்திற்கு விளக்கெரியும்' என்று உலகப் பார்வைக்கு உவந்து திருப்பிய அந்தக் கேரளாந்தகரின் உள்ளத்தில் உறைந்து போயிருந்த உணர்வுகளின் உட்பொருள்தான் எது?

இவையெல்லாவற்றிற்கும் எது விடையோ, அதுதான் ராஜராஜரைச் சாந்தார இடைவெளியின் அகச் சுவரில் சுந்தரர் வாழ்க்கையைப் படம்பிடிக்க வைத்தது. தமக்குள் மலர்ந்திருந்த தோழமையின் பெருமையை வருந்தலைமுறைகளுக்கெல்லாம் உணர்த்த விரும்பிய ராஜராஜருக்குச் சுந்தரர் வரலாற்றினும் சிறந்தது வேறு ஒன்றில்லை. இறைத் தோழமையுடன் சேரமானின் தோழமையும் கலந்துய்த்த வாழ்க்கையைப் பெற்றவர் சுந்தரர். சிலருக்கு வாய்ப்புகள் வலிய வந்துவிழுகின்றன. தலைமீது இறையடி பதியப் பல இடங்களில் வேண்டிப் பல மைல்கள் நடந்தவர் அப்பர். ஆனால் தேடி வந்து தெய்வம் தந்ததால், கேட்காமலேயே மேனியெங்கும் அடிச்சுவடுபெற்றும் யாரென்று கேட்டு, இறையென்று அறிந்தவர் சுந்தரர். அப்பருக்கும் சம்பந்தருக்கும் தொண்டர்கள் கிடைத்தனர். சுந்தரர் மட்டுமே நண்பர்களைப் பெற்றார். நட்பிற்கு இலக்கணமாய் நண்பர்கள் நடந்து

கொண்டதால் சுந்தரர் பெருமை பெற்றவர். பெற்ற நட்பு அவர் வாழ்க்கையை உயர்த்தியது. திருத்தொண்டர் புராணமே அவரைச் சுற்றி எழுமாறு அந்த நட்பே சுந்தரருக்கு வாய்ப்பளித்தது.

பெருமானும் பெருமாளும் சுந்தரரிடம் கொண்ட நட்பின் ஆழத்தை, இறைவன், அரசன், இறையடியார் என்ற முந்நோக்கில் பார்த்துப் பூரித்த ராஜராஜருக்குத் தம் நெஞ்சில் இயல்பாக ஊறித் ததும்பிய தோழமைப் பண்பை, பத்திமையுணர்வை அதனுடன் ஒப்பிட்டுப் பொருத்திப் பார்க்க முடிந்தது. விளைவு, வரலாற்றின் பதிவுகளோடு சந்தரர் வாழ்க்கை வண்ணக் களஞ்சியமாக வடிவெடுத்தது. இந்த ஓவியக் காட்சியில் இடம்பெற்றிருக்கும் சுந்தரர் வாழ்க்கைப் பகுதிகள் ராஜராஜரின் வரலாற்றுக் கண்ணோட்டத்திற்கு விரிவான விளக்கங்கள். சுந்தரர் நாவலூரில் பிறந்ததும், வளர்ந்ததும், நரசிங்க முனையரையரின் தத்துப் பிள்ளையானதும், புத்தூரில் சடங்கவியார் மகளுக்கு மணம் பேசப்பட்டதும் வாழ்வின் இயல்பான படிநிலைகள் என்பதால் ராஜராஜர் அவற்றைக் காட்சியாக்குவதில் கருத்துக் கொள்ளவில்லை.

'உங்கள் மலரடியை மறந்து மயங்கினால் வந்து தடுத்தாட்கொள்க' என்று இறைவனிடம் வேண்டிய பிறகே நிலவுலகப் பிறப்புக்கு ஆளானார் சுந்தரனார். அவர் நிலவுலகம் வந்தது பரவையையும் சங்கிலியையும் மணக்க. பிறப்பின் காரணமாய்த் தேவலோக உறவுகள் மறந்து, சடங்கவி மகளை மணங்கொள்ளத் தயாரான சுந்தரரை, இறுதிக் கணம் வரை விட்டுப்பிடித்தார் இறைவன். மணமேடையிருக்கையில் சுந்தரர் அமர்ந்த பிறகு, இனியுங் காலம் தாழ்த்தினால் காரியம் கெட்டுவிடும், தந்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது போய்விடும் என்பதையுணர்ந்த-வராய்த்தான் இறைவன், நாடகமாடி நிகழ்ச்சியை நிறுத்த முதிய ஆண்டகையாய் ஓலையுடன் எழுந்தருளினார். அடிமை நீ என்றார்; ஆட்கொண்டார். நிகழ்ச்சிகளும் பாத்திரங்களும் நெருங்கியிணைந்து வரலாற்றை நகர்த்திய இந்தக் காட்சியில் தம்மையிழந்த சிவபாதசேகரர் தலைக் காட்சியாய் இதையே கொண்டார்.

பத்திச் சுவரின் மூன்றில் ஒரு பகுதி இக்காட்சியைச் சித்தரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதியை அகலவாக்கில் மூன்றாகப் பகிர்ந்துள்ளனர். சோடி ஓவியர்கள். முதற்பகுதி திருமண வீட்டின் சமையற்கூடத்தையும், திருமண அரங்கையும் இரு பிரிவுகளில் கீழும் மேலுமாகக் காட்டுகிறது. கீழ்ப் பகுதியில் புத்தூர் மணவீட்டின் சமையற்கூடம். எட்டுப் பெண்களும் இரண்டு ஆண்களும் இயங்கும் இவ் அடுக்களைக் காட்சிகள் சோழர்காலச் சமையற்கூடத்தைக் கண்முன் நிறுத்துகின்றன. விறகுகள் நிறைத்த வாயுடன் நான்கு அடுப்புகள். அவற்றின்மேல் கொதிக்கும் பொருளுடனோ அல்லது பொருளைக் கொள்ளத் தயாரான நிலையிலோ பானைகள். உலை கொதிக்கும் பானைகளின் முன்னால் கீழே வடிக்க ஏதுவாகச் சிறிய பானைகள். இரு

பெண்கள் வடிப்பதிலும், ஒரு பெண் கிளறுவதிலும், மற்றொரு பெண் எரியும் அடுப்பைத் தூண்டி விறகிடுவதிலும் ஈடுபட்டுள்ளனர். சிறிய பாத்திரமொன்றைக் கையிலேந்தி அதிலிருக்கும் நீராகாரத்தைக் குடிக்கிறார் வயதில் சிறியவராய்த் தோற்றம் கொண்ட ஒரு பெண்.

மூன்று பெண்கள் உதவியாளர்களாய் நிற்கின்றனர். தேவையான அளவு தானியத்தைப் பிரித்துக் கொட்டிய நிலையில் மூட்டையைக் கையில் பிடித்தபடி ஒரு பெண் உதவியாளர் நிற்க, அத்தானியத்தைச் சிறிய பாத்திரமொன்றில் பெற்ற ஆடவர் அதை அடுப்பின் மீதிருக்கும் பானைக்குள் கொட்டுகிறார். மற்றொரு உதவியாளர் தானிய மூட்டையைப் பிடித்து நிற்கும் ஆடவரிடமிருந்து தானியம் பெறுமாறு போலச் சிறிய பானையொன்றேந்தி அடுகளத்தின் இடக்கோடியில் நிற்கிறார். மூன்றாமவர் முக்காலியின் மீதிருக்கும் தானிய மூட்டையைப் பிடித்தபடி உள்ளார். அதிலிருந்து அவர் தானியம் கொள்ளக் கருதுகிறார் எனுமாறு போல முக்காலியின் முன் அகன்ற வாய்ப்பாத்திரமொன்று காட்டப்பட்டுள்ளது. அடுகளத்தில் ஆங்காங்கே முக்காலியின்மேல் அகன்ற வாயுள்ள பல்வேறு அளவுகளிலான பாத்திரங்களும், தானிய மூட்டைகளும் காட்டப்பட்டுள்ளன. பெரிய பாத்திரங்களுள் சில தூக்கவாய்ப்பாக இருபுறத்தும் பிடிகள் கொண்டுள்ளன. வடி வாங்கும், தானியம் கொள்ளும் பாத்திரங்கள் தவிர ஏனைய பாத்திரங்கள் அனைத்துமே, தானிய மூட்டைகள் உட்பட்டத் தரைமீது இடப்பெறாமல் முக்காலிகளின்மேல் இருத்தப் பெற்றிருப்பது தரையின் ஈரப்பதம் தாக்கித் தானியங்கள் கெட்டுவிடாது காக்கும் அடுகளத்தாரின் எச்சரிக்கையுணர்வையும், பாத்திரங்களைத் தரைத்தூசுகள், பூச்சிகள் ஆகியவற்றிலிருந்து காக்கும் முன்னோக்கையும் உணர்த்துமாறு உள்ளது.

பெரும்பாலான அடுகளப் பெண்டுகள் இடுப்பிற்கு மேல் ஆடையின்றியுள்ளனர். மார்புக்குக் குறுக்காக மேலாடை அணிந்துள்ளவரும் அம்மேலாடை விலகிய நிலையிலேயே காட்டப்பட்டுள்ளனர். சோழர்காலப் பெண்கள் மார்பக மறைப்பிற்கு முக்கியத்துவம் அளித்ததாகத் தெரியவில்லை. இப்பெண்களுள் சிலர் மங்கையராகவும் சிலர் அரிவையராகவும் இருப்பதை முகத்தோற்றம் கொண்டு அறியலாம். தலையில் பூவும், கழுத்தில் பல்வகை அணிகலன்களும், கைகளில் வளைகளும் கொண்டுள்ள இவர்தம் கீழாடைகள் பல வண்ண ஆடைகளாகக் கோடுகளுடனும், பூச்சித்திர வேலைப்பாட்டுடனும் அழகுற அமைந்துள்ளன. குறுகிய இடையும், எழிலார்ந்த மேனியும், அளவான அழகான மார்பகங்களும், சற்றே அகன்ற முகமும், நீள் விழிகளும் கொண்ட இச்சோழப் பெண்களின் உருவ அமைப்பு அவர்தம் உடலுழைப்பிற்குச் சான்று பகர்வதாய் அமைந்துள்ளது. ஆடவர்கள் உரமேறிய மேனியராய் மரமேறிகளைப் போல இடையும் பின்புறமும் மறைத்துத் தொடையின் பெரும்பகுதி வெளித் தெரியுமாறு ஆடையுடுத்தியுள்ளனர்.

(வளரும்)

சென்ற இதழ்த் தொடர்ச்சி....



# திருக்கோயிலைத் தெரிந்துகொள்வோம்



- ஸ்தபதி. வே. இராமன்

## 2. கோயிற் கட்டடக்கலையில் அதிஷ்டானம்

### தாங்குதளம்

வானுயர எழுப்பப்படும் விமானம், கோபுரம், பிரமிக்கத்தக்க வகையில் எழுந்துநிற்கும் மண்டபம் ஆகியவற்றிற்கெல்லாம் ஆதாரமாக அமைவது அடித்தளமே. கோயில்கள் அன்றிப் பிற கட்டடங்க ளான வீடுகள், அரங்கங்கள் முதலானவற்றிற்கும் ஆதாரமாக அமைவதும் அடித்தளமே. இங்ஙனம் முக்கிய அங்கமாக அமையும் இவ்வமைப்பைச் சிற்ப நூல் 'அதிஷ்டானம்' என்று குறிப்பிடுகிறது. இவ்வங்கம் பாதச்சுவருக்குக் கீழே அமையும் ஓர் உறுப்பாகும்.

அதிஷ்டானம் என்ற வடமொழிச் சொல்லிற்கு 'தாங்குதளம்' எனப் பொருள் கொள்ளலாம். பாதச் சுவருக்கு அலங்கார அணியாக அமைவதால் இதனை பாதச் சுவர்க்கட்டு என்றும் குறிப்பிடுவாரும் உண்டு.

### அதிஷ்டான அமைப்புகள்

அதிஷ்டானம் பலவிடங்களில் பலவித அமைப்புகளில் இடம்பெறுகிறது. கருவறை அமைப்பில் அணிகளோடு அமைப்பது ஒருவகை. கோபுர அமைப்பில் அதன் உன்னதத் தோற்றத்திற்கு எழில் கூட்டும் வகையில் அமைப்பது ஒருவகை. அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் கட்டடங்களுக்கும், வீடுகளுக்கும் அமைப்பது மற்றொரு வகை. திருக்கோயில் அமைப்பில் இடம்பெறும் திருவுருவங்களின் பீடம், கொடிமரம், பலிபீடம், சிவலிங்கம் இவைகளுக்கு அமைப்பது பிறிதொரு வகை. திருவிழாக் காலங்களில் கடவுட்படிமங்களை ஏற்றி வைத்து நகர்வலம் செல்வதற்காக எடுப்பிக்கப்படும் எழில்மிகு தேர் அமைப்பில் அமைப்பது ஒருவகை என அதிஷ்டானங்களைப் பல வகையாகப் பிரிக்கலாம். எங்கு எப்படி அமையப்பெற்றாலும் முக்கிய அங்கமாக ஆதாரமாக அமையும் இவ்வங்கம் அமையும் இடத்திற்கேற்ப எழில்மிகு அணிகளைப் பூண்டு அழகுடனும் தன்மேல் வரும் சுமைகளைத் தாங்கக்கூடிய வகையில் உறுதிமிக்கதாயும் அமைக்கப்படுகிறது.

திருக்கோயில் கருவறையிலும், கோபுர அமைப்பிலும் இவ்வங்கம் இடம்பெறும்போது **அதிஷ்டானம்** என்ற சொல்லாலும்; கட்டடம்,

வீடுகளுக்கு அமைக்கப்பெறும்போது கொரடு என்ற பொதுச் சொல்லாலும், திருவுருவங்களை நிறுத்திவைப்பதற்காக அமைக்கும் பீட அமைப்பாக அமையும்போது **பத்மபீடம்** அல்லது **பத்ரபீடம்** என்ற தொழிற்சொல் வழக்காலும்; தேர் அமைப்பில் அமைக்கப்பெறும்போது ஆதாரம் என்ற சொல்லாலும் சிற்பிகளால், அமையும் இடத்திற்கேற்பப் பெயர் சூட்டி அழைக்கப்படுகின்றது.

## அதிஷ்டான வகைகள்

காஸ்யபச் சிற்பநூல் அதிஷ்டான வகைகளைக் கீழ்க்கண்டவாறு பிரித்துத் தொகுத்துத் தருகிறது.

### பாத பந்த வகை

| | | |
|---|---|---|
| பாத பந்தம் | அம்போஜகேசரம் | புஷ்பபுஷ்களம் |
| ஸ்ரோணிபந்தம் | வப்ரபந்தம் | சுந்தராம்புஜம் |
| அம்புஜகாந்தம் | ஸ்ரீகாந்தம் | |

### பிரதி பந்த வகை

| | | |
|---|---|---|
| பிரதிபந்தம் | பிரதிக்ரமம் | ஸ்ரீபந்தம் |
| மஞ்சபந்தம் | அப்ஜபந்தம் | பிரதிசுந்தரம் |
| ஸ்ரீகண்டம் | கணிகபந்தம் | கலசபந்தம் |
| ஸ்ரீகரம் | நளினகாந்தம் | ஸ்ரீ செளந்தரியம் |
| ஸ்கந்த காந்தம் | | |

### பாத பந்தம்

ஆலய அமைப்பில் அமையப்பெறும் பாதம் அல்லது தூண் பூமியின் மட்டத்திலிருந்து எழுப்பப்படுவதாகவும் அவ்வாறு எழுந்த பாதத்தைச் சுற்றிலும் அலங்காரமாக வரி வர்க்கங்களைக் கொண்டு ஒரு கட்டாக அமைக்கப்படுவதாலும் இவ்வகை அதிஷ்டானத்தைப் பாதபந்தம் என்று கூறுவர். பந்தம் என்பது கட்டு எனப் பொருள்படும்.

### பிரதிபந்தம்

அதிஷ்டானத்தில் இடம்பெறும் ஆலிங்கம், அந்தரி, பிரதி, வாஜனம் என்ற சிற்றுறுப்புக்கள் ஒன்று சேர்ந்த பேருறுப்பே 'பிரதி' என்றழைக்கப்படுகிறது. இவ்வுறுப்புகளைக் கொண்ட (பிரதிவரியை) அதிஷ்டானத்தைப் பிரதிபந்தம் என்றும் கூறுவர்.

### பாத பந்தம்

பூமியின் மேல்மட்டத்திலிருந்து எழுப்பப்படும் பாதம் அல்லது தூண் பகுதியை வெறும் சுவராக எழுப்புவது கலைச் சிறப்பல்ல.

அலங்காரத்தோடும் கலைநயத்தோடும் உருவாக்குவதே சிற்ப மரபாகும். எனவே எழுப்பப்படும் அங்கத்தின் உறுப்புக்களை முன்னும் பின்னும் கூட்டியும் குறைத்தும் எழில்பட அமைப்பர். இவ்வாறு அணிதிகழ் சிற்றுறுப்புகளை திரும்பத் திரும்ப அமையச் செய்து பாதச் சுவரை மறைத்து அதாவது போர்த்தி அமைக்கப்படும் அதிஷ்டானம் பாதபந்தம் எனப் பெயர் பெறுகிறது. இவ் அதிஷ்டானத்தின் அடிப்பகுதி விரிவடைந்தும், அதன் மேல்வரும் ஒவ்வோர் அடுக்கும் படிப்படியாக அடக்கம் பெற்று எழிலான அமைதியுடன் பாதச் சுவரோடு இணையும்.

## பிரதி பந்தம்

இங்ஙனமே பிரதிபந்த அதிஷ்டானத்தில் பாதபந்த அதிஷ்டானத்தில் இடம்பெறும் உறுப்புகளே இடம்பெற்றாலும் சில அடுக்குகள் மாறுபட்டு அமையும். அதாவது பாதபந்த அதிஷ்டானத்தில் இடம்பெறும் ஜெகதிவரியை மகாபத்ம வரியாகவும், பட்டிகைவரியை பிரதிவரியாகவும் இவ் அதிஷ்டானத்தில் மாற்றியமைத்து அணி செய்வர். மேலும் ஒவ்வொரு அதிஷ்டானத்தின் இறுதியிலும் ஆலிங்கம், அந்தரி, பிரதி, வாஜனம் என்ற சிற்றுறுப்புகள் இடம்பெற்றே அமையும். இச்சிற்றுறுப்புகள் இடம்பெறும் அதிஷ்டானமே பிரதிபந்தம் என்றும் சொல்லப்படுகிறது.

ஒன்றின்மீது மற்றொன்றாக ஏற்றியமைக்கப்படும் அதிஷ்டான அடுக்குகளின் உறுப்புகளை அமையும் இடத்திற்கேற்ப வர்க்க அமைதி, அடக்கம் ஆகிய அனைத்தும் புலப்படுமாறு அமைப்பர். எங்ஙனம் பூக்களைக் கொண்டு அழகான மாலையை உருவாக்குகின்றார்களோ அதுபோல வரிவர்க்கங்களையும் பிரதிவரியில் யாளி உருவங்களையும் கோடியில் மகரத் தலையையும் அமைத்து மாலைபோல் சுற்றிச் சுற்றி அமைத்திடுவர்.

பிரதிவரியில் யாளி என்ற உருவங்கள் இடம் பெறுவதால் இவ்வரியை யாளிவரி என்றும் சொல்வழக்கில் இன்றும் கூறிவருகின்றனர்.

## யாளி

பாம்பின் முகமும் சிங்கத்தின் உடலும் சோர்ந்தமைந்த கற்பனை உருவமே யாளியாகும். வியாழம் என்றால் பாம்பு ஆகும். இதுவே 'யாழி' ஆகி பிறகு யாளி என்ற பெயர் பெற்றது. (ஓவியக் கோடுகள் – பக்கம் 73)

## பஞ்சவர்க்கம்

பொதுவாக, பாதபந்த அதிஷ்டானப் பகுதியில் உபானவரி, ஜகதிவரி, குமுதவரி, கண்டவரி, பட்டிகைவரி என்ற ஐந்து உறுப்புகள் இடம்பெறும். இவ்வங்கங்களே பஞ்சவர்க்கம் எனப் பெயர்

பெறுகின்றன. ஆலய அமைப்பில் அதிஷ்டானம் பாதபந்தமாக இருந்தால் இவ்வங்கங்களின் ஏதேனும் ஒரு மட்டத்தில் தேவையை அனுசரித்துக் கோமுகையை அமைத்திடுவர். கோமுகை எம்மட்டத்தில் இடம்பெறுகின்றதோ அம்மட்டத்தில்தான் தளவரிசையும், கருவறை வாயிலும் இடம்பெறும்.

அதிஷ்டானம் பிரதிபந்தமாக அமையுமேயானால் கோமுகை-யானது பிரதியின் மட்டத்தில்தான் அமைக்கப்படும். பிரதிவரி என்பது அதிஷ்டானத்தின் தலைப்பகுதி அல்லது இறுதிப்பகுதி என்பதனை நினைவிற்கொள்ள வேண்டும்.

தஞ்சைப் பெரியகோயில், திருபுவனம் கம்பகேஸ்வரர் கோயில், திருவையாறு பஞ்சநதீஸ்வரர் கோயில், கீழையூர் அவனிகந்தர்ப ஈஸ்வர கிருகம், வடவாயில் ஸ்ரீ கோயில், தென்வாயில் ஸ்ரீ கோயில் முதலிய இடங்களில் இடம்பெற்றுள்ள அதிஷ்டானம் பிரதிபந்தம் வகையைச் சார்ந்ததாகும். இங்கெல்லாம் பிரதிமட்டத்தில் தான் கோமுகை இடம்பெற்றுள்ளது என்பதனை இங்கு நினைவுகூரலாம்.

இருந்தபோதிலும் சோழர்காலக் கோயில்களில் சிலவற்றில் பிரதிபந்த அதிஷ்டானத்தின் உறுப்பான மகாபத்ம மட்டத்தில் கோமுகை இடம்பெற்றுள்ளதையும் குறிப்பாகக் கூறலாம்.

## கோமுகை

கோமுகை என்பது இறைவனுக்கு அபிஷேகம் செய்யப்படும் பொருள்கள் கருவறையிலிருந்து வெளியே செல்வதற்காக அமைக்கப்-படும் ஒரு துவாரம் ஆகும். இதன் முன்புறத்தோற்றம் கோமுகமாகிய பசுவின் முகம் போன்ற அமைப்புடையதாய் இருப்பதால் இதனைக் கோமுகம் என்றும் அழைக்கலாயினர். மேலும் இவ்வமைப்பை நாளம் என்றும் சித்ரநாளம் என்றும் நிர்மால்ய துவாரம் என்றும் தூத்தூம்பு என்றும் கூறுவர். நிர்மல் என்பது தூய்மை எனப் பொருள்படும். கிழக்கும் மேற்கும் பார்வையுடைய கோயில்களுக்கு வடதிசையிலும், தெற்கும் வடக்கும் பார்வையுடைய கோயில்களுக்கு கிழக்குத் திசையிலும் கோமுகையை இடம் பெறச் செய்யவேண்டும் என்பது பொது விதியாகும்.

## வர்க்கபேதம்

தொடர்ந்து செல்லும் ஒரே வரியில் உள்ள வர்க்கத்தை உருவில் மாற்றம் செய்து அமைத்தலே „வர்க்கபேதம்" எனக் கூறப்படுகின்றது. இதனை „உறுப்புமாற்றம்" எனவும் கூறலாம்.

இங்குச் சிலவகை அதிஷ்டானங்களைக் காண்போம்.

# பாதபந்த வகைகள்



## பிரதிபந்த வகைகள்












## வர்க்கபேதத்துடன் கூடிய அதிஷ்டானம்



## உபபீடத்துடன் கூடிய அதிஷ்டானம்





## யாளவரி










# நேற்று - நாளை



## விடுதலை வேள்வியில் தமிழகம் - காலத்தின் தேவை

நாட்டுப் பற்றும், தேசிய ஒருமைப்பாட்டுணர்வும், மங்கி மழுங்கிச் சுயநலமே மேலோங்கி விட்ட இக்காலக் கட்டத்தில், விடுதலைக்கு நம் முன்னோர்கள் தந்த விலை என்ன என்பதையும், அவ்விடுதலைப் போராட்ட வேள்வித் தீயில் தம் உடல், பொருள், உயிர் ஆகிய அனைத்தையும் அவிப் பொருளாக இட்ட அவர்களின் தியாக வரலாற்றையும் நூறு கட்டுரைகளாகத் தகுதிவாய்ந்த அறிஞர் பெருமக்களைக் கொண்டு எழுதச் செய்து தொகுக்கப்பட்ட நூல் 'விடுதலை வேள்வியில் தமிழகம்'.

விடுதலைப் போராட்டம் பற்றிக் கண்டறியாத 60 வயதுக்குட்பட்ட தமிழ் மக்கள் அனைவரும் படித்துப் பயனடைவதற்காகவே இந்த இளைய வழக்கறிஞர் – தோழர் ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் – ஆறு ஆண்டுகளுக்கும் மேல் அரும்பாடுபட்டு நூல் வடிவாக்கி நமது கரத்தில் தவழ விட்டுள்ளார். அவருக்குப் 'பழங்காசு' முதற்கண் தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்நூல் வெளியீட்டு விழா சென்ற 4.7.2001 புதன்கிழமையன்று சென்னை – தேனாம்பேட்டை காமராசர் அரங்கத்தில் மாலை 6.00 மணிக்குத் தொடங்கியது.



அமரர் எம்.பி. சீனிவாசன் நினைவு இசைக் குழுவினரின் பாரதி பாடல்கள் சேர்ந்திசை நிகழ்ச்சிக்குப் பிறகு திரு.கோ. கருப்பையா (மூப்பனார்) அவர்கள் தலைமையில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 'இந்தியத் தேசிய சர்க்காரில்' அங்கம் வகித்தவரும், இந்தியத் தேசிய ராணுவத்தில் (I.N.A.) பெண்கள் பிரிவான 'ஜான்ஸி ராணி ரெஜிமெண்ட்'க்கு தலைமையேற்றவருமான 'கேப்டன் லட்சுமி' அவர்கள் முன்னிலையில் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன.

அரங்கமே நிரம்பி வழிந்த இவ்விழாவில், விடுதலைப் போரில் சிறை சென்று தாமிரப் பட்டயம் பெற்ற தியாகிகள் சுமார் இருநூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கட்சி வித்தியாசம் பாராது பல அரசியல்கட்சித் தலைவர்களும் வந்திருந்து, கடடுரையாளர்கள், தொகுப்பாசிரியர், வெளியீட்டாளர், ஆகியோரைப் பலவாறு பாராட்டிப் பேசினர். கேப்டன் லட்சுமி அவர்கள் நூலை வெளியிட்ட தமிழ்நாடு சுதந்திரப் போராட்ட வீரர்கள் சமிதி செயலாளர் ஐ. மாயாண்டி பாரதி அவர்கள் நூலைப் பெற்றுக்கொண்டார்.

குறிப்பாக கோ. கருப்பையா (மூப்பனார்) ஆர். நல்லக்கண்ணு, தா. பாண்டியன், மா. வரதராசன், ஐ. மாயாண்டி பாரதி, குமரி ஆனந்தன், ஈ.வெ.கி. சம்பத் இளங்கோவன், தமிழருவி மணியன் ஆகிய தலைவர்களின் பாராட்டுகளும் அனுபவங்களும் அரங்கத்தை உணர்ச்சி அலைகளுக்குள் மூழ்க அடித்தன.

நிறைவுரையாக 90 அகவையான மூதாட்டி கேப்டன் லட்சுமி அவர்கள், I.N.A. யில் தனது அனுபவங்களையும், நேதாஜியின் பெருமைகளையும் உணர்ச்சிப் பிழம்பாக விவரித்தார். சொற்பொழிவின் இறுதியில் ஒரு இளைஞருக்குள்ள எழுச்சியுடன் 'ஜெய்ஹிந்த்' என்று முழங்கிய அவருடைய முழக்கத்தை அரங்கில் குழுமியிருந்த அனைவருமே எதிரொலித்தனர். அதைக் கண்ணுற்ற பொழுது, மீண்டும் ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு நாம் ஆயத்தமாகிவிட்டோமோ என்ற ஐய உணர்வே மேலோங்கியது.

மாலை 6.00 மணிக்கு தொடங்கிய விழா இரவு 11.00 மணியளவில் நாட்டுப்பண்ணுடன் நிறைவுற்றது.

❁ ❁ ❁

## வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப்பணி - வெள்ளிவிழா உறவுச் சங்கமம்

1975ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவிலிருந்து வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப்பணி ஒலிபரப்பு தொடங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு கால்கோலிட்டவர் நமக்கெல்லாம் நன்கு அறிமுகமான தொலைக்காட்சி நிகழ்ச்சி அமைப்பாளர் ரபி பெர்னார்டு அவர்களின் தந்தையார் மரியாதைக்குரிய N.A. சுவாமி அவர்களாவார். அவ்வொலிபரப்பின் வெள்ளிவிழா நிகழ்ச்சிகள் 24.6.2001 ஞாயிறு அன்று காலை 10.00 மணிக்குத் திருச்சிராப்பள்ளி புனித பவுல் இறையியல் கல்லூரி அரங்கத்தில் நடைபெற்றது. சாந்தோம் கலைத்தொடர்பு நிறுவன இணை இயக்குநர் அவர்களின் வரவேற்புரையில் 'தமிழ்ப்பணி' நிறுவனர் சுவாமி அவர்களை நினைவு கூர்ந்தார்.

வெரித்தாஸ் வானொலியின் இயக்குநர் கார்லோஸ் லெரியோசா அவர்கள், 'வானொலியின் செயல்பாடுகளையும் எதிர்காலத் திட்டங்களையும் விவரித்தார். தமிழ்ப்பணி தமிழகத்தில் பல ஆயிரம் உள்ளங்களைக் கொள்ளை கொண்டதை எண்ணி மகிழ்வடைவதாகக் குறிப்பிட்டார்.

புனித பவுல் இறையியல் கல்லூரி முதல்வர் மறைதிரு சூசை மாணிக்கம் அவர்கள், திரு. ரவி பெர்னார்டு அவர்கள், புதுவை சமூக சேவகி சகோதரி ரெஜினாமேரி அவர்கள், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். திரு. ரவி பெர்னார்டு அவர்கள் வெரித்தாஸ் வானொலியில் தாம் பணியாற்றிய நாட்களை நினைவு கூர்ந்தார்.

இந்நிகழ்ச்சியில் பழங்காசின் அறிவுரைஞர் திரு. ப. சீனிவாசன் அவர்களும், 'நாளை விடியும்' இதழின் ஆசிரியர் திரு. பி.இரெ. அரசெழிலன் அவர்களும் கலந்துகொண்டனர். வெரித்தாஸ் வானொலி – தமிழ்ப்பணியின் இயக்குநர் திரு. ஜெகத் கஸ்பார், ரபி பெர்னார்டு ஆகியோருக்கு 'பழங்காசு' மற்றும் 'நாளை விடியும்' இதழ்கள் அளிக்கப்பட்டன.

மாலை நிகழ்ச்சியில் சொற்பொழிவாற்றிய இயக்குநர் திரு. ஜெகத் கஸ்பார் அவர்கள் 'பழங்காசின்' உள்ளடக்கத்தையும் நோக்கத்ததையும் பாராட்டியதோடு விழா மேடையிலேயே அனைவருக்கும் இதழ்களை அறிமுகப்படுத்தியது, நம்மைப் பெருமைகொள்ளச் செய்தது. அதுமட்டுமல்லாது இதழைத் தொய்வின்றி தொடர்ந்து நடத்திவர வேண்டுமெனவும் கோரினார்.

அமைப்பினைத் தொடங்கி வளர்த்தவர்களை வெளியேற்றிவிட்டு, இடையில் நுழைந்தவர்களெல்லாம் தலைவர் வேடம் போட முயலும் நமது அனுபவங்களுக்கு மாறாக, இவ்விழாவில் பேசியவர்கள் எல்லாம், 'வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணி'யை நிறுவிய திருவாளர் சுவாமி அவர்களை நினைவுகூர்ந்து நன்றியுணர்வுடன் குறிப்பிட்டது மனத்துககு இதமளிப்பதாக இருந்தது. மாலை 5 மணிக்கு விழா நிறைவுற்றது.

வாழ்க வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப்பணி.



# மனம் திறந்து...




அன்புடையீர்!

தாங்கள் அனுப்பி வைத்த "பழங்காசு" கிடைத்தது. நாணயவியல், வரலாற்றியல் குறித்த சிந்தனையில் துவக்கப்பட்டுள்ள பழங்காசு – பொற்காசாய் உயர வாழ்த்துகிறோம். வெல்க தங்களின் இலக்கிய முயற்சி.

**ஒரு வருத்தமான செய்தி:**

தூரிகை ஆசிரியர் மனோபாரதி அவர் வேலை செய்து கொண்டிருந்த இடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கிக் கடந்த 11.4.01 வியாழனன்று அகலா மரணடைந்துள்ளார். அவர் இறந்த பின் அவரின் கண்கள், கண்தானம் செய்யப்பட்டுள்ளன.

அன்புடன்

மும்பை–71. **தூரிகை ஆசிரியர் குழு**

தூரிகை ஆசிரியர் குழுவிற்கும் மற்றும் அமரர் மனோபாரதி அவர்களின் குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். *– ஆசிரியர், பழங்காசு.*

❀ ❀ ❀

பேரன்புடையீர்!

வணங்கி மகிழ்கிறேன். 'பழங்காசு' வித்தியாசமான காலாண்டிதழ் கிடைத்தது. வரலாறு படிக்கும் வாசகர்கள் அலுப்பேற்படும் என்பார்கள். அது பொய் எனச் சொல்லும்விதத்தில் 'பழங்காசு' வடிவமைக்கப்பட்டிருக்கிறது. ஆமாம், புதிய யுக்தியை நடையில் காட்டி எழுத்துக்கள் மீது ஒரு ஆர்வம்வர வாசிக்க எளிமையாயிருக்கிறது. 'முதலிதழ்' எனது ஆய்வு நூலில் இடம்பெறவிருக்கிறது. தொய்வில்லாமல் இதழ் வர வாழ்த்துகிறேன். நன்றி!

என்றும் தொடர்பில்

நடுவிக்கோட்டை (அ.நி.), பட்டுக்கோட்டை (வ) **நவீன்குமார்,** சிற்றிதழ் ஆய்வாளர்

❀ ❀ ❀

ஆசிரியர் அவர்களுக்கு

தங்களின் விடா முயற்சியால் வெளியிடப்பட்ட 'பழங்காசு' இதழ்கள் கிடைக்கப்பெற்றன. மிக்க மகிழ்வுடன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தங்களின் அயராத உழைப்பு வரலாற்றுலகில் வீணாகாது என்பதற்கு நற்சான்றாய், பல அறிஞர்கள் இடம் பெற்றுள்ளதையே காண்கின்றேன். வரலாற்றுச் சிறப்புமிக்க செய்திகள் ஆதாரங்களுடன் வெளிவந்துள்ளன.

பழமை மீண்டும் மீண்டும் காலப்போக்கில் புதுமை பெறுகின்றது. காலைக் கதிரவன், மதியச் சூரியன், மாலை ஆதவன் போல, காபியும், டீயும், நீராகாரத்திற்கும், மோருக்கும், மூலிகைச் சாறு–களுக்கும் மாறுகிறது. புதிய வீரிய வித்துக்கள், நோய், பூச்சி தடுப்பு முறைகள், நவீன, நஞ்சுகளை விடுத்து இயற்கை முறையீடு மாறுகின்றன. பழமைப் பெருமைகாண 'பழங்காசு' புதிய விழிப்–புணர்வை ஊட்டும். உணரும் காலம் விரைந்துவரும். இச்சுழற்சி இயற்கையின் கூட்டமைப்பாகும்.

அன்புடன்

**இரா. திருமலைநம்பி**
வரலாற்றாய்வாளர்

திருமலைராயசமுத்திரம், கைக்குறிச்சி (அ.நி.)
புதுக்கோட்டை–622 303.

ஆசிரியர் அவர்களுக்கு

முதல் இரண்டு இதழ்கள் கிடைத்தன. நன்றாக இருக்கின்றன. உங்கள் முயற்சி பாராட்டுக்குரியது. ஆனால் இரண்டாவது இதழில் 5 பக்கங்கள் மட்டுமே நாணயங்களைப் பற்றி இருக்கின்றன. மற்றவை ஆன்மீகத்தைப் பற்றியும் கோவில்களைப் பற்றியுமே இருக்கிறது. ஆன்மீகம் வேண்டாம் என்று கூறமாட்டேன். அதற்கென்றே புத்தகங்கள் வருகின்றன. நான் குறை கூறுவதாக எண்ண வேண்டாம். உங்கள் முயற்சியை பாராட்டவே செய்கிறேன். அடுத்த இதழிலிருந்து அதிகமான பக்கங்கள் நாணயங்களைப் பற்றி வெளியிடவும்.

அன்பன்

**எம். நித்தியானந்தம்**

தலைவர், கோயம்புத்தூர் அஞ்சலியல் கழகம்.

384–டி, வைசியாள் வீதி,
கோயம்புத்தூர் – 641 001.

❁ ❁ ❁

பெருமதிப்பிற்குரிய நண்பர் சீனிவாசன் அவர்களுக்கு

இரண்டாவது இதழும் அருமையாக வந்துள்ளது. கட்டுரைகள் அரிதின் முயன்ற அறிவின் வெளிப்பாடுகள் – வாழ்த்துக்கள்.

'எல்லாம் இருக்கிறது' என்பதும் 'ஒன்றுக்கும் உதவாது' என்பதுமான இருவேறுமுனை ஆய்வுகளால் தமிழ்ச் சமூகத்திற்கு என்ன பயன்?

அதோடு விவாதப்பொருள் ஒன்றை முன்வைத்து ஆய்வாளர் பலரும் அறிவால் மோதிக்கொள்ளும் வாய்ப்புகளும் வாசிப்பார்க்கு ஊக்கம்தரும்.

அன்புடன்

**முத்துநிலவன்**

எழுச்சியகம், 96, சீனிவாசகநகர் 3ம் வீதி,
புதுக்கோட்டை–622 004.

❁ ❁ ❁

அன்புடையீர்!

'பழங்காசு இதழ் எண். 2 வந்தது. அதிகப் பக்கங்களில் – அழகிய வடிவமைப்பிலான அட்டை. கனமான விசயங்களுடன் மிளிர்ந்தது. பொதுவாக வரலாறு என்றாலே வறட்டுத்தனமான பழைய விசயங்களை திருப்பத் திரும்ப படிக்கத் தருவது என்கிற மனப்பான்மை நிறையப்பேரிடம் உண்டு. வரலாறு என்பது வெறும் கலை சம்பந்தப்பட்டது அன்று. அதனோடு தொடர்புடைய மொழி, பண்பாடு, நாகரீக வளர்ச்சி, மனிதமனக் கட்டுமான அடுக்குகளின் பிரமிக்கத்தக்க பரிணாம வளர்ச்சி என்பது மட்டுமல்லாமல் இந்த அதிவேக உலகியலின் பரிணாம வளர்ச்சிக்கு வித்தூன்றிக் கொண்டிருப்பது விஞ்ஞானம் என்பதும் வரலாற்றின் இணைவாகிறது. கலையும், விஞ்ஞானமும் வரலாறாகின்றன என்பதை வரலாற்று அறிஞர்களும், ஏனையோரும் அறியாததல்ல.

இப்படிப் பாடத்திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளவற்றைப் படித்துக்கொண்டும், செய்தியாக வருபவனவற்றை அறிந்துகொண்டும் இருப்பவர்களுக்குப் 'பழங்காசு' சிற்றிதழ் புதிய விசயங்களை அறிந்துகொள்ளவும், உள்மனத் தேடலுக்கு நூறு சதவிகிதம் ஒத்துழைப்பும் தருகிறது. விஞ்ஞானப் பூர்வ உண்மைகளோடு வரலாறு பேசுகிறது. நாணயங்கள், சிற்பங்கள், கல்வெட்டுக்கள் இப்படி பண்டைய நாகரிகங்களின் சான்றுகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் பிரமிப்பை உண்டுபண்ணுகின்றன. சில, பல நூற்றாண்டுகளுக்கு முன்னே நடந்த ஆட்சி, மன்னர்கள் மற்றும் மக்களின் தகவல்களை உள்ளடக்கிய தகவல் சாதனங்களாக நாணயங்களும், சிற்பங்களும், கல்வெட்டுக் களும் இருக்கின்றன என்பதைப் புரிந்துகொண்ட 'பழங்காசு' ஒரு அறிவுக்களஞ்சியமாக – தகவல் பெட்டகமாக விளங்குகிறது.

அசாதாரண துணிச்சலுடன் 'பழங்காசு' இதழை கொண்டு வருகிறீர்கள். ஒவ்வொரு இதழும் ஒரு வரலாற்றுத் தொகுப்பாக – எமைப் பாதுகாத்து வைக்கத் தூண்டுகிறது. சிற்றிதழ்கள் சரியான பாதை நோக்கிச் செல்கின்றன என்பதற்குப் 'பழங்காசு' இதழும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகிறது.

இதழாள சகாக்களின் அற்புதமான முயற்சிகளுக்குப் பாராட்டுக்களும்.. வாழ்த்துகளும். நன்றி

வாசமுடன்

**வதிலை பிரபா**

மாநில பொதுச் செயலாளர்,
தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம், வத்தலக்குண்டு.

## வரலாற்றுத் தேடல் - ஒரு மீள்பார்வை ...

அன்புடையீர்! வணக்கம்.

'பழங்காசு' இதழ்கள் கிடைத்தன. மகிழ்ச்சி. இதழில் காணப்படும் ஆய்வுக்கட்டுரைகளும் இன்னபிற படைப்புகளும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. வாழ்த்துகள்... இவ்விதழ் காலத்தின் தேவையாக உருவெடுத்துள்ளது. தமிழர்களின் கடந்தகால வாழ்வியல் கோட்பாட்டினை வரையறுத்துக் கூறுவதாக உள்ளது. தமிழன் தன்னைத்தானே மீட்டெடுத்துக் கொள்ள இதுப்போன்ற இதழ்கள் பரவலாக வெளிவர வேண்டும்.

முதல் இதழில் காணப்படும் வாழ்த்துரைகளில் பெரியவர் இளங்குமரனார் அவர்களின் கருத்து எண்ணத்தில் கொள்வதாக அமைந்துள்ளது. பிச்சைக்காரர் அமரர் முத்து அவர்களின் தொண்டு நமக்கொரு பாடம். அண்ணாரைப் பற்றிய செய்தி காலத்தினால் நாம் அவருக்கு செய்யும் மரியாதையாகும்.

பழங்காசு இதழ் மேலும் மெருகெய்திட ஒரு கருத்து. தமிழர் வாழ்வும் வரலாறும் தமிழகத்தோடு முடிவுற்றதல்ல. பல நாடுகளில் தமிழர்களின் தாக்கம் இருந்ததாக – இருப்பதாக அறிகின்றோம். தமிழர்கள் பலம்பெயர்ந்த நாடுகளில் அவர்கள் தங்களது மரபுகளை மறந்திடாமல் வாழ்கின்றனர் என்பதைக் கருத்தில் கொண்டு, அந்தந்த நாடுகளில் வாழும் வரலாற்று அறிஞர்களின் துணையை நாடவும். மலேசியாவில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சில அறிஞர்கள் உள்ளனர். அவர்களின் தொடர்பு முகவரி தருகின்றேன்.

இதழ் பற்றி இங்குள்ள நண்பர்களிடமும் பிற இதழாளர்களிடமும் கூறியுள்ளேன். சில இதழ்கள் பழங்காசு பற்றிய குறிப்பை வெளியிடும். இவ்விதழ்களை பின்னர் அனுப்பிடுவேன்.

நன்றி. வணக்கம்.

அன்புடன்
**அருண்**

36, Jalan Batu Arang, 4200 Pandamaran
Klang Selangor, Malaysia.

## கட்டுரையாளர்கள்

1. ஆசான் புலவர் ஐ. இராமசாமி
இக்கரை போளுவாம்பட்டி
கோவை மாவட்டம்–641 109.

2. க.ஆ. திருஞானசம்பந்தம், M.A., M.Phil.,
இயக்குனர்
கொங்கு நாணயவியல் ஆய்வு மையம்
87, சின்ன மாரியம்மன் கோவில் தெரு
ஈரோடு – 638 003.

3. நிசாதுதீன் அகமது, எம். வீரமணி
தென்னகப் பண்பாட்டு ஆய்வுக் கழகம்
1, சின்னசாமி ஐயர் தெரு,
கிருஷ்ணகிரி–635 002.

4. நாக. கணேசன்
(தொல்லியல் துறை, கருவூர்)
கல்யாணசுந்தரம் தெரு
ஆமூர் அஞ்சல், முசிறி வட்டம்
திருச்சிராப்பள்ளி மாவட்டம் – 621 221.

5. கலாநிதி பரமு. புஷ்பரட்ணம்
முதுநிலை விரிவுரையாளர்
வரலாற்றுத் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

6. ச. கிருஷ்ணமூர்த்தி
தொல்லியல் அலுவலர்,
அரசு தொல்லியல் துறை, சிதம்பரம்–608 001.

7. ப. சீனிவாசன்
1/385, சீதக்காதி தெரு, காட்டூர் (தெ)
திருச்சிராப்பள்ளி – 620 019.

8. Er. லெ. சுபாஷ் சந்திரபோஸ்
நிறுவனர், பழந்தமிழர் வரலாற்றுப் பேரவை
43-B, புதுரெட்டித் தெரு, பீமநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 001.

9. இரா. திருமலைநம்பி, ஆணையர் (ஓய்வு)
திருமலைராயசமுத்திரம்,
கைக்குறிச்சி (அ.நி)
புதுக்கோட்டை–622 303.

10. முனைவர் பே.க. வேலாயுதம்
தலைவர், தமிழ்க்கோட்டம்
38–1, ஆசிரியர் குடியிருப்பு
மணிப்பள்ளம் சாலை
புதுக்கோட்டை – 622 001.

11. கி. ஸ்ரீதரன்
பதிவு அலுவலர்,
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை,
14-D, அனீபா காலனி, திருச்சிராப்பள்ளி–20.

12. ஆர். பூங்குன்றன்
காப்பாட்சியர், அருங்காட்சியகம், அரசு
தொல்லியல் துறை, கோயமுத்தூர்.

13. முனைவர் டாக்டர் இரா. கலைக்கோவன்
M.B.B.S., D.O., M.A., M.A., Ph.D.,
48, புத்தூர் நெடுஞ்சாலை
திருச்சிராப்பள்ளி – 620 017.

14. ஸ்தபதி வே. இராமன், D.S.A.,
38/5, புதிய சுற்றுலா மாளிகைக் குடியிருப்பு
திருச்சிராப்பள்ளி – 620 020.

## புரவலர்கள்

திரு. ஏ.எஸ். நாகேந்திரன்,
பெங்களூர்–52.

திரு. ஏ.எஸ். லோகேஸ்வரன்,
பெங்களூர்–52.

திரு. சாலமன் பாப்பையா
மதுரை–16.

திருமதி. மு. ஜெயந்தி
நெய்வேலி–3.

திரு. ஜி. முத்துசாமி
சென்னை–44.

திரு. லே. சுபாஸ் சந்திரபோஸ்
திருச்சிராப்பள்ளி–1.

திரு. பி. ஆல்பர்ட் ராஸ்
திருச்சிராப்பள்ளி–13.

திரு. இரா. தமிழாதன், கூடலூர்.

திரு. எப். அந்தோணிராஜ்,
திருச்சிராப்பள்ளி–19.

பேரா. ச. மெய்யப்பன்
மெய்யப்பன் தமிழ் ஆய்வகம், சிதம்பரம்–1.

திரு. கே.ஜி. முரளிதரன்
திருச்சிராப்பள்ளி – 20.

திரு. மோதி. எஸ். இராஜகோபால்
திருச்சிராப்பள்ளி – 8.

## வாழ்நாள் நன்கொடையாளர்கள்

திரு. இராஜேந்திரதேவன்
திருச்சிராப்பள்ளி–3.

திரு. சி.எம். சுப்ரமணியன்
திருச்சிராப்பள்ளி–6.

திரு. டி. சிதம்பரராஜன்
திருச்சிராப்பள்ளி–26.

திரு. கே.எச் தாசரதி
திருச்சிராப்பள்ளி–3.

பி.எஸ். ஜீஹைனாபைசல்,
அடியக்கமங்கலம், திருவாரூர் மாவட்டம்.

திரு. ஏ. ரெங்கராஜன்
திருச்சிராப்பள்ளி–20.

பேரா. பரமு. புஷ்பரட்ணம்
யாழ்ப்பாணம், இலங்கை.

திரு. என். கஸ்தூரிரெங்கன்
திருவரங்கம், திருச்சிராப்பள்ளி–6.

திரு. வி. பாரதமணி
திருச்சிராப்பள்ளி–14.

திரு. பி. தமிழகன்
திருச்சிராப்பள்ளி–23.

திரு. சி. ராஜ்குமார்
திருச்சிராப்பள்ளி–3.

திரு. ஏ. விக்டர்
திருச்சிராப்பள்ளி–14.

திரு. என். கலியமூர்த்தி
திருச்சிராப்பள்ளி–14.

திரு. டி.ஆர். சிவக்குமாரன்
திருச்சிராப்பள்ளி – 8.

திரு. எம். முகமது பரகத் அலி
திருச்சிராப்பள்ளி – 21.

திரு. என். கே. பாரதி ஜீவா
திருச்சிராப்பள்ளி – 14.

த.சி.ச. உறுப்பிதழ் : 264/2001 TASNA Regd. No. 264/2001
கட்டுரைகள் அனைத்தும் அவற்றின் படைப்பாளர்களுக்கே உரிமையுடையவை.

பழங்காசு மின்னஞ்சல் (E-mail) : pazhangasu@usa.net
pazhangasu@yahoo.com

ஓரிதழ் நன்கொடை : உரூ. 15/- (தனிச்சுற்றுக்கு மட்டும்)





மன்னர் காலம் முதல் 1947-ம் ஆண்டு ஆகஸ்டு விடுதலை நாள் வரை இடைப்பட்ட காலத்தின் முக்கிய நிகழ்வுகளைப் படம்பிடித்துக் காட்டும் விடுதலைப் போராட்டக் கலைக் களஞ்சியம்.

300-க்கும் மேற்பட்ட அரிய புகைப்படங்கள் அடங்கிய நூல். இரண்டு பாகங்-களும் சேர்த்து மொத்தம் 1,160 பக்கங்கள் கொண்டதாகும்.

உருவத்திலும், உள்ளடக்கத்திலும் மிகச் சிறப்பாகத் திகழ வேண்டும் என்பதற்காகத் தனிக் கவனம் செலுத்தப்பட்டு உருவாக்கப்பட்ட தரமான நூல்.

**விலை - உருபா. 600/-**

வெளியீடு

**நிவேதிதா பதிப்பகம்,**

78, தெற்குவீதி, மாணிக்கம் பாளையம்,
வீரப்பன் சத்திரம் (அஞ்சல்), ஈரோடு - 638 004.
தொலைபேசி : 0424-260186.